விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 தை 18 புதன்கிழமை (31.01.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 043




## தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரான
# றட்ணஜீவன் கூல் தொடர்பில் விசாரணை செய்க

## மல்லாகம் நீதவான் நீதிமன்றம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு பணிப்புரை

(யாழ்ப்பாணம்)

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரான றட்ணஜீவன் கூல் ஒரு கட்சிசார்பாக செயற்படுவதாகவும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸும் நீதிமன்றமும் பொலிஸாரும் உடன்பாட்டுடன் இயங்குகின்றனர் (Bigdeal) என்ற பொருள்பட பத்திரிகையில் கட்டுரை எழுதியமை தொடர்பாகவும் விசாரணை செய்ய வேண்டும் என மல்லாகம் நீதவான் நீதிமன்றம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு பணிப்புரை பிறப்பித்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## வட்டுக்கோட்டை பகுதியில் உள்ள
# வயற்காணி ஒன்றிலிருந்து பெருமளவான ஆயுதங்கள் மீட்பு



23

## தேர்தல் தினத்தை முன்னிட்டு
# பிணைமுறி தொடர்பில் 6ஆம் திகதி விவாதம்

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய மத்திய வங்கி பிணைமுறி மோசடி மற்றும் பாரிய நிதி மோசடிகள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகள் தொடர்பான விவாதம் 6 ஆம் திகதி 23

## எல்பிட்டிய பிரதேச சபைக்கு
# தேர்தலை நடத்துவதற்கு இடைக்காலத்தடை

(கொழும்பு)

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தலை நடத்துவதற்கு உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது. 24

## வவுனியாவில் நடைபெற்ற கொலை தொடர்பில்
# 27 வயதுடைய இளைஞனுக்கு மரண தண்டனை வழங்கி தீர்ப்பு

(குருமன்காடு)

வவுனியாவில் இடம்பெற்ற கொலைச்சம்பவம் தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றம் இளைஞனொருவனுக்கு மரண தண்டனை விதித்துள்ளது. வவுனியா - மகாறம்பைக்குளம் பகுதியில் 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பிலேயே 27 வயது இளைஞனுக்கு இத் 23

## பாரவூர்தியிலிருந்து
# தடக்கி விழுந்ததில் குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

பாரவூர்தியில் இருந்து தடக்கி விழுந்ததில் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் இரண்டு நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி யாழ் 23

அன்புடன் வரவேற்கின்றோம்




- சுதந்திரமான மகிழ்ச்சியான அச்சமின்றிய சூழலை உருவாக்கியவர்.
- வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் பல திட்டங்களை அமுல்படுத்தி இளைஞர், யுவதிகளின் வாழ்வை மிளிரச் செய்தவர்.
- நவீனமயப்படுத்தப்பட்ட பெரும் சாலைகளை அமைத்தவர்.
- கே.கே.எஸ் இல் இருந்து வவுனியா வரை புகையிரத பாதையை அமைத்தவர்.
- சொல்வதை செய்பவர் செய்வதை சொல்பவர்.
- இன, மத பேதமின்றி நாட்டு மக்கள் மீது அதீத அக்கறை கொண்ட எமது மகிந்த ராஜபக்ஷ மக்கள் நலத்திட்டங்கள் பலவோடு காத்திருக்கிறார். உங்கள் வாழ்வை மேலும் பிரகாசிக்க வைக்க.

எமது நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு
மகிந்த ராஜபக்ஷ
தலைமையில்

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி
யாழ். மாவட்டம்
(174)

## சிறுமியை வன்புணர்ந்தவருக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனை
## வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(வவுனியா)

16வயதிற்கு குறைந்த பெண்பிள்ளையை பாலியல் வன்புணர்வு செய்த குற்றத்திற்காக 30வயதான ஈஸ்வரிபுரம் பகுதியை சேர்ந்த நபருக்கு நேற்று முன்தினம் (29ஆம் திகதி முதலாம் மாதம் 2018ஆம் ஆண்டு) 10 வருட கடூழிய சிறைத்தண்டனையை வழங்கி வவுனியா மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

2005ஆம் ஆண்டில் வவுனியா பூந்தோட்டம் முகாமில் நபர் ஒருவர் தனது 23

## 150 ஆண்டுகளுக்கு பின் இன்று அபூர்வ சந்திர கிரகணம்

(கொழும்பு)

இன்றைய தினம் ஜனவரி 31 ஆம் திகதி சந்திர கிரகணம் நிகழவுள்ளது. இது 150 ஆண்டுகளுக்குப் பின்னர் வானத்தில் நிகழ உள்ள அபூர்வ நிகழ்வாகும்.

இன்றைய தினம் மாலை 6.22 முதல் இரவு 8.42 மணி வரையிலான முழு சந்திர கிரகண வேளை 23

# எனக்கு எதிராக ஆயுதம் ஏந்தினாலும் பிரபாகரனும் எமது நாட்டு பிரஜையே
## முன்னாள் ஜனாதிபதி மகிந்த



(கொழும்பு)

ஆயுதம் ஏந்தி போராடிய அமைப்பாக இருந்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தலைவர் பிரபாகரனும் எமது நாட்டு பிரஜைகளே என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக் காட்சி ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நேரடி விவாத நிகழ்ச்சியொன்றில் 23

நான் என்னுடைய குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களை அவர்களுடைய விருப்பத்துக்கு எதிராக வாக்களிக்கும்படி வற்புறுத்தவோ மிரட்டவோ மாட்டேன்.

எதிர்வரும் உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலில் பெண்களைத் தேர்ந்தெடுப்போம்

(இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரவி கருணாநாயக்கவின் பதவி பறிப்பு?

(கொழும்பு) முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் துணைத் தலைவர் பதவியையும் இழக்க நேரிடும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டணி கட்சிகளின் தலைவர்களுடன் நடத்திய சந்திப்பின் போது பிரதமரும் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் நியமிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் குழுவும், ரவி கருணா நாயக்கவை கட்சி பதவியிலிருந்து நீக்குமாறு பரிந்துரை செய்துள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது. (ம)


எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress
(சி-1445)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(சி-1443)

அண்ணா வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
EXPRESS Courier Services
அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மீசாலை
முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை
(C-1444)

ஓம் சாயிராம்
நல்லூரில் இயங்கும் ஸ்ரீ சாயி இல்லத்துக்கு அங்கேயே தங்கி இருந்து நாளாந்தக் கருமங்களைச் செய்வதற்குப் பொறுப்புக்களற்ற ஆண் மகன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (பெற்றோர்களை இழந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்:
077 405 2257, 077 910 4771
(C-1429)

மனோதத்துவ வைத்தியம்
மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)
Dr.P.ஆறுமுகம்
T.P :- 0777 569 205
28.01.2018 முதல் 08.02.2018 வரை 12 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=



மீண்டும் யாழில்
ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தை கிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.
தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.
ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய் களுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை.
இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற
தொடர்பு கொண்டு வரவை உறுதிப்படுத்துங்கள்
இவை அனைத்துக்கும் மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.
இப்போது நாம் புதிய முகவரியில்
விதுனா லொச்
ஜும்மா பள்ளிவாசல் பின் பக்கம் யாழ்ப்பாணம்.
(அருமை உணவகத்துக்கு அருகில்) தொ.பே: 021 722 3409
(சி-1439)

கார் சாரதி தேவை
35 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட, நன்கு அனுபவமுள்ள கார்ச் சாரதி - Call Taxi Companyக்கு தேவை. சிங்களம், ஆங்கிலம் ஓரளவு பேசத் தெரிந்தவர்களாக இருத்தல் வேண்டும்.
Mobile No:
077 599 8255
(2181)

யாரிடம் பேசுவது?
யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?
எம்முடன் பேசுங்கள்.
கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்
"மதசார்பற்றது "ரகசியமானது " இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவுனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)
(C-1367)

கார், வான் வாடகைக்கு தேவை
கார்கள், வான்கள் மாதாந்த வாடகைக்கு தேவை
தொடர்பு: 0710404978
(2182)

யாழ் பாடியில்
தினமும் முற்பகல் 11 மணிமுதல்
ஒடியல் கூழ்
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800
(1423)

தவறவிடாதீர்கள்!!!
A/L எடுத்த மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு,யுவதிகளுக்கு, கனடா செல்ல விரும்புபவர்களுக்கு மற்றும் வெளிநாட்டுக்கு பொதிகள் அனுப்புபவர்களுக்கு ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.
STALL NO-279 / JANUARY 26,27,28
JAFFNA TRADE FAIR 2018
0768226240
(சி-1367)


# மரண அறிவித்தல்



## திருமதி புஸ்பராணி சிவஞானலிங்கம்

(Ex.Typing Teacher - North Ceylon, IIS)

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராணி சிவஞானலிங்கம் (29.01.2018) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அற்புதராஜா - சிவபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகளும், சிவப்பிரகாசம் - சிவபாக்கியம் தம்பதியினரின் மருமகளும், சிவஞானலிங்கம் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்) அவர்களின் அன்பு மனைவியும், சிவகசுல்யா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பழைய மாணவி -1994 பிரிவு), ரிஷிகரன் (யா/பரியோவான் கல்லூரி பழைய மாணவன்-1996 பிரிவு), கஜந்தன் (யா/பரியோவான் கல்லூரி பழைய மாணவன்-1997 பிரிவு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், உமாசங்கர், கரோலினி, அமலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சமி, சௌமியா, நிலாணி, ஒலிவியா, பேனாட், மிதுன் (யா/பரியோவன் கல்லூரி-தரம் 5), ப்ரனேஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஜீவராஜன், விஜியராஜன், அருள்ராஜன், ஜெயராஜன் (ஈசன்), விஜயகுமாரி (தர்சி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலாதேவி, காலஞ்சென்ற சிவநாதன் மற்றும் சிவலிங்கம், சிவயோகவதி, ஸ்ரீநடராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2018) வியாழக்கிழமை 158/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

158/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
சிவஞானலிங்கம் (கண்ணன்) - 0755682779,
கஜந்தன் (மகன்) - 0766385626

(2176)


# மரண அறிவித்தல்




## திருமதி சிவபாக்கியம் சிவராசா

காலையடி பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் நாரந்தனை, தாவடியை வதிவிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் சிவராசா நேற்று (29.01.2018) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா சிவராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி - பொன்னம்மா தம்பதியரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் மருமகளும் பாலசுப்ரமணியம், காலஞ்சென்ற திருஞானசம்பந்தர், சிவபாதசுந்தரம், காலஞ்சென்ற இராசரெட்ணம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் அமரர் சற்குணராசன், தற்பராதேவி (பிரான்ஸ்), சிறீதரன் (டென்மார்க்), ஜெகதீஸ்வரன் (U.K), ரவிச்சந்திரன் (U.K), உதயகுமாரன் (பிரான்ஸ்), சிவகுமாரன் (பிரான்ஸ்), சுரபாஸ்கரன் (ஆசிரியர்-யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), உமா (டென்மார்க்), ஜெகதீஸ்வரி (சின்னா-U.K), வத்சலா (பிரான்ஸ்), பிரசாந்தி (ஆசிரியை - யா/மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை), லலிதா (U.K) ஆகியோரின் அருமை மாமியாரும் காலஞ்சென்ற பராசக்தி, அரசரெட்ணம், இராசரெட்ணம், சத்தியபாமாதேவி, மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற கோணேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான சுந்தரம், தங்கரெட்ணம் ஆகியோரின் சகலியும் மௌனிகா, பிரதிகா, கபில்நாத், யசோநாத், கஜோநாத், யனேஷ், மதுரா, தனுநாத், தனுசன், சுவாதீகா, அகரன், அரன், அகானா, அஷ்வின் ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2018) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

75/8, வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு (துரை வீதி),
கொக்குவில்.

தகவல் : பிள்ளைகள்
சுரபாஸ்கரன் (மகன்)
0212053013

(2180)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றி நாணயங்கள் முடங்காது முழுமையாக சுற்றோட்டத்திலிருப்பதற்கு உதவக் கோரிக்கை

## இலங்கை மத்திய வங்கி அறிக்கை

பொதுமக்களால் பல்வேறு தருணங்களில் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்கவும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கிணங்கவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் இந்திரஜித்குமாரசுவாமி கடந்த வருட இறுதிப் பகுதியில் வடபகுதிக்கு வருகைதந்தமையைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளின் ஓர் அங்கமாகவும் வடமாகாணத்தில் நாணயக் குற்றிக்கான தட்டுப்பாட்டை இல்லாதொழிக்கும் நோக்கோடு இலங்கை மத்திய வங்கி மொத்தம் ரூ.20.6 மில்லியன் பெறுமதியான ரூ.10, ரூ.5, ரூ.2, ரூ.1 முகப் பெறுமதியுடைய 3.7 மில்லியன் எண்ணிக்கையான குற்றி நாணயங்களை வடமாகாணத்தில் உள்ள வணிக வங்கிகளுக்குமத்திய வங்கியின் வட பிராந்திய கிளிநொச்சி அலுவலகத்தினூடாக வழங்கியுள்ளது. மேலும், எதிர்காலத்தில் குற்றிநாணயங்களைவணிக வங்கிகள் தேவைக்கேற்றளவில் வடமாகாணத்திற்கு தருவிப்பதை இலங்கை மத்தியவங்கி கண்காணித்து ஏற்ற ஒழுங்குபடுத்தல்களையும் மேற்கொண்டு குற்றிநாணயங்களின் கிடைப்பனவை உறுதி செய்யும். பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் இக்குற்றி நாணயங்களை தங்களது தேவைக்கு அளவாகப் பெற்று உரிய முறையில் பயன்படுத்துவதோடு குற்றி நாணயங்கள் எவ்விடத்தும் முடங்காது முழுமையாக சுற்றோட்டத்திலிருப்பதற்கு உதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என இலங்கைமத்தியவங்கியின் பிராந்திய முகாமையாளர் பாசிவதீபன் அறிவித்துள்ளார். (இ-7)

# காலநிலையில் திடீர் மாற்றம்



(கொழும்பு)

இலங்கைக்கு அருகிலுள்ள வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள தாழமுக்கத்தையடுத்து நாடெங்கிலும் மழையுடன் கூடிய காலநிலை நிலவுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இலங்கையை அண்டியுள்ள வான் பரப்பு மேகமூட்டத்துடன் காணப்படுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. காலநிலை தொடர்பாக வளிமண்டலவி யல் திணைக்களம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நாட்டின் அநேகமான பிரதேசங்களில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். விசேடமாக கிழக்கு - ஊவா மாகாணங்களிலும், மாத்தளை - பொலநறுவை மாவட்டங்களிலும் ஏனைய சில இடங்களிலும் அடை மழை பெய்யலாம்.

நாட்டின் வடபாகத்திலும், அம்பாந்தோட்டை- மாத்தறை மாவட்டங்களிலும் மணித்தியாலத்திற்கு 40 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும்.

அத்துடன் நாட்டை சூழவுள்ள வான்பரப்பு மேக மூட்டத்துடன் காணப்படு மென வளி மண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

# அதிபர் மண்டியிட்ட விவகாரம்

## ஊவா மாகாண முதலமைச்சருக்கு மனிதவுரிமை ஆணைக்குழு அழைப்பு



(கொழும்பு)

பதுளை பாடசாலை பெண் அதிபரொருவரை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்காக ஊவா மாகாண முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்கவை நாளை முதலாம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் ஊவா மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சந்த்யா அம்பன்வல, மாகாண கல்விப் பணிப்பாளர் ரத்நாயக்க மற்றும் ஊவா மாகாண சபையின் இரு ஊழியர்கள் ஆகியோர் கடந்த 25 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் விசாரணை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சர்வதேச ஆயுதக் களைவு குறித்த மாநாட்டின் தலைமைத்துவம் முதன்முறையாக இலங்கைக்கு

(கொழும்பு)

சர்வதேச ஆயுதக் களைவு தொடர்பான மாநாட்டின் தலைமைத்துவம் நடப்பு ஆண்டில் முதல் தடவையாக இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச ஆயுதக் களைவு தொடர்பான மாநாடு ஜெனிவாவில் நடைபெற்று வருகின்றது. இந்த அமர்வின் ஆரம்பத்தில் அதன் தலைமைத்துவம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் கடந்த 2007 ஆம் ஆண்டிலேயே கடைசியாக இலங்கை இவ்வாறான நிகழ்வொன்றின் தலைமைத்துவத்தை வகித்திருந்தது.

இந்நிலையில், மாநாட்டின் ஆரம்ப நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க, சர்வதேச ரீதியில் ஆயுதக் குழுக்கள் போன்றே அரச சார்பற்ற அமைப்புக்களும் பயங்கரவாதத்தைப் போதிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார். (இ-7)

# கூட்டு எதிர்க்கட்சியினர் இணைந்தால் அமைச்சுப் பதவியைத் துறக்கத் தயார்

## சு.க.அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி வெளியிட்ட கருத்து சம்பந்தமாக அரசியல் மேடைகளில் தொடர்ந்தும் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாக இணைந்தால், அமைச்சர்கள் பதவிகளில் இருந்து விலக சுதந்திரக்கட்சியினர் தயார் என இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். மாத்தறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாக அமர்வோம் என்று கூறினால், எங்களால் நாளைக் காலை அரசாங்கம் ஒன்றை அமைக்க முடியும். அப்படியான நிலைமை ஏற்பட்டால், நாங்கள் நாளைய தினமே அமைச்சுப் பதவிகளில் இருந்து விலகி, அமைச்சரவையில் மாற்றம் செய்யுமாறு ஜனாதிபதியைக் கோருவோம்.

அரசாங்கத்தை அமைக்க வேண்டுமாயின் கூட்டு எதிர்க்கட்சியினர் எங்களுடன் இணையத் தயாராக வேண்டும். ஜனாதிபதியை பாதுகாக்கவே நாங்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றோம் என லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார். (இ-7)


# நேசமிகு தமிழ் பேசும் எமது மக்களுக்கு....

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் குறித்த எனது திடமான கருத்துக்களையும், திட்டங்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

நான் பதினைந்து வருடங்களுக்கு மேலான ஆயுத வழிமுறைப் போராட்டத்திலும், முப்பது வருடங்களுக்கு மேலான தேசிய அரசியல் வழிமுறைப் போராட்டத்திலும் முழுமையான அர்ப்பணிப்போடும், உண்மையான உழைப்போடும் இடையறாது ஈடுபட்டு வந்திருக்கின்றேன். எனது ஆயுத வழிமுறைப் போராட்ட காலத்தில் புலிகள் உட்பட அனைத்துப் போராட்ட இயக்கங்களுடனும் பொது இணக்கப்பாடு காணப்பட வேண்டுமென்பதே எனது நிலைப்பாடாக இருந்தது. ஆனாலும், அக்காலத்தில் எனது இயக்கத்திற்கு உள்ளிருந்தும்(ஈ.பி.ஆர்.எல்.எவ்). சக இயக்க தலைமைகளிடம் இருந்தும் உரிய ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. இதனால் விடுதலைப் போராட்ட இயக்கங்கள் திசைக்கொன்றாக சிதறி நின்றன.

இலக்கு ஒன்றாக இருப்பினும், போராட்ட வடிவமும், போராட்ட வழிமுறைகளும் வேறுபட்டன. அது துரதிர்ஸ்டமே. நான் அடைய முடியாத இலக்கு நோக்கி எமது மக்களை ஒருபோதும் வழிநடத்தியதில்லை. நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை எமது மக்களுக்கு ஒருபோதும் வழங்கியதும் இல்லை.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாகவும், அதற்கு பின்னரான சூழலில் நாடாளுமன்றத்தில் எமது அரசியல் பலத்தின் ஊடாகவும் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளையும், வாழ்வியல் உரிமைகளையும் வென்றெடுக்க முடியும் என்ற நம்பிக்கையில் உண்மையாகவே உழைத்து வருகின்றேன். எல்லாக் காலத்திலும் நான் மக்களோடு வாழ்ந்து வருகின்றேன். அதனால், எமது மக்களின் உணர்வுகளையும், தேவைகளையும் தெளிவாகத் தெரிந்து கொண்டிருக்கின்றேன்.

எனது ஆயுத வழிப்போராட்டத்தின் ஊடாகவும், தேசிய அரசியல் நீரோட்ட வழிமுறை ஊடாகவும் கிடைத்த அனுபவங்களில் இருந்தே, எமது மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் நடைமுறைச் சாத்தியமான வழிமுறையூடாக நம்பிக்கையோடு தீர்வு காண முயற்சித்து வருகின்றேன். எனது அரசியல் பலத்திற்கு ஏற்றவாறு தீர்வுகளை கண்டும் இருக்கின்றேன். இருந்தும், போதிய அரசியல் பலம் எம்மிடம் இல்லாததால் இன்னும் தீர்க்கவேண்டிய எமது மக்களின் பிரச்சினைகள் ஏராளம் எஞ்சியிருக்கின்றன. அதேவேளை, நிலையான அரசியல் தீர்வும் எமக்கு இதுவரை கிடைக்கவில்லை.

மக்கள் எந்தளவிற்கு என்னைப் பலப்படுத்தி, நான் முன்னெடுக்கும் வழிமுறையை பின்பற்றுகின்றார்களோ அந்தளவிற்கு பிரச்சினைகளை தீர்த்து, உரிமைகளைப் பெற்று, கௌரவமான, சமத்துவமான வாழ்வை நோக்கி நாம் முன்னேற முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. காலத்திற்குக் காலம் வாக்குகளை அபகரிப்பதற்காக, நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை கூறியும், தமது இயலாமையினாலும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விருப்பம் இன்றியும், அரசுகள் மீது மட்டுமே குறைகளை சுமத்தி, சுயலாப அரசியல் நடத்திவரும் தமிழ் தலைமைகள் போல் நானும் இருந்து விட முடியாது.

மக்கள் மத்தியில் வாழாதவர்களாகவும், கிடைக்கும் சந்தர்ப்பங்களை பயன்படுத்தாதவர்களாகவும், சந்தர்ப்பங்களை உருவாக்க விரும்பாதவர்களாகவும், அரசியல் அதிகாரங்களை மக்களின் நலனுக்காக வினைத்திறனோடு செயற்படுத்த இயலாதவர்களாகவும், தமிழர்கள் இரத்தமும், தசையுமாய் நடாத்திய உரிமைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தியவர்களாகவும், இன்று இணக்க அரசியலின் பெயரால் ஏமாற்று அரசியல் நடாத்தி கொண்டிருப்போருக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கும் நிலை இப்போது ஏற்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் வரவேற்கத்தக்கது. இந்த மாற்றத்திற்கு தலைமை ஏற்கும் தார்மீக பொறுப்பானது, இன்று என் மீதே சுமத்தப்பட்டுள்ளது. அதை நான் ஏற்கின்றேன். மாற்றுத் தலைமை என்பது இந்த மக்களோடு மக்களாக வாழாமல், மக்களுக்கு வெளியே இருந்து வருபவராகவோ, கடந்த காலத்தில் நாம் முன்னெடுத்த உரிமைக்கான போராட்டத்தை நேற்று வரை தூரத்தில் இருந்து வேடிக்கை பார்த்து, அதை தமது பிழைப்பிற்காக மாத்திரம் பயன்படுத்தி கொண்டவர்களாகவோ இருக்கமுடியாது.

மக்களோடு வாழ்ந்து, மக்கள் அனுபவித்த வலிகளிலும், துயரங்களிலும் பங்கெடுத்து, தாயக மண்ணின் தன்மையறிந்து, தேவையறிந்து செயற்படும் செயல் வீரரே மக்கள் தலைவராக திகழமுடியும். அன்புக்குரிய மக்களே!... கடந்த காலத்திலும் இது போன்று நிதர்சனமாக நான் முன்வைத்த கருத்துக்கள் உங்களை முழுமையாக வந்து அடையவில்லை. அதற்கு சில தடைகள் இருந்ததையும் நான் மறுக்கவில்லை. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லவையாக அமையட்டும். இனி சரியான பாதையில் பயணிக்க அணிதிரண்டு வருவீர்கள் என்றும், வீணைக்கு வாக்களித்து உங்களை நீங்களே பலப்படுத்துவீர்கள் என்றும் நம்புகின்றேன்.

ஆற்றல் மிகு எங்கள் வழியில் உங்கள் வாழ்விடங்களை
அபிவிருத்தியால் தூக்கி நிறுத்திட...
மாற்றத்தை நோக்கி செல்லும் ஏற்றதொரு வாய்ப்பாக
இத்தேர்தலை பயன்படுத்திட...

இன்றே நிமிர்ந்தெழுங்கள்!
சாதித்த நம் கரங்கள் சரித்திரம் படைக்கும் நாளை!
வீணைக்கு வாக்களித்து விடியலைக் காணுங்கள்!

மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!
எக்காலத்திலும் பிரிக்கப்பட முடியாத
வடக்கு கிழக்கு எங்கள் தாயக பூமி!....
ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சக வாழ்வு!




என்றும் மக்கள் சேவையிலுள்ள
டக்ளஸ் தேவானந்தா பா. உ
செயலாளர் நாயகம்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)

(சி-012)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்மன் 'சுப்பர்' சதம்

# இறுதியில் இந்தியா: மண்ணை கௌவியது பாகிஸ்தான்



ஜூனியர் உலக கிண்ணத் தொடரின் இறுதிக்கு இந்திய அணி 6ஆவது முறையாக முன்னேறியது. அரையிறுதியில் சுப்மன் கில் 'சுப்பர்' சதம் அடிக்க பாகிஸ்தானை 203 ஓட்டங்களால் ஊதித்தள்ளியது.

நியூசிலாந்தில் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கிண்ணத் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. கிறைஸ்ட்சேர்ச்சில் நடந்த இரண்டாவது அரையிறுதியில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

சுப்மன் சதம்

இந்திய அணிக்கு பிரித்வி ஷா, மன்ஜோத் சிறப்பான ஆரம்பம் வழங்கினர். முதல் விக்கெட்டுக்கு 89 ஓட்டங்கள் சேர்த்தபோது, பிரித்வி ஷா (41) ஆட்டமிழந்தார். மன்ஜோத் 47 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அர்ஷாத் 'வேகத்தில்' ஹார்விக் தேசாய் (20), ரியான் (2), அபிஷேக் (5) விரைவில் திரும்பினர். பின், இணைந்த சுப்மன் கில், அன்குல் ராய் ஜோடி அசத்தியது. அன்குல் 33 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். கம லேஷ் (1), ஷிவம் மாவி (10) நிலைக்கவில்லை. இருப்பினும், அபாரமாக விளையாடிய சுப்மன் கில், சதம் கடந்தார். இதன்மூலம், இம்முறை சதம் அடித்த முதல் இந்திய வீரரானார். 50 ஓவர்களில் இந்திய அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 272 ஓட்டங்கள் எடுத்தது. சுப்மன் கில் (102), இஷான் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இஷான் மிரட்டல்

பின், களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு இஷான் போரல் தொல்லை கொடுத்தார். இவரது வேகத்தில் மொஹமட் ஜாயத் (7), இம்ரான் ஷா (2), ஜார்யப் (1) அடுத்தடுத்து சிக்கினர். அமாத் 4 ஓட்டங்களில் திரும்பினார். இதனால், 12 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 28 ஓட்டங்கள் எடுத்து தடுமாறியது. இந்த நேரத்தில், 'சுழல்' வீரர்கள் எழுச்சி பெற்றனர். ஷிவா சிங் பந்தில் மொஹமட் தாகா (4) நடையைக் கட்டினார். அணித் தலைவர ஹசன் கான் (1) கைவிட்டார். அதிகபட்சமாக ரோகைல 18 ஓட்டங்கள் எடுத்தார்.

பாகிஸ்தான் 29.3 ஓவர்கள் வரையே தாக்குப் பிடித்து 69 ஓட்டங்களை மாத்திரமே எடுக்க முடிந்தது.

இது, 'ஜூனியர்' உலக கிண்ண அரங்கில் பாகிஸ்தான் அணியின் குறைந்தபட்ச ஓட்ட எண்ணிக்கையாக பதிவானது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் அதிகப்ட்சமாக இஷான் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஆட்ட நாயகன் விருதை சுப்மன் கில் வென்றார்.

ஆஸி.,யுடன் இறுதி

இதன்மூலம், இந்திய அணி இறுதிக்கு முன்னேறியது. வரும் 3ஆம் திகதி நடக்கவுள்ள இறுதியில் அவுஸ்திரேலியாவை எதிர் கொள்கிறது.

இரு அணிகளும் இதுவரை தலா 3 முறை கிண்ணம் வென்றுள்ளன.

இறுதியில் இந்தியா வென்றால், அதிக முறை (4) பட்டம் வென்று சாதனை படைக்கலாம்.


## தமிழ் அழகுச் சிகிச்சை நிபுணர்கள் சம்மேளனம்

இலங்கையில் இருக்கும் தமிழ் அழகுக்கலை (Beauticians) அழகுக் சிகிச்சை (Cosmetologists) நிபுணர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து இத்துறை சார்ந்த வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளும் நோக்கத்துடன் கிளிநொச்சியை தலைமையகமாகக் கொண்டு தமிழ் அழகுச் சிகிச்சை நிபுணர்கள் சம்மேளனம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் முதலாவது ஒன்றுகூடல் யாழ்ப்பாணத்தில் இன்று **31.01.2018** நடைபெறுகிறது.

காலம் : இன்று 31.01.2018
நேரம் : மாலை 3.00 - 7.00
இடம் : திண்ணை நட்சத்திர விடுதி

*அனைத்து நிபுணர்களையும் அன்போடு அழைக்கின்றோம்*

இவ்வண்ணம்
நிர்வாகம்
(தமிழ் அழகு சிகிச்சை நிபுணர்கள் சம்மேளனம்)

தொடர்புகளுக்கு
தலைவர்
க.சூரிய பிரதீபா (077 577 9793)
செயலாளர்
வி.தட்சா (077 338 3643)
(C-1446)

## பணிப்பெண் தேவை

வெள்ளவத்தையில் கௌரவமான சிறிய குடும்பமொன்றுடன் தங்கியிருந்து வேலை செய்ய, பணிப்பெண் ஒருவர் தேவை

தொலைபேசி (2178)
**077 052 7090**

## ENGLISH PERSONAL CLASSES

ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புக்கள்

அனுபவம்மிக்க ஆசிரியரினால் உங்கள் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். (2179)

T.P:077 658 9443 | Mr.K.சிவா

## வேலைவாய்ப்பு

தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிய பெண் ஊழியர்கள் தேவை. (2175)

தொடர்புகளுக்கு
**077 448 1790**

## பெண் விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் எமது புடைவை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள பெண் விற்பனையாளர் தேவை. நேரில் வரவும்

சென்னை பெசன் வேல்ட்
63, பெரிய கடை, யாழ்ப்பாணம். (2183)




திருமூலர் போற்றிய சிவபூமியில்

## காரைநகர் - வலந்தலை - மடத்துக்கரை

## திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மணிமண்டபம் சகித மஹா இராஜகோபுர கும்பாபிஷேகம்

தன்னுளும் ஆகத் தரணி முழுதும் கொண்டு
என்னுளும் ஆகி இடம்பெற நின்றவள்
மண்ணுளும் நீர். அனல். காலுளும் வானுளும்
கண்ணுளும் மெய்யுளும் காணலும் ஆமே *(திருமூலர் திருமந்திரம் 1351)*

எல்லா உலகங்களையும் கொண்ட சிவபூமியாகிய காரைநகர் ஈசான மூர்த்தி வடிவோடு எனக்குள்ளும் பெற்று விளங்கினாள். அப்பெருமாட்டியை மண்ணிலும் நீரிலும் ஒளியிலும் காற்றிலும் வானிலும் கண்ணின் கரு மணிப்பார்வையிலும் உடலிலும் காணலாம். யாவிலும் கலந்து நிற்பவளாகிய சக்தி உயிர்களுக்குச் செய்யும் உதவியை உணரமுடியும்.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பது உன்னை
என்றும் வணங்குவது உன் மலர்த்தாள் எழுதா மறையின்
ஒன்றும் அரும் பொருளே அருளே! உமையே இமயத்து
அன்றும் பிறந்தவளே! அழியா முத்தி ஆனந்தமே

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் உன்னையே நினைக்கின்றேன். எழுதா மறையான வேதங்களின் அரிய பொருளே, அருள்மயமானவளே ஒவ்வொரு இடங்களிலும் வெவ்வேறு வடிவமாகத் தோன்றி சிவனை அடைந்தவளே, இமயத்தில் பிறந்த உமாதேவியே, ஆன்மாக்களுக்கு அழியாத முத்தி இன்பமே, நாம் எப்பொழுதும் உன் மலரடிகளை கரம் கூப்பி சிரம் தாழ்த்தி வணங்குவோமாக.

*ஓம் சக்தி பராசக்தி*
*ஓம் சக்தி ஸ்ரீமுத்துமாரி அம்மா*

க.து.க.சிவபாலன்
காரைநகர் மாணிக்கவாசகர் மடலாயப் போசகர்
(C-1437)


## மரண அறிவித்தல்

பிறப்பு
14 - 01 - 1947



இறப்பு
30 - 01 - 2018

## திருமதி இராஜேஸ்வரி இராசநாயகம்

அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி இராசநாயகம் நேற்று (30.01.2018) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி - தையல்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் அமரர் ஞானப்பிரகாசம் இராசநாயகத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சண்முகசுந்தரம், நாகபூசணி, கனகாம்பிகை, கோபாலசாமி, புண்ணியமூர்த்தி, பேரின்பநாயகம் மற்றும் மகாலட்சுமியின் அன்புச் சகோதரியும் விக்கினேஸ்வரி, மங்களேஸ்வரி, செந்தூரன் (கணக்காளர் PVT), கைலேஸ்வரி, கிருபாகரன் (ADO யூனியன் அஷ்யூரன்ஸ் PLC சுன்னாகம் பிராந்திய கிளை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமரர் விக்கினேஸ்வரன், புவேந்திரன், கமலாதேவி, (DO, MOH Office சுன்னாகம்), புண்ணியமூர்த்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் திரிகுணா, திவ்விய வீணா, டினோஜினி, மதுசா, சுயன், ராகவி, கதிரொளி, கோபிஷா, சப்ஜிதா, அனோஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நர்ஷிகனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் யாவும் இன்று (31.01.2018) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.
(2171)

அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

தகவல்:-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AMAZON COLLEGE

294,2nd Floor, Galle Road, Colombo-4, Sri Lanka
0114- 386-126
info@amazoncollege.lk
oneyeardegree123@gmail.com
www.amazoncollege.lk
PARTNERS

## Institution of Professional Development for Teachers

Reg.No.ED/69/SL,International Academy of Education- IAE/1/CC261

thanapalanabi@gmail.com No.528, Palaly Road, Thirunelvelly, Jaffna. TP: 077 068 1958

### தேசம் தழுவிய கலாநிதிப்பட்ட ஆய்வுகள் மூலமான நிலையான அபிவிருத்தி நோக்கிய செயற்றிட்டம் - 2018-2020

கல்வியியல் துறையை மையமாக வைத்து அதனுடன் இணைந்த உளவியல், சமூகவியல், பொருளியல், அரசியல், வர்த்தகம், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், மொழியியல், அழகியல் (சங்கீதம், நடனம், சித்திரம், நாடகம்), சூழலியல், சுற்றுலாத்துறை, கைத்தொழில், வங்கியியல், நிர்வாகம், முகாமைத்துவம், மொழியியல், சமயம் ஆகிய தொழிற்றுறைகளில்

**கலாநிதிப்பட்டத்தை சர்வதேச பல்கலைக்கழகங்கள் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம் 2018-2020**

- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) அங்கீகாரம்
- சர்வதேச பல்கலைக்கழகங்களின் அமையம் (IAO) அங்கீகாரம்

UNIVERSITY OF THE VALLEY- COSTA RICA AMERICA
www:https//www universidadaccr
ALLIANCE INTERNATIONAL UNIVERSITY
htt//aiuglobal.com/degree-Programs-all

ஆகிய பல்கலைக்கழகங்களினூடாக தமிழ், ஆங்கில மொழி மூலம் இலங்கையர்களும் வெளிநாட்டவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

**தகைமைகள்**

I இரண்டாம் பட்டம் ஆய்வுடன் கூடியது அல்லது

II இரண்டாம் பட்டம் ஆய்வு இல்லாவிடின் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச உள்ளூர் பல்கலைக்கழக ஆய்வு முறையியல் சான்றிதழ் அல்லது எமது பல்கலைக்கழக ஆய்வு முறையியல் டிப்ளோமா பாடநெறியை நிறைவேற்ற வேண்டும் அல்லது

III விண்ணப்பதாரியின் வேண்டுதலுக்கமைய எமது பல்கலைக்கழக 'RPL' முறையில் கல்வியியல் பீட நியதிகள்- நிபந்தனைகளை நிறைவேற்றல்

IV கல்விப் பணிப்பாளர், அதிபர்கள், ஆசிரியர்களுக்கு கல்வி முதுமாணி (MED) பட்டம் போதுமானது.

**மேற்கொள்ளப்படும் கலாநிதிப்பட்ட ஆய்வுகள் சர்வதேச உள்ளூர் பல்கலைக் கழகங்களின் தர நிர்ணய முறைமைகளுக்கு அமைவாக இருப்பதுடன்**

I சமூகப்பயனுறுதி வாய்ந்ததாக பிரச்சினைகளுக்கான காரணங்கள் கண்டுபிடிப்புக்கள் மூலம் நிரூபிப்பவையாக, தீர்வுகளைச் சரியாக நடைமுறைப்படுத்தும் ஆலோசனைகள், கருத்திட்டங்களை, முன்மொழிவுகளை முன்வைப்பவையாக இருக்கும்.

II எமது மண்ணின் நிலையான அபிவிருத்தியை நோக்கிய பயணித்தலுக்கு வழிகாட்டும்.

III குறித்த நிறுவனங்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல், ஆலோசனை வழங்கள், குறித்த தேசிய-மாகாண-மாவட்ட அரச, அரசசார்பற்ற, தனியார் நிறுவனங்களின் ஆய்வு மூலம் பிரச்சினைகளைத் தீர்த்தல். விண்ணப்பதாரியின் ஆளுமையின் அடிப்படையில் சில நிறுவனங்களில் இருந்து புலமைப்பரிசில்கள் பெற வழிகாட்டப்படும்.

IV விண்ணப்பதாரி தான் கடமையாற்றும் அல்லது வேறு நிறுவனங்கள், பிரதேச அபிவிருத்தி தொடர்பாக கலாநிதிப்பட்ட ஆய்வை அந்தந்த நிறுவனங்கள் மற்றும் நன்கொடை யாளர்கள், பிரதேச அபிவிருத்திக்கு உதவுபவர்கள். வெளிநாடுகளில் உள்ளவர்கள் மூலம் புலமைப்பரிசில் பெற்று ஆய்வை மேற்கொள்ள ஆலோசனைகள் வழங்கப்படும். சட்டத்துறை நிபுணத்துவ ஆலோகர் மூலம் உரிய வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்படும்.

**சுயமாகத்தயாரிக்கப்பட்ட சுய விபரங்களுடன் கூடிய விண்ணப்பப்ப டிவத்தைத் தயாரித்து, உமது வாண்மைத்துவ தொழில்சார் தொடர்புடைய தற்காலிக ஆய்வுத் தலைப்பையும் இணைத்து 25.02.2018 ஆம் திகதிக்கு முன் கடித மூலமோ அல்லது E.mail மூலமோ பின்வரும் ஏதாவது ஒரு முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

**1.Director**
Amazon College
No 294, 2n Floor
Galle Road, Colombo-4,
Srilanka,
E.mail- ilhamcbs@g.mail.com

**2. Director,**
Institution of Professional
Development for Teachers.
No528, Palaly Road,
Thirunelvelly-Jaffna.
E.mail- Thanapalanabi@g.mail.com
T.P-077 068 1958

- எமது அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளை நாமே தீர்ப்போம்!
- எமது காலில் நாமே நிற்போம்! எமது தேவைகளுக்கான கண்டுபிடிப்புக்களை நாமே செய்வோம்!
- எமது தேசத்தை கல்வியியல் வர்த்தகம், அரசியல்,பண்பாட்டியல், விவசாயம் கைத்தொழிலியல், சுற்றுல-ாவியல் அடிப்படையில் ஆய்வு அபிவிருத்தி மூலம் கட்டியெழுப்புவோம்!

### தேசம் தழுவிய கலாநிதிப்பட்ட ஆய்வுகள் மூலமான நிலையான அபிவிருத்தி நோக்கிய செயற்றிட்டம்

சிரேஷ்ட நிபுணத்துவ ஆலோசகர் பேராசிரியர் சே.சந்திரசேகரன்



Senior International Consultant
(இலங்கை தேசிய கல்வி ஆணைக்குழுசிரேஷ்ட உறுப்பினர்)

செயற்றிட்ட ஸ்தாபகர்- தலைவர் சர்வதேச கலா நிதிப்பட்ட இணைப்பாளர் கலாநிதி பா.தனபாலன்



International Consultant
Education Specialist

செயற்றிட்ட முகாமைத்துவ நிபுணர் இகாம் மரிக்கார்



Director-Amazon College
College International Consultant




**"எமது தேச அபிவிருத்தி செயற்றிட்டத்தில் நீங்களும் பங்காளராகலாம்"**

**"விலகி நிற்பவர் வெல்வதுமில்லை, வெல்ல நினைப்பவர் விலகுவதுமில்லை"**

**"கல்விப்பணியே கடவுள் பணி"**

## AMAZON College & Institution Of Professional Development For Teachers

### செயற்றிட்ட மதிப்பீட்டாளர் அணி

பேராசிரியர் கலாநிதி மா.கருணாநிதி



Consultant

கலாநிதி த.கலாமணி



Consultant

கலாநிதி பா.தனபாலன்



Consultant

கலாநிதி ந.வி.மு.நவரத்தினம்



Consultant

கலாநிதி நி.நல்லையா



Consultant

கலாநிதி ச.நாகேந்திரன்



Consultant

கலாநிதி S. பத்மராஜா



Consultant

கலாநிதி B.றிஸ்கான்



Consultant

கலாநிதி W.K.D. கீர்த்திரட்ண



Consultant

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலிட்டி துறைமுகம் மீது அரசு கூடுதல் கவனம்

## நல்லிணக்க அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தகவல்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள மைலிட்டி மீன்பிடித் துறைமுகம் 1980களில் இந்நாட்டின் மீன்பிடித் தொழிலுக்கு பாரிய பங்களிப்பை வழங்கிய பிரதான துறைமுகமொன்றாகும் மோதல் நிலவிய காலப்பகுதியில் மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம் செயலிழந்திருந்தது.

மயிலிட்டி துறைமுகமானது பலாலி விமான நிலையம் மற்றும் பலாலி இராணுவ முகாம் ஆகியவற்றின் அண்மையில் அமைந்துள்ளதன் காரணமாக 1990 களில் இருந்து யுத்த சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்டிருந்தது.

குடாநாட்டில் பிரசித்தி பெற்ற மற்றும் செல்வாக்கு மிக்க மீன்பிடிக்கும் இடமாகவும் கருதப்பட்டுவந்த மயிலிட்டி துறைமுகம் மற்றும் 54 ஏக்கர் காணி கடந்த ஜுலை மாதம் யாழ்.மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மோதல் சூழ்நிலை காரணமாக துறைமுகத்தின் இறங்கு தளம், அலை தடுப்பு, இறங்குதுறை (ஜெட்டி) உட்பட துறைமுக படுக்கை, ஐஸ் களஞ்சியசாலை மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையம் என்பன உட்பட கரையோர வசதிகள் சிதைவடைந்துள்ளன.

மோதலுக்கு முன்னர் இத் துறைமுகம் தேசிய மீன் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை (தேசிய மீன்பிடித்துறையில் 1/3) நல்கியதுடன், 1500 குடும்பங்களின் வாழ்வாதாரமாகவும் விளங்கியது. இலங்கையின் பிரசித்தி பெற்ற மீன்பிடித்துறைமுகங்களுள் இரண்டாம் இடத்தை சுவீகரித்துக் கொண்ட மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் வடக்கு மாகாணத்தின் பொருளாதார ரீதியாக வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு மைல்கல்லாக கருதப்படுகின்றது என தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இம்மீன்பிடித் துறைமுகத்தை மறுசீரமைத்து, முழுமையாக செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.(அ) அலைத்தடுப்பு மறுசீரமைப்பு (ஆ) நுழைவு கால்வாய் உட்பட துறைமுகப்படுக்கையினை ஆழப்படுத்துதல்(இ) துறைமுக மேடைச் சுவர் மற்றும் வெளிச்சவீடு (ஈ) ஏல மண்டபம், வலை திருத்தல் மண்டபம், சனசமூக மண்டபம் மற்றும் வியாபார மண்டபம் உட்பட வேறு கரையோரத்தை அண்டிய பிரதேசத்தின் வசதிகளை மேம்படுத்தல் (உ) களஞ்சியப்படுத்தல் தாங்கியுடன் எரிபொருள் நிரப்பு நிலையம் மீளமைத்தல் (ஊ) நுழைவுப் பாதைகள்,பொது வசதிகள் மற்றும் பிற குறித்த வசதிகள் தொடர்பாக அரசாங்கத்தினால் பிரதான செயற்றிட்டம் ஒன்றை தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சுடன் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சும் ஒன்றுசேர்ந்து முன்னெடுக்கின்றன,

இச்செயற்றிட்டத்தில் (அ) எரிபொருள் நிரப்பு நிலைய வரத்தக செயற்பாட்டு அலுவல்கள் (ஆ) ஐஸ் களஞ்சியசாலையை தாபித்தல் மற்றும் செயற்படுத்தல் (இ) படகுகள் மற்றும் இயந்திரங்களை திருத்தும் வேலைத்தளம் (ஊ) மீன்களை பொதியிடல் மற்றும் ரின்களில் அடைக்கும் நிலையம் மற்றும் (எ) மீன்பிடி உபகரண வியாபார நிலையம் என்பனவும் உள்ளடக்கப்படுகின்றன.

இவை தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டு லங்கா ஹைட்ரோலிக் நிறுவனம் சாத்தியவள ஆய்வுகள் உள்ளடங்கலாக பிரதான செயற்றிட்டத்தினை கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சினதும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சினதும் பங்களிப்புடன் இத்திட்டம் முன்னெடுக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதிகள், கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சினதும் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சினதும் உயர் அதிகாரிகள், மாவட்ட செயலாளர், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் ஆகியோருக்கிடையே கலந்துரையாடல் இடம்பெற்று முன்னேற்ற மீளாய்வு செய்யப்பட்டு கருத்திட்டத்தினை துரிதகதியில் அமுல்படுத்துவதற்கு பணிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கேள்வி கோரல்கள் பெப்ரவரி மாதத்தில் இடம்பெறும். மேலும் இதற்கென வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகளில் 150 மில்லியன் ரூபா நிதியினை கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் முன்மொழியப்பட்டுள்ளது என சிவஞானசோதி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கஞ்சா வைத்திருந்த 3இளைஞர்கள் கைது

(கரணவாய்)

கஞ்சாவைத்திருந்தமூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 28ஆம் திகதி காலை புனித நகர்ப்பகுதியில் கஞ்சா விற்கப்படுவதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டை யடுத்து அங்கு சென்ற பொலிஸார் 88 கிராம் கஞ்சாவை வைத்திருந்த திருகோணமலையைச் சேர்ந்த இருவரையும் புனித நகரைச் சேர்ந்த ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

அவர்கள் மூவரும் 18, 25,28 வயதுடைய இளைஞர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

## மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை-நாரந்தனை வடக்கு கேணியடி ஸ்ரீ ஞான வைரவர் சுவாமி கோவில் புனர்வர்த்தன அஷ்டபந்தன ஏககுண்டபக்ஷ திருக்குட திரு மஞ்சன பெருஞ் சாந்தி மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் இன்று முற்பகல் 11.50 மணிமுதல் பிற்பகல்12.15 மணிவரை இடம் பெறும்.

தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் இடம் பெற்று எதிர்வரும் 11ஆம் திகதி (11.02.2018) ஞாயிற்றுக்கிழமை 108 சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (இ

## புதுமை மாதா ஆலய வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)

குருநகர் புதுமை மாதா ஆலய வருடாந்த திருவிழா நாளைமறுதினம் 2ஆம்திகதி காலை 6.30 மணியளவில் யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

தொடர்ந்து மாலை 4.30 மணியளவில் திருச்சொரூப பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெறும். (இ-10-106)

**மீனம்** அரைகுறையாக இருந்த பண களை மீதியும் தொடர்வீர்கள் பணத் தேவைகள் பூர்த்திய கும், யோசிக்காமல் செய் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும்.

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் களின் ஆதரவால் பெருமை கள் காண்பீர்கள், தொலைபே சித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**இடபம்** நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**மிதுனம்** உறவினர் வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொன்னான நாள்.

**கும்பம்** உள்ளொன்று வைத்து புற மொன்று பேசுபவர்களை இன ங்கண்டு கொள்வீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, தொழி லில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூராடம்,உத்திராடம் | | ராகு, சந் |
| சூரி, புத, கேது, சுக் | | | |
| சனி | செவ் | குரு | |

31.01.2018

தை 18, புதன்கிழமை

சூரிய உதயம் காலை 6.35 மணிவரை

பூரணை முன்னிரவு 8.10 மணிவரை

பூசம் மாலை 6.43 மணிவரை

சுபநேரம் 5.06-6.36 மணிவரை

இராகுகாலம் 12.36-2.06 மணிவரை

பூரணை விரதம்,தைப்பூசம்

வளவன்

**கடகம்** வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, சாமர்த்தியமாகப் பேசி காரியங்களை சாதிப்பீர்கள்.

**மகரம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், செய்தொழில் மேன்மையு ண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், ஆசைப்பட்ட பொருளை வாங்கி மகிழ்வீர்கள்.

**தனுசு** திட்டமிட்ட பணிகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பயணத்தால் மன உளைச்சல் ஏற்படும், வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்** வியக்கும் தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் எதிர் பார்த்தபடி வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடப்பர்.

**துலாம்** அருமையான நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்த வைப்பீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கன்னி** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், திடீர் பண வரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பவாரிதி இ.ஜெயராஜுக்கு வலம்புரி ஆசிரியரின் பதில்




30 வருடகால விடுதலைப் போராட்டம். அந்தப் போராட்டத்தில் இணைந்து தம் இன்னுயிரைத் தியாகம் செய்த பல்லாயிரக்கணக்கான நம் இளைஞர்-யுவதிகள், போரில் அகப்பட்டு உயிரிழந்து போனவர்கள் எனப் பெரியதொரு இழப்புப் பட்டியலை நாம் தயாரித்துவிட முடியும்.

அதிலும் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த மிகக் கொடிய யுத்தத்தில் உயிரிழந்த-காணாமல் போன நம் உறவுகள் ஒன்று இரண்டல்ல.

வன்னியில் நடந்த யுத்தம் தமிழின அழிப்பு என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டது.

சனல்-4 அதற்கான அத்தனை ஆதாரங்களையும் வெளிப்படுத்தியது.

ஒரு பெரும் யுத்தத்தின் மத்தியிலும் சனல்-4 கடவுள் போல, வன்னியில் நடந்த யுத்த மீறல்களை ஆவணப்படுத்தி அரங்கேற்றியது.

அந்த அரங்கேற்றத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கூடும் போதெல்லாம் சனல்-4 நிர்வாகம் செய்து எமக்குப் பேருதவி புரிந்தது.

வன்னியில் தமிழின அழிப்புச் செய்த இலங்கை ஆட்சியாளர்களுடன், தமிழர்கள் சேர்ந்து வாழ முடியாது என்றளவுக்கு உலக நாடுகளும் உடன்பட்டன.

வன்னி யுத்தத்திற்கு முதல் விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் பலமாக இருந்தனர்.

போர் முடிந்து விடுதலைப் புலிகள் தோற்ற பின்னர், எமக்கு ஏற்பட்ட இழப்புகளே எங்களுக்கான பலம் என்றாயிற்று.

ஆனால் எங்கள் தமிழ் அரசியல் தலைமை எங்களுக்கான பலத்தை சரியான முறையில் பிரயோகிக்கவில்லை என்பதே உண்மை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வீட்டிற்கு அனுப்பி வைத்தால் அது போதும் என்றளவிலேயே எங்கள் அரசியல் தலைவர்களின் சிந்தனை இருந்தது.

அதுமட்டுமல்ல காலாகாலமாக தமிழினத்தை ஏமாற்றி வரும் ஆட்சியாளர்களை நம்புகின்ற அளவில் நல்லாட்சிக்கு ஆதரவு கொடுப்பதிலும் நம் அரசியல் தலைவர்கள் பின்னிற்கவில்லை.

இந்த நாட்டில் எதைக் கொண்டு வந்தாலும் அது தமிழர்களை நசுக்குவதாகவும் சிங்களவர்களை உயர்த்துவதாகவும் இருக்க வேண்டும் என நினைக்கின்ற சிங்கள ஆட்சியாளர்கள்,

புலிகளின் தோல்விக்குப் பின்னர் எங்களோடு பேச்சு நடத்தி நமக்கு உரிமை தருவர் என்று எவர் நினைத்தாலும் அது மிகப் பெரும் அறியாமை என்பதே நம் முடிவு.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்க; சர்வதேச போர்க் குற்ற விசாரணை நடந்திருக்க; இன்று எங்களுக்கான உரிமை மிக இலகுவாக எங்கள் கைகளை வந்தடைந்திருக்கும்.

இதை நாம் கூறும் போது இது ஒரு கற்பனை வாதமேயன்றி வேறில்லை என்று கூட நீங்கள் மனதுக்குள் நினைக்கலாம். ஆனால் உண்மை அதுவன்று.

மரியாதைக்குரிய கம்பவாரிதி அவர்களே!

போருக்குப் பின்னர் எம் தமிழினத்தின் உரிமைகள் விடயத்தை சர்வதேசத்தின் பொறுப்பில் விட்டிருக்க வேண்டும். அவ்வாறு விட்டிருந்தால் அது போர்க்குற்ற விசாரணையாக எழுந்து இலங்கை அரசாங்கத்திற்குக் கடுமையான அழுத்தத்தைக் கொடுத்திருக்கும். அவ்வாறானதோர் சூழ்நிலையை ஏற்படுத்த எங்கள் புலம்பெயர் தமிழ் மக்கள் கடுமையாகப் பாடுபட்டனர்.

'ஆனால் இங்கிருக்கக்கூடிய தமிழ் அரசியல் தரப்புகள் ரோசம் கெட்டு, மானம் கெட்டு பண ஆசைப் பித்தில் விலைபோய், சர்வதேச விசாரணைகளை அப்படியே அமிழ்த்தி விட்டன.

இந்த உண்மைகளை நாம் சொல்லி நீங்கள் அறிய வேண்டியதில்லை.

அன்புக்குரிய கம்பவாரிதி அவர்களே!

ஒரு காலத்தில் தமிழர்கள் புத்திசாலிகள் என்று இந்த நாட்டின் சிங்கள, முஸ்லிம் மக்கள் கூறினர். இன்று அந்த நிலைமை இல்லாமல் போய்விட்டது.

இதற்கு புத்தியில்லாமல் போனமை காரணமன்று. மாறாக நேர்மையான அரசியல் தலைவர்கள் நம்மிடம் இல்லாமல் போனதே காரணம்.

இன்று இருக்கக்கூடிய நேர்மையான, நீதியான வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு தமிழரசுக்கட்சியின் அரசியல்வாதிகள் கொடுக்கின்ற இட்டல் இடைஞ்சல்கள் கொஞ்சமல்ல.

இது எதற்கானது?' என்று நாம் அனைவரும் ஒட்டுமொத்தமாக எழுந்து நின்று கேட்போமாக இருந்தால்;

நேர்மையான அரசில் தலைவர்கள் தமிழினத்திற்கு வந்துவிட்டால், தங்கள் அரசியல் வியாபாரம் பட்டுப் போய்விடும் என்பதுதான்.

அதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உறவினர் ஒருவர், முதலமைச்சர் விக்னேஸ்வரன் வெளிநாட்டில் பெற்ற பணத்திற்கு கணக்குக் காட்டவில்லை என ஊடகத்தில் கட்டுரை எழுதினார்.

எனினும் பின்னாளில் அந்தக் கட்டுரைக்காக அவர் பகிரங்க மன்னிப்புக் கேட்டிருந்தார்.

எதையும் நேர்கொண்டு நடுநிலையோடு பார்க்கின்ற கம்பவாரிதி அவர்களே!

அப்பழுக்கற்ற ஒருவரை எடுத்த எடுப்பில் ஒருவர் ஊழல்வாதி என்று குற்றஞ்சாட்டிக் கட்டுரை எழுதுகிறார் என்றால் அவரின் உள்ளார்ந்த நோக்கம் என்ன என்பதை எவரும் சர்வ சாதாரணமாக ஊகித்துக் கொள்வர்.

இவை ஒருபுறமிருக்க, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் யதார்த்தத்தோடு இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சியில் முன்னின்று உழைக்கின்றார் என்று நீங்கள் கூறியிருந்தீர்கள். அவ்வாறு அவர் யதார்த்தத்தோடு சிந்தித்துச் செயற்படுவதாக இருந்தால்,

சர்வதேச போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்துவதாகவே அவரின் முயற்சி இருந்திருக்க வேண்டும்.

இதை விடுத்து மகிந்தவை வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டு ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணிலுடன் சேர்ந்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்றால் அது நடக்கின்ற காரியமா? அதில் ஏதேனும் யதார்த்தம் உள்ளதா? என்பதை நீங்கள் தான் சொல்ல வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரியும் பிரதமர் ரணிலும் இனப்பிரச் சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என நினைக்கலாம். ஆனால் அதற்கு சிங்களப் பேரினவாதிகள் இடம் கொடுப்பார்களா? பெளத்த பீடங்கள் அதனை அங்கீகரிக்குமா? என்பது பற்றியெல்லாம் நாம் சீர்தூக்கிப் பார்த்தால்,

சர்வதேச போர்க்குற்ற விசாரணை ஊடாக இலங்கை அரசுக்கு சர்வதேச அழுத்தத்தை ஏற்படுத்தினால், இனப்பிரச்சினையைத் தீர்க்க சிங்களத் தரப்புகள் தாமாக முன்வருவர்.

இதைச் செய்யாமல் அரசுடன் இணைந்து சென்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்று கூறுவது சிங்கள ஆட்சியாளர்களுடன் தமிழ் அரசியல் தலைமையும் சேர்ந்து தமிழ் மக்களை ஏமாற்றுவதாகவே நிலைமை அமையும்.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்; திட்டங்கள், பிரச்சினைகள் குறித்து ஆராய்வு





(மன்னார்)

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர்கள் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ். தேசப்பிரியவின் ஏற்பாட்டில், இணைத்தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், அமைச்சர் றிஸாட் பதியுதீன் ஆகியோரின் தலைமையில் குறித்த கூட்டம் இடம் பெற்றது.

குறித்த கூட்டத்திற்கு இணைத் தலைவர்களில் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் சமூகமளிக்க வில்லை.

இதன் போது மன்னார் மாவட்டத்தின் கடந்த வருட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் மீள் ஆய்வு செய்யப்பட்டுள்ளதோடு, நிறைவடையாத வேலைத்திட்களை பூர்த்தி செய்வது குறித்தும் ஆராயப்பட்டது.

குறிப்பாக மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையில் வைத்திய நிபுணர்கள்,மகப்பேற்று வைத்திய நிபுணர் ஆகியோர் நிரந்தரமாக இல்லாத நிலை காணப்படுகின்றமை குறித்தும், நிரந்தரமாக அவர்களை நியமிப்பது தொடர் பிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

மேலும் நீர்ப்பாசனம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், மீன்பிடி, உள்ளிட்ட துறைகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளதோடு, மன்னார் மாவட்டத்தில் குறிப்பிட்ட சில இடங்களில் வனவள பாதுகாப்பு திணைக்களத்தினால் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. (2-281)

# வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு நோயாளர்கள் சிகிச்சையின்றி ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்



(குருமன்காடு)

சம்பள பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நேற்று மீண்டும் பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

நேற்று காலை 8 மணி முதல் நாட்டின் அனைத்து அரச வைத்தியசாலைக்ளிலும் இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

வவுனியா ,முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்ட பொது வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் காலை 8 மணி தொடக்கம் இன்று காலை 8மணிவரை 24 மணி நேர பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் வைத்தியர்கள் ஈடுபட்டுள்ளனர்.


இதன் காரணமாக மேற்படி மாவட்ட பொது வைத்திய சாலைகளில் வெளி நோயாளர் பிரிவு, கிளினிக் சேவைகள் முழுமையாக இயங்காமையினால் நோயாளர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

தூர இடங்களில் இருந்து வைத்திய சிகிச் சைக்கு வந்த நோயாளர்கள் பலரும் ஏமாற்றத்துடன் வீடு திரும்பிச் சென்றனர். (250-281)




# ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையை மீள்குடியேற்ற அமைச்சு கையேற்கும் சாத்தியம்

## முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு ஓட்டுத் தொழிற்சாலையை மீள்குடியேற்ற அமைச்சு கையேற்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த கால யுத்தம் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்கி ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலை உட்பட பாரிய மற்றும் சிறிய தொழிற்சாலைகள் செயலிழந்தன.

குறிப்பாக, முல்லைத்தீவு மாவட்டத்தில் 85 இற்கும் மேற்பட்டோருக்கு நேரடியான வேலைவாய்ப்புக்களை வழங்கிய ஒட்டுசுட்டான் பண்டாரவன்னியன் ஓட்டுத்தொழிற்சாலை கடந்த யுத்த காலத்தையடுத்து செயலிழந்துள்ளபோதும், யுத்தம் முடிவுக்கு வந்து மக்கள் மீள்குடியேறி எட்டு ஆண்டுகள் நிறைவடைகின்ற போதும் குறித்த தொழிற்சாலையானது மீள ஆரம்பிக்கப்படவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு இத்தொழிற்சாலை மீள ஆரம்பிக்கப்படாமையினால் இதனூடாக தொழில்வாய்ப்புக்களைப் பெற்ற குடும்பங்கள் தொழில் வாய்ப்பின்றி இருப்பதுடன், மாவட்டத்திற்கான வருமானமும் இல்லாது காணப்படுகின்றது.

குறித்த ஓட்டுத் தொழிற்சாலையை 2010ஆம் ஆண்டிற்குப்பின்னர் மீள இயங்க வைப்பதற்கு பாரம் பரிய சிறுகைத்தொழில் அமைச்சு, வர்த்தக வாணிப அமைச்சு, கூட்டுறவுத் திணைக்களம் ஆகியவற்றுக்குள் பல தடவை உள்வாங்கப்பட்டும் அதன் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்படவில்லை. இந்த ஆண்டிலாவது இதனை இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன.

இவ்விடயம் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனுடன் தொடர்புகொண்டு வினவிய போது, ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலையை மீள இயங்க வைப்பது தொடர்பல் எந்த விதமான நடவடிக்கைகளும் இல்லை.

யுத்தகாலத்தில் கைவிடப்பட்ட தொழிற்சாலைகளை இயங்க வைப்பதற்கு மீள்குடியேற்ற அமைச்சு முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.

அதன் அடிப்படையில் ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை மீள் குடியேற்ற அமைச்சினால் கையேற்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

## தேர்தல் விதிமுறை மீறல்கள்

# முல்லையில் 71 முறைப்பாடுகள் பதிவு

(பனிக்கன்குளம்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விதிமுறை மீறல்கள் தொடர்பில் நேற்று வரை எழுபத்தொரு சம்பவங்கள் முறைபாடாக கிடைக்கப் பெற்றுள்ளதாக முல்லைத் தீவு மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் கா.காந்தீபனிடம் தொடர்பு கொண்டு வினவிய போதே அவர் மேற்க் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு , கரைதுறைப்பற்று , துணுக்காய் மாந்தை கிழக்கு ஆகிய நான்கு பிரதேச சபைகளுக்கும் பல்வேறு கட்சிகளும் சுயேட்சை குழுக்களும் போட்டியிடுகின்றன.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் நேற்று வரையான காலப் பகுதி வரை எழுபத்தொரு தேர்தல் விதிமுறை மீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும், அவை தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்தப்படுவதாகவும் தெரிவித்தார். (2-281)

## வெயிலிலும் பனியிலும் வீதியில் காத்திருந்து

# நெல்லை உலர விட்டும் நிர்ணய விலையில் விற்க முடியவில்லை

## முல்லை.மாவட்ட விவசாயிகள் ஆதங்கம்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவில் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகின்ற போதும் விவசாயிகள் பல்வேறு பிரச்சினைக்கு முகம்கொடுத்து வருவதாகக் குற்றம் சுமத்துகின்றனர்

இந் நிலையில்.நெல்லு அறுவடை நடைபெற்று வரும் நிலையில் . மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நெல் காயவிடும் தளம் இல்லை இதனால் பனி,வெயில் ஆகிய வற்றுக்கு நடுவில் வீதியில் வாடுகின்றோம். கடும் விலையில் பசளை மருந்து வாங்கினோம் நெல்லை உரிய விலையில் கொள்வனவு செய்ய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம் [illegible] தெரிவிக்கின்றனர்

இது தொடர்பில் புதுக்குடியிருப்பு 9ஆம் வட்டாரத்தை சேர்ந்த சி.யோகேஸ்வரன் கருத்து தெரிவிக்கையில் ,

பனிக்கு மத்தியில் வவீதியில் அமர்ந்து இருந்து கஸ்ரப்பட்டு நெல்லை உலர விடுகின்றோம். நாங்கள் எங்கள் பிரதேசத்தில் நானூறு ஏக்கர் வரை வயல் செய்கின்றோம் எங்களுக்கு நெல் காய விடுவதற்கு இடம் இல்லாத நிலை காணப்படு கின்றது. அடுத்த போகத்திற்காவது நெல் காயப்போடுவதற்கு தளம் ஒன்று பெற்றுத்தரவேண்டும் .

வீதியில் நெல் காயவிட முடியாது என்று வீதி அபிவிருத்தி திணைக் களத்தினர் தெரிவிக்கின்றனர். அதுவும் சரிதான் வீதியில் நெல்லை காயவிடமுடியாது விபத்துக்கள் ஏற்படும். என்ன செய்வது நெல் காயவிட முடியாத நிலையில் இருக்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இவ்வாறான நிலையில் நெல்லினை விற்பனை செய்வதிலும் பாரிய சிரமத்தினை எதிர்கொண்டுள்ளோம் நெல்லை லொறிகாரர்கள் தான் எடுக்கின்றார்கள் அவர்கள் மிகவும் குறைந்த விலையில்தான் கொள்வனவு செய்கின்றார்கள்.

ஆயிரத்தி ஜநூறு தொடக்கம் ஆயிரத்தி எழுநூறு வரையில் நெல்லைக் கேட்கின்றார்கள் அரசாங்கம் இதற்கான விலையைக் கூட அறிவிக்கவில்லை அரசாங்கம் கட்டுப்பாட்டு விலையினை அறிவிக்காத நிலையில் இக்கட்டான நிலையில் நாங்கள் விற்க வேண்டியுள்ளது.

வீதியோரங்களில் காவல் இருந்து இரவு பகலாக நெல்லை காயவிடுகின்றோம் என்று தெரிவித்தார்.அரசு நெல் விலையை ஏற்றினால்தான் நாங்கள் விவசாயம் செய்யலாம் இல்லாவிடில் விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற் பட்டுள்ளது. என்றும்அவர் கவலை தெரிவித்துள்ளார. (2-281)

# முல்லைத்தீவில் தபால் மூல வாக்களிப்பை தவறவிட்டவர்களுக்கு இறுதி சந்தர்ப்பம்

(பனிக்கன்குளம்)

பெப்ரவரியில் நடைபெறவுள்ள உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்து வாக்களிக்க தவறியவர்கள் பெப்ரவரி மாதம் முதலாம் இரண்டாம் ஆகிய திகதிகளில் வாக்களிக்க முடியும் என முல்லைத்தீவு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் கா.காந்தீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்து வாக்களிக்க தவறியவர்கள் பெப்ரிவரி மாதம் முதலாம் இரண்டாம் திகதிகளில் வாக்களிக்க முடியும்.

முதலாம் திகதி பொலிஸார் பொலிஸ் நிலையங்களிலும் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அரச அலுவலர்கள் முப்படையினர் ஆகியோர் வாக்களிக்க முடியும். அதிலும் தவறுகின்றவர்கள் இறுதியாக 2 ஆம் திகதி மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் மட்டும் வாக்களிக்க முடியும். இறுதி சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வாக்களிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கிளிநொச்சி மாவட்டத்தின் இராமநாதபுரம் புதுக்காடு பகுதியிலுள்ள நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் ஆலயத்தில் சிறப்புற இடம்பெற்றது. யுத்த காலத்தில் பாதிப்படைந்த இவ் ஆலயம் பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் இந்த ஆலயத்தில் ஆகம முறைப்படி கும்பாபிஷேகம் இடம்பெற்றது. இறுதியில் ஆலய அறங்காவல் சபையால் ஆலய கட்டடக் கலைஞர், வர்ணப் பூச்சாளர், ஆலய அந்தணர்கள் உள்ளிட்டவர்களுக்கு கௌரவிப்புக்களும் இடம்பெற்றன.

(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# அறுவடையின் பின் இடைப்போகமாக 500 ஏக்கரில் சிறுதானியச் செய்கை மேற்கொள்ள ஆராய்வு

## கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் சுதாகரன் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழான காலபோக அறுவடையைத்தொடர்ந்து இடைப்போகமாக 500 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் சிறுதானியச் செய்கையை மேற்கொள்வது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் என்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக குளங்களின் நீர்மட்டம் குறைவடைந்து காணப்படுவதுடன், குறிப்பிட்ட சில பகுதிகளில் வரட்சியால் காலபோகச் செய்கை அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக நெற்செய்கை தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் இரணைமடுக்குளத்தின் கீழான காலபோகச் செய்கை தொடர்பில் பிரதி நீர்ப்பாசனப் பொறியியலாளர் என்.சுதாகரன் கருத்துத் தெரிவிக்கையில்.

இரணைமடுக்குளத்தினுடைய அபிவிருத்தி வேலைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


இதேவேளை கால போகச் செய்கையும் மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது நெல் அறுவடை செய்யப்பட்டவுடனே குறிப்பிட்ட சில இடங்களை அடையாளப்படுத்தி நிலத்திலுள்ள ஈரத்தன்மையைப் பயன்படுத்தி சிறுதானியச் செய்கை மேற்கொள்வதற்கு மாவட்ட விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத்திணைக்களம் ஆகியவை முயற்சிகளை எடுத்து வருகின்றன.

இரணைமடுக்குளத்தின் கீழான மருதநகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 500 ஏக்கர் நிலப்பரப்பில் மார்ச்,ஏப்ரல் ஆகிய மாதங்களுக்குள் அறுவடை செய்யக்கூடிய சிறுதானியச் செய்கைகளை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ளார். (2-315)




# 23 இலட்சம் ரூபா நிதியில் கட்டப்பட்ட பொதுச்சந்தை செயலிழந்த நிலையில்



(கண்டாவளை)

முல்லைத்தீவு துணுக்காய் பகுதியில் சுமார் 23 இலட்சம் ரூபா நிதியில் கட்டப்பட்ட பொதுச்சந்தை கடந்த ஆறு வருடங்களாக செயலிழந்த நிலையில் காணப்படுகின்றது.

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச சபைக்கு உட்பட்ட ஐயன்கன்குளம் கிராமத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு நெல்சிப் திட்டத்தின் ஊடாக 23 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட சந்தை கடந்த எட்டு வருடங்களாக இயங்காத நிலையில் காணப்படுகின்றது.

பிரதேசத்தின் அபிவிருத்திகள் தொடர்பில் அக்கறை செலுத்தாது நிறுவப்பட்டு திறந்து வைக்கப்பட்ட இச்சந்தை பராமரிப்பின்றி, பயன்பாடின்றி மூடிய நிலையில் காணப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (2-315)

# அதிசக்தி மின்வலுக்கொண்ட மின்குமிழ்கள் வவுனியா நகரில் 30 பொருத்தப்பட்டுள்ளன

## நகர சபை செயலாளர் தெரிவிப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் அதிசக்தி மின்வலுக்கொண்ட மின்குமிழ்கள் பொருத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வவுனியா நகரின் முக்கிய பகுதிகளில் அதிசக்தி மின்வலுக்கொண்ட மின்குமிழ்கள் பொருத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

150 சக்தி மின்வலுக் கொண்ட குறித்த மின்குமிழானது நகரில் பல இடங்களில் தற்போது பொருத்தப்



பட்டுள்ளன. இவ்வாறு 30 மின்குமிழ்கள் நகரின் முக்கிய பகுதிகளில் பொருத்தி முடிக்கப்பட்டுள்ளன.

இரவு வேளைகளில் போக்குவரத்தை இலகுவாக மேற்கொள்வதற்கு இந் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட் டுள்ளது. இதன் ஒன்றின் விலை 11 ஆயிரம் ரூபாவா கும். மேலும் வாய்ப்புக்கள் கிடைக்கும் போது அனைத் துப்பகுதிகளுக்கும் குறித்த அதிக மின்வலுக்கொண்ட மின்குமிழ்களைப் பொருத்தவுள்ளதாகவும் நகரசபைச் செயலாளர் ஆர்.தயாபரன் மேலும் தெரிவித்துள்ளார். (2-281)

# மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் கடந்தாண்டில் 20 வேலைத்திட்டங்கள்

## முல்லை.மாவட்ட விவசாயத்திணைக்களத் தகவல்படி

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் இருபது வரையான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு இருப்பதாக மாவட்ட விவசாயத்திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் விவசாய மாவட்டங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற முல்லைத்தீவு மாவட்டத்தில் யுத்தத்தின் பின்னரான மீள் குடியமர்வைத் தொடர்ந்து பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் விவசாயிகளுக்கான பயிற்சிகளை வழங்குதல், நவீனமுறையிலான விவசாயச் செய்கைகளை அறிமுகப்படுத்துதல் வர்த்தக ரீதியான பயிர்ச் செய்கைகளை அறிமுகப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு செயற்றிட்டங்கள் மத்திய மாகாண அரசுகளின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்தாண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் 20 செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இதைவிட பிரமாண அடிப்படையிலான மாகாணசபை உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் விவசாய உபகரணங்களை வழங்குதல், தேசிய உணவு உற்பத்தி திட்டத்தின் கீழான வேலைத் திட்டத்தின் கீழ் மாவட்டச் செயலகத்தின் ஊடாக 2.585 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக மாவட்ட விவசாயத் திணைக்களத் தகவல்களில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து தொண்டராசிரியர்களுக்குமான நியமனம் தொடர்பான முக்கிய கலந்துரையாடல் எதிர்வரும் 3 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு முன் பாக அமைந்துள்ள ஏசியன் கல்வி நிலையத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெற வுள்ளது. எனவே அனைத்து தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளு மாறும் கலந்துகொள்ள தவறு பவர்களின் நியமனம் தொடர் பில் சங்கம் எதுவித பொறுப்புமில்லை என்பதை வடக்கு மாகாண தொண்டராசிரியர் சங்கத்தினர் அறிவுத்துள்ள னர்.

மேலதிக தகவல் பெற விரும்புவோர் தொடர்புகளுக்கு: 077 016 6850, 077 856 5850, 077 4499573 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும்.(2)

# ஆரம்ப குடும்ப சுகாதார நிலைய கட்டடத்தை திறந்து வைக்குக!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட சிவநகர் கிராமத்திலுள்ள கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்காக நடத்தப்படும் குடும்ப சுகாதார நிலையத்தில் பயன்பெறும் தாய்மார், குழந்தைகள் ஆகியோர் இதுவரை தமது சேவைக்காக நீண்ட தூரம் சென்று தமது மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்து வந்த னர்.

இதனைக் கருத்தில் கொண்டு சிவநகர் மூத்தோர் சங்கத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க கிளிநொச்சி மாவட்ட முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளரின் உதவியுடன் சிவநகர் கிராமத்தில் புதிய ஆரம்ப குடும்ப சுகாதார நிலையத்திற்கான கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பலவருட காலமாக துன்பத்தை அனுபவித்த பயனாளிகளுக்கு அமைக்கப்பட்டுள்ள இக்கட்டடம் தேர்தல் முடிவுற்றவுடன் சிறிய திறப்பு விழாவாக நடத்தி பயனாளிகள் பயன்பெற கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர், உரிய அதிகாரிகள் ஆகியோர் ஆவன செய்துதர வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (2-254)

# வாகன விபத்து; இளைஞன் காயம்

(குருமன்காடு)

வவுனியா புகையிர வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா குருமன் காட்டுச் சந்தியிலிருந்து வவுனியா நகர் நோக்கி பயணித்த வான் ஒன்று வைரவப்புளியங்குளம் பகுதியில் வீதியின் மறுபக்கம் திரும்ப முற்பட்ட வேளை அதே பாதையில் வவுனியா நகர் நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.


இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை





## பேய்ப்புடோல்

Botanical Name- Melothria heterophylla
Family- Cucurbit aceae
Sinh-Kawudu Kekiri

பல்லாண்டு காலம் வாழக் கூடிய ஏறுகொடியாகும். நீண்ட தண்டுகளைக் கொண்டது. இதனுடைய தந்திக் கம்பிகள் நீண்டவை. இளம் செடி உரோமங்களைக் கொண்டது. இலைகள் தனியிலை, எதிரிலை அடுக்கம் கொண்டவை 7.5-10 செ. மீ நீளமானவை. பிரகாசமான பச்சை நிறமான இலைகள், பூக்கள் ஒழுங்கானவை வெள்ளை நிறமானது ஒரு பாலானவை 4 செ.மீ நீளமான காய்கள். மளமளப்பானவை இலைகள் கோளவடிவானவை. ஆனி தொடக்கம் ஆடி மாதம் வரை பூக்களைக் காணலாம்.

விதைகள் மூலம் இன விருத்தி செய்யலாம் யாழ் மாவட்டத்தில் பருத்தித்துறை, எழுதுமட்டுவாழ் மிருசுவில் கிராஞ்சி பகுதியில் பரம்பல் அதிகம் மழைக்காலங்களில் இவ் ஏறு கொடியைக் கூடுதலாகக் காணலாம்.

சித்த மருத்துவத்தில் சுரத்திற்கு (காய்ச்சல்) பயன்படும் முக்கியமான மூலிகைகளுள் பேய்ப்புடோலும் ஒன்றாகும்.

இதனைவிட மிகவும் கைப்புச் சுவையைக் கொண்ட மூலிகை அத்துடன் இலகு குண முடையது. இதயத்திற்கும் நன்மை தரக் கூடியது இதனால் சமிபாட்டிற்கு தேவையான ஜடராக்கினியையும் வளர்க்கும்.

காய்ச்சலிற்கு நிழலில் உலர்த்திய பேய்ப்புடோல் செடியை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி ஒரு மட்கலத்தில் போட்டு ஒரு பங்கிற்கு நான்கு பங்கு நீர்விட்டு 1/4 ஆக சுண்டக் காய்ச்சி 30-60 மில்லி அளவு காலை, மாலை அருந்தலாம். பசியின்மை, வயிற்றுப் பொருமல், காய்ச்சல் குணமாகும்.

பேய்ப்புடோல், இலாமிச்சை வேர் , மிளகு, பற்படாகம், வெட்டிவேர் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் 5 கிராம் எடுத்து அரவல் நொருவலாக இடித்து 300 மில்லி நீர்விட்டு 150 மில்லியாக சுண்டக் காய்ச்சி வடித்து 50 மில்லி குடிநீரை காலை, மாலை குடிக்க விஷக் காய்ச்சலுக்கு(வைரஸ் தொற்றுக்களால் ஏற்படுவது) கொடுக்கலாம்.

கொத்தமல்லி ,பேய்ப்புடோல் , சீரகம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ஐந்து கிராம் அளவு எடுத்து 200 மில்லி நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 30 மில்லி அளவு காலை ,மாலை அருந்திவர தாகம் பசி இன்மை வயிற்றுப் பொருமல் குணமாகும்.

செம்பருத்திப் பூக்களையும் பேய்புடோலையும் சம அளவு எடுத்து நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொள்ளவும் இதில் 500 மில்லி கிராம் அளவு ஒரு ரம்ளர் 200 மில்லி நன்றாக் காய்ச்சி பசுப்பாலில் கொடுக்க தாது பலப்பட்டு காய்ச்சல் மீண்டும் மீண்டும் வருவது தடைப்படும் .

பேய்ப்புடோல் சேர்த்து காய்ச்சிய கஞ்சியைக காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கலாம். சமிபாடின்மையும் நீங்க பசியையும் தூண்டக் கூடியது இதற்கு சிவத்தப் பச்சரிசி 100 கிராம் எடுத்து நீரில் வேக விட்டு சிறிதாக நறுக்கிய பேய்ப்புடோல் காயையும் இலையையும் சேர்த்து தேவையான அளவு உப்பு சிறிதளவு கப்பித் தேங்காய்ப் பாலும் (3 ஆவதாகப் பிளிந்த பால்) சேர்த்துக் கஞ்சியாகக் காய்ச்சி அருந்தக் கொடுக்கலாம். இதனால் காய்ச்சல் நிலைமையில் இலகு ஆகாரமாக அமைவதோடு மட்டுமன்றி பசியையும் தூண்டக் கூடியது. காய்ச்சலினால் நாக்கில் ஏற்படும் சுவையின்மையையும் நீக்கக் கூடியது.

பித்தசுரஞ் சீதசுரம் பீரிக்கும் காமாலை யுற்றம சூரியுழற்றாக- நித்தியமுங் காய்ப் புடலை யுண்ணக் கவிழ்கின்ற பித்தமும் போம் பேய்ப் புடலை யுண்பாரைப் பேணு.

பித்த, கப சுரங்களை தணிக்கக் கூடிய மூலிகையாகும். இதன் இலை, காய் 12 கிராம் , கொத்தமல்லி 12 கிராம் எடுத்து நீர்விட்டு இரவில் ஊறவிட்டு மறு நாட் காலை உட்கொண்டாலும் சுரம் தணியும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# யாழ்.நகரின் இடர்பாடுகளுக்கு தீர்வுகாணும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்

## டக்ளஸ்.எம்.பி.வாக்குறுதி



(யாழ்ப்பாணம்)

யாழ் .மாநகரத்தை மேலும் அழகுபடுத்தி முன்னேற்றங்காணச்செய்யும் அதேவேளை பழக்கடை வியாபாரிகளின் நலன்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி தெரிவித்துள்ளார்.

யாழ் நகரப்பகுதி பழக்கடை வியாபாரிகளால் நடத்தப்பட்ட வருடாந்தப் பொங்கல் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யாழ் .நகரப்பகுதியில் உள்ள பழக்கடைகளை சகல வசதிகளுடன் கூடியதான வகையில் அமைத்து வியாபாரிகளுக்கு வழங்கும் எண்ணம் எமது நிலைப்பாடாக உள்ளது. அதுமாத்திரமன்றி நகரத்தில் தரித்து நிற்கும் ஆட்டோக்களுக்கு விஷேட தரிப்பிடம் ஒன்றை நிர்மாணிப்பது தொடர்பிலும் நாம் அவதானம் செலுத்தவுள்ளோம்.

அத்துடன் இந்நகரத்தில் உள்ள இட நெருக்கடிகளுக்கு உரிய வகையில் தீர்வு காணும் வகையில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவும் செயற்படுத்தவும் நாம் எண்ணியுள்ளோம். எமது எண்ணங்களுக்கும் விருப்பங்களுக்கும் யாழ் நகரப் பழக்கடை வியாபாரிகள் மட்டுமல்லாது அனைத்து வர்த்தகப் பெருமக்களும் பூரண ஆதரவை நல்கும் பொருட்டு நிச்சயம் நாம் அந்த மாற்றத்தைக் கொண்டுவருவோம்.

நகரத்தின் சுத்தம் சுகாதாரத்தை பேணுவது மாத்திரமன்றி நகரத்தின் அழகை மேலும் மெருகூட்டுவதற்கு அனைத்துத் தரப்பினரும் பூரண ஆதரவினை எமக்கு நல்கவேண்டும்.

அத்துடன் பழக்கடை வியாபாரிகளுக்கு இலகு கடன் திட்டங்களுக்கூடாக கடன்களை வழங்கி அதனூடாக அவர்களது வாழ்க்கைத்தரத்தை முன்னேற்றுவதற்கும் வளப்படுத்துவதற்கும் இனி வருங்காலங்களை வர்த்தகர்களுக்கு மட்டுமல்லாது நகரத்திற்கு பல்வேறு தேவைகளின் நிமித்தம் யாழ் .நகருக்கு வரும் மக்களுக்குமாக எமது அர்ப்பணிப்புகளுடனான உழைப்பை எதிர்வருங்காலங்களிலும் நிச்சயம் வழங்குவோம் என்றும் டக்ளஸ் தேவானந்தா உறுதிபடத் தெரிவித்துள்ளார். (இ)

# தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை (01.02.2018 வியாழன்) காலை 9 மணிக்கு ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அனைத்து தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (இ)

# திருட்டுப் போன 4 மோட்டர்கள் மீட்பு

## இருவர் கைது

(கரணவாய்)

பல இடங்களில் திருடப்பட்ட நான்கு மோட்டர்களை மீட்ட நெல்லியடிப் பொலிஸார் சந்தேக நபர்கள் இருவரைக கைது செய்துள்ளனர்.

கரணவாய் தெற்குப் பகுதியில் மோட்டர் ஒன்று திருடப்பட்டமை தொடர்பான புலன் விசாரணைகளை மேற்க கொண்டு வந்த பொலிஸார் இரகசியத் தகவல் ஒன்றினை அடுத்து காங்கேசன் துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர். டி. கேபிரியந்தவின் ஆலோசனையில் நெல்லியடி பொலிஸ் உப பரிசோதகர்களான பண்டாரா சியாளன் ஆகயோரின் தலைமையில் சென்ற பொலிஸ் அணி நெல்லியடி பகுதியில் கடை ஒன்றில் விற்கப்பட்ட நான்கு மோட்டர் களையும் மீட்டதுடன் கடைக்காரரையும் மோட்டார் விற்றவரையும் கைது செய்துள்ளனர். (இ-60)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கரணவாய்)

கரவெட்டி வதிரி திரு இருதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபார் இ.இராகவன் தலைமையில் இடம் பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை அதிபரும் கல்லூரி பழைய மாணவியுமான திருமதி.த. ஜெசிந்தா ஜெயசீலி சிறப்பு விருந்தினராக கரவெட்டி பங்குத் தந்தை அருட்பணி அன்ரன் அமல் ராஜ் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-10-60)



இலங்கைவங்கி கோப்பாய் கிளையில் கந்தையா தியாகராசா என்பவருக்கு 48 இலட்சம் ரூபா பெறுமதியான டிப்பர் வாகனத்திற்கான லீசிங் வசதி அண்மையில் வழங்கப்பட்டது.

# நல்லூரில் தைப்பூசத் திருவிழா இன்று மாற்றுப் பாதையைப் பயன்படுத்தவும்

(யாழ்ப்பாணம்)

இன்று 31 ஆம் திகதி புதன் கிழமை மாலை 4.30 மணி முதல் மாலை 6.30 மணிவரை நல்லூர் கந்த சுவாமி கோவிலில் இடம் பெறும் தைப்பூசத் திருவிழா திருமஞ்சம் வெளிவீதி உலா வருவதனை முன்னிட்டு ஆலயச் சூழலினூடாக வாகனப் போக்குவரத்துக்காக மாற்றுப் பாதையைப் பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலயச் சூழலில் ஏற்படும் பக்தர்கள் கூட்டம் அதிகரிப்பு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு 1. பருத்தித்துறை வீதி 2. அரசடி வீதி 3. கோவில் வீதி ஆகியனவற்றை பொது மக்கள் மற்றும் வாகனச சாரதிகள் பயன்படுத்துவதன் மூலம் ஆலயச் சூழலில் அமைதியைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என யாழ். மாநகர சபை ஆணையாளர் இ. த. ஜெயசீலன் அறிவித்துள்ளார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பெரு மஞ்சம்

## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோவில்

## சிறப்புப் பொங்கல், பால்குடப் பவனி



## காலம் 31.01.2018 (இன்று) புதன்கிழமை

அதிகாலை முருகப் பெருமானுக்கு பூசையைத் தொடர்ந்து காலை 5.00 மணிக்கு பால்குடபவனி இணுவில் மருதனார்மடம் பல்லப்ப வைரவர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி 6.00 மணிக்கு ஆலயத்தை வந்தடையும்.

காலை 9.00 மணிக்கு மாபெரும் பொங்கல் நிகழ்வு ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு நிறைவடையும்.

இன்று மாலை 6.00 மணிக்கு சந்திரகிரகணம் என்பதனால் மதியம் 12.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 1.30 மணிக்கு உலகப் பெருமஞ்சத்தில் முருகப்பெருமான் வீதிவலம் வரும் காட்சியும் விசேட மேளக் கச்சேரியும் இடம்பெறும்.

**முருகப்பெருமான் அடியார்கள் உலகப்பெருமஞ்ச வடம் தொட்டிழுக்க வாரீர்!**

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

விளம்பர அனுசரணை

KIRUBAA LEARNERS
275/7, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.[மதவடி அருகில்]
021 224 2022, 071 454 5956

அனைத்துவிதமான ஆடைத் தெரிவுக்கும் நாடவேண்டிய இடம்
கீர்த்திகா ரெக்ஸ்ரைல்ஸ்
& K.T.Fashion
Boys & Baby Selection
பலாலி றோட், உரும்பிராய் சந்தி,
உரும்பிராய். 077 228 8245

நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய் வேப்பெண்ணெய், இலுப் பெண்ணெய் ஆகிய எண்ணெய் வகைகளை மிகவும் தரமாகவும் சுத்தமாகவும் ஊத்திக்கொடுக்கப்படும் இடம்
சாலினி எண்ணெய் ஊற்றும் மில்
இணுவில் மேற்கு, இணுவில். 021 224 17 37

# திறப்பு விழா அழைப்பிதழ்

எமது வெஸ்கோ கடந்த 28 வருடங்களைப் பூர்த்தி செய்து இன்று புதுப்பொலிவுடன் **வெஸ்கோ சுப்பர்மாட்** என இன்று காலை 10.30 இலிருந்து 12.00 மணிவரையான சுபநேரத்தில் வைத்திய கலாநிதி லயன் **மு.கதிர்காமநாதனாலும்** கனடா வி லிருந்து வருகை தரும் தொழில் அதிபர் லயன் **வ.பூலோகேந்திரன்** அவர்களாலும் திறந்து வைக்கப்படவுள்ளது.

எமக்கு இவ்வளவு காலமும் ஒத்துழைப்பு வழங்கிய எமது இனிய வாடிக்கையாளர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் தொடர்ந்தும் எமக்கு பேருதவி வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சகல மருந்துப் பொருட்களுக்கும் குறித்த விலையிலிருந்து 7% கழிவும் ஏனைய பொருட்களுக்கு கூடுதலான விலைக் கழிவு வழங்கப்படவுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தந்து எமக்கு ஆசி வழங்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**லயன் Dr.க.மு.பத்மநாதன் குடும்பத்தினர்.**

(2170)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கொரியாவுடனான சமாதான நிகழ்ச்சி ரத்து

## வடகொரியா ஜனாதிபதி அறிவிப்பு



(சியோல்)

குளிர்கால ஒலிம்பிக் போட்டிக்கு முன்பாக நடைபெறயிருந்த கலாசார விழாவில், தென் கொரியாவுடன் பங்கேற்கப்போவதில்லை என வட கொரியா அறிவித்துள்ளது.

குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி தென்கொரியாவின் யியோங்சாங் நகரில் நடக்கவுள்ளது. இந்தப்போட்டிகளில் பங்கேற்க வடகொரிய அணியை அனுப்ப பரிசீலனை செய்வதாக அந்நாட்டின் ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்திருந்தார்.


இதுதொடர்பாக, வடகொரியா - தென்கொரியா எல்லையில் உள்ள பான் முன்ஜோம் கிராமத்தில் இரு நாட்டு உயரதிகாரிகள் பங்கேற்ற பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது. இதை தொடர்ந்து ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க 550 பேர் கொண்ட குழுவை அனுப்பி வைக்க வடகொரியா சம்மதம் தெரிவித்திருந்தது.

மேலும், ஒலிம்பிக் போட்டி தொடக்க நிகழ்ச்சியில் இரு கொரிய நாடுகளும் ஒரே கொடியின் கீழ் அணிவகுத்துச்செல்ல இருப்பதாக தகவல்கள் வெளியாகின.

இந்நிலையில், குளிர் கால ஒலிம்பிக் போட்டிக்கு முன்பாக நடைபெறயிருந்த கலாசார விழாவில், தென் கொரியாவுடன் பங்கேற்கப் போவதில்லை என வட கொரியா அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஜனாதிபதி கிம் ஜாங் உன் கூறுகையில், என்னைத் தவறாக விமர்சித்து தொடர்ந்து தென் கொரிய ஊடகங்களில் செய்தி வருவதன் காரணமாகவே இந்த முடிவெடுத்துள்ளேன் எனத் தெரிவித்துள்ளார். (இ-8)

# தகுதி நீக்க கால வரம்பு வழக்கு நவாஸ் ஷெரீப்புக்கு சம்மன்



(இஸ்லாமாபாத்)

தகுதி நீக்க கால வரம்பு வழக்கு தொடர்பாக அடுத்த கட்ட விசாரணையின் போது முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் ஜகாங்கிர் தரீன் ஆகியோரை நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென உச்ச நீதிமன்று சம்மன் அனுப்பியுள்ளது.

பனாமா கேட் ஊழல் வழக்கில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மீதான குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதை தொடர்ந்து, அவர் எம்.பி. பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார். அதனைத்தொடர்ந்து அவர் பிரதமர் பதவியை இராஜினாமா செய்தார்.

இதே போல் பாகிஸ்தான்-தெரிக்-இ-இன்சாப் கட்சியின் தலைவராகவும், எம்.பி.யுமாக இருந்த ஜகாங்கிர் தரீன், தேர்தலின் போது வேட்பு மனுவில் தனது சொத்து விவரங்களை குறிப்பிடாமல் மறைத்துவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டது. இந்த வழக்கு விசாரணையின் போது அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதால் அவர் எம்.பி. பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

பாகிஸ்தான் அரசியலமைப்பின் சட்டப்பிரிவு 62(1) (எப்) கீழ் வழங்கப்படும் இந்த தகுதி நீக்க தண்டனை வாழ் நாள் முழுவதற்குமானதா? அல்லது குறிப்பிட்ட காலத்திற்கானதா? என்கிற கேள்வி அங்கு பரவலாக எழுந்தது. இதையடுத்து பாகிஸ்தான் எம்.பி.க்கள் பலர் தகுதி நீக்க தண்டனைக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடுத்தனர்.

தலைமை நீதிபதி மியான் சாஹிப் நிசார் தலைமையில் 5 நீதிபதிகளை கொண்ட அமர்வு இந்த வழக்கை விசாரித்து வருகிறது. இந்த வழக்கு விசாரணையின் முடிவில், சட்டப்பிரிவு 62(1) (எப்) கீழ் வழங்கப்படும் தகுதி நீக்க தண்டனைக்கான கால அளவு நிர்ணயிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் இந்த வழக்கின் அடுத்த கட்ட விசாரணையின் போது முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் ஜகாங்கிர் தரீன் ஆகியோரை நீதிமன்றில் ஆஜராக கூறி அவர்களுக்கு உச்ச நீதிமன்று சம்மன் அனுப்பியுள்ளது. விசாரணையின் போது அவர்கள் ஆஜராகி தங்கள் தரப்பு வாதங்களையும், கேள்விகளையும் முன்வைக்க சம்மனில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-8)

# சிரியாவில் ஈரான் ஆ... நேதன்யாகு ரஷ்யா...

(டெல் அவிவ்)

சிரியாவில் ஈரானின் ஆதிக்கத்தை எதிர்கொள்வது தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் ஆலோசனை நடத்துவதற்காக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு நேற்று மொஸ்கோ புறப்பட்டுச் சென்றார்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கு எதிராகப்போராடிவரும் புரட்சிப் படையினரை ஒழிக்க ரஷ்யா உள்ளிட்ட சில நாடுகள் ஜனாதிபதியின் படைகளுக்கு உதவியாக வான்வழித்தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

ஈரானின் பரம எதிரியான இஸ்ரேலும் சிரியா விவகாரத்தில் ரஷ்யாவின் நிலைப்பாட்டை ஆதரித்து வருகிறது. இந்நிலையில், லெபனானில் இயங்கிவரும் ஹிஸ்புல்லா போராளி குழுக்களும் ஈரான் படைகளும் ஜனாதிபதி ஆசாத்தின் படைகளுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றன.

இதற்கு உதவியாக ஹிஸ்புல்லா போராளிகளுக்கு இஸ்ரேல் வழியாககப்பல்களில் ஆயுதங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. இப்படி வந்த சுமார் 100 ஆயுத கப்பல்களை இஸ்ரேல் கடற்படையினர் சிறைபிடித்தனர்.

இதனால், சிரியாவில் தங்கள் நாட்டு படைபலம் மற்றும் ஆயுதபலத்தை



ஈரான் அதிகப்படுத்தி, அங்கு நிரந்தரமாக காலூன்றி நிற்கக்கூ... ஈரானின் இந்த முயற்சியின்மூலம், ஹிஸ்புல்லா இயக்கப் போராளிகள் இஸ்ரேலுக்கு எதிரான ஏவுகணை தாக்குதல் நடத்தும் மையப்பகுதியாக

# பிரேசில் சிறையில் ... கலவரத்தில் 10 பே...

(ரியோடி ஜெனிரோ)

பிரேசில் நாட்டிலுள்ள சிறை ஒன்றில் ஏற்பட்ட கலவரத்தில் 10 பேர் பலியாகினர் என சிறைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரேசில் நாட்டின் வடகிழக்கில் செரா நகரம் உள்ளது. இங்குள்ள சிறைச்சாலையில் ஏராளமான கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் கைதிகளுக்கு இடையே திடீரென மோதல் ஏற்பட்டது. இரு தரப்பினரும் சரமாரியாக தாக்கிக் கொண்டதால் கலவரம் ஏற்பட்டது.

இந்த கலவரத்தில் 10 பேர் உயிரிழந்தனர் எனவும், பலர் படுகாயம் அடைந்துள்ளனர் எனவும் அதிகாரிகள்



தெரிவித்தனர். தகவலறிந்த சிறைக்காவலர்களும், பொலிஸாரும் விரைந்து சென்று கலவரத்தை அடக்கினர் காயமடைந்த

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வெளிநாடு



# காஷ்மீரில் செயல்படும் லஷ்கர், தலிபான்களுக்கு ஆயுதம் வழங்குகிறது பாகிஸ்தான் இராணுவம்

## ஆப்கானிஸ்தான் பகிரங்க குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

ஜம்மு-காஷ்மீரில் செயல்படும் லஷ்கர்-இ-தொய்பா மற்றும் ஆப்கானிஸ்தானில் செயல்படும் தலிபான் தீவிரவாத அமைப்புகளுக்கு பாகிஸ்தான் இராணுவம் ஆயுதங் களை வழங்கி வருவதாக அமெரி க்காவுக்கான ஆப்கானிஸ்தான் தூதர் மஜீத் கரார் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் தற்கொலைப் படை தீவிரவாதிகள் மூன்று இடங்களில் கொடூரத்தாக்குதல்களை நடத்தினர். இதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

இந்தத் தீவிரவாதத் தாக்குதல் களுக்கு தலிபான் தீவிரவாத அமைப்பு பொறுப் பேற்றுக் கொண்டுள்ளது.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக அமெரிக்காவுக்கான ஆப்கானிஸ்தான் தூதர் மஜீத் கரார் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியிருப்பதாவது,

ஆப்கானிஸ் தானில் அமைதியை சீர்குலைப் பதற்காகதலிபான்களுக்கும், இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் லஷ்கர்-இ-தொய்பா அமைப்புக்கும் பாகிஸ்தான் இராணுவம் உதவி செய்து வருகிறது. அந்தத் தீவிரவாத அமைப்புக்களுக்கு இராணுவ உபகரணங்களை தொடர்ந்து வழங்கி வருகிறது.

குறிப்பாக, ஆப்கானிஸ்தானின் மெய்லாண்ட் இராணுவ தளத்தில் தாக்குதல் நிகழ்த்திய தலிபான் தீவிரவாதிகள், இரவில் பார்க்கக்கூடிய கண்ணாடிகளை அணிந்திருந்தது தெரிய வந்திருக்கிறது. இந்தக் கண்ணாடிகள் யாவும், பிரிட்டன் நிறுவனத்திடமிருந்து பாகிஸ்தான் இராணுவத்தால் வாங்கப்பட்டவை ஆகும். இவ்வாறு மஜீத் கரார் தெரிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாத நடவடிக்கைகளை பாகிஸ்தான் தூண்டி வருவதாக இந்தியா குற்றம்சாட்டி வரும் நிலையில், அமெரிக்காவுக்கான ஆப்கன் தூதர் இவ்வாறு தெரிவித்திருப்பது சர்வதேச தளத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கரு தப்படுகிறது. முன்னதாக, தீவிரவாதிகளுக்கு பாகிஸ் தான் தொடர்ந்து பாதுகாப்பான புகலிடம் அளித்து வருவதாக அமெரிக்கா அண்மையில் குற்றம் சாட்டியிருந்தது.

இதனிடையே, ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நேற்று முன்தினம் அதிகாலையில் நடத்திய தாக்குதலில் ஆப்கான் இராணுவத்தினர் 11 பேர் உயிரிழந்தனர்.

16 பேர் படுகாயமடைந்தனர். காபூலிலுள்ள இராணுவத் தளத்தில் தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-8)

---

## ...திக்கம் ...பயணம்

...லெபனான் மாறிவிடக்கூடும் என இஸ்ரேல் அஞ்சுகிறது.

இந்நிலையில், சிரியாவில் தங்கள் நாட்டு இராணுவத்தின் ஆதிக்கத்தை அதிகரிக்க இடைவிடாமல் முயற்சித்து வரும்ஈரான் அரசின் நிலைப்பாடு தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் ஆலோசனை நடத்துவதற்காக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுநேற்று மொஸ்கோ நகருக்கு புறப்பட்டுச்சென்றார்.

முன்னதாக, செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த பெஞ்சமின் நேதன்யாகு, "சிரியாவில் முகாமிட்டுள்ள இஸ்ரேலியப் படைகள் மற்றும் ரஷியா நாட்டி[illegible] படைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பு தொடர்பாக நானும் ரஷ்ய ஜனாதிபதி புடினும் அவ்வப் போது ஆலோசித்து வருகிறோம் என்று தெரிவித்தார். (இ-8)

---

# பிரான்ஸ் - ஸ்பெயின் இடையே 6 மாதத்துக்கு ஒரு முறை நாடு மாறும் ஆச்சரிய தீவு



(பாரிஸ்)

ஐரோப்பிய கண்டத்தில் பிரான்ஸ் - ஸ்பெயின் நாடுகள் இடையே உள்ள தீவு 6 மாதம் பிரான்ஸ் வசமும், 6 மாதம் ஸ்பெயின் வசமும் மாறிமாறி இருக்கும்.

ஐரோப்பிய கண்டத்தில் பிரான்ஸ் - ஸ்பெயின் நாடுகள் இடையே இயற்கையான எல்லையாக பீடாகோ ஆறு உள்ளது. இது ஸ்பெயின் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளை பிரித்து பாய்ந்தோடுகிறது.

இந்த ஆற்றின் நடுவில் பிசான் தீவு உள்ளது. அமைதியான இந்த தீவு மரங்களால் சூழப்பட்டுள்ளது. இங்கிருந்து பார்த்தால் பிரான்ஸ் பகுதியில் தொழில்துறை கிடங்குகளும், ஸ்பெயின் பகுதியில் குடியிருப்புகளும் தெரியும்.

இத்தீவு 2 நாடுகளுக்கும் சொந்தமானது. 200 மீற்றர் நீளமும் 40 மீற்றர் அகலமும் கொண்டது. ஸ்பெயின், பிரான்ஸ் ஆகிய 2 நாடுகளுக்கும் இடையே நீண்ட காலமாக பிரச்சினை இருந்து வந்தது.

எனவே, 1659ஆம்ஆண்டு 2 நாடுகளும் இங்குதான் 3 மாதங்கள் பேச்சுவார்த்தை நடத்தின.

முடிவாக பைரனீஸ் ஒப்பந்தம் எனும் அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானது. அது ஒரு அரச திருமணத்துடன் நடந்தது.


பிரான்ஸ் மன்னர் 16-ஆம் லூயிஸ் ஸ்பெயின் மன்னர் 4ஆம் பிலிப்பின் மகளை திருமணம் செய்து கொண்டார். அதை தொடர்ந்து நடுநிலை மண்டலமாக இருந்த இத்தீவு 2 நாடுகளாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

9,942 சதுர அடியுள்ள இந்ததீவு 6 மாதம் பிரான்ஸ் வசமும், 6 மாதம் ஸ்பெயின் வசமும் மாறிமாறி இருக்கும்.

அதன்படி ஒவ்வொரு ஆண்டின் பெப்ரவரி 1 முதல் ஜூலை 31 வரை இத்தீவு ஸ்பெயின் அரசின் கீழ் இருக்கும்.


மீதி 6 மாதம் பிரான்ஸ் அரசின் கீழ் இருக்கும். இது கடந்த 350 ஆண்டுகளுக்கு மேலாக நடைமுறையில் இருந்து வருகிறது.

இந்த தீவை பார்க்க குறைந்த பார்வையாளர்களே அனுமதிக்கப்படுகின்றனர். தீவுக்கு குறைந்த முன்னுரிமையே வழங்கப்படுகிறது. (இ-8)



---

## ...ஏற்பட்ட ...ர் பலி!



...வர்களை மீட்டு முதலுதவி சிகிச்சைகளை அளித்து வருகிறோம் என்றனர். (இ-8)

---

# மரம் குருவிக்கூடு அருவி என அலுவலகத்துக்குள் காட்டை உருவாக்கிய அமேசான்


(நியூயோர்க்)

அமெரிக்காவில், அமேசான் நிறுவனத்தின் புதிய அலுவலகக் கட்டடம் திறக்கப்பட்டுள்ளது. தனது ஊழியர்கள் பணியாற்ற புதிய அலுவலகத்தில் சிறிய அமேசான் காடு உருவாக்கியுள்ளது.

அமெரிக்காவில் மைக்ரோசாப்ட், பேஸ்புக், அப்பிள் என அனைத்து நிறுவனங்களும் புதிதாக டிரெண்டிங் முறையில் அலுவலகம் கட்டி வருகிறது.

இதுபோன்று அமேசான் நிறுவனம் புதிய வடிவில் வித்தியாசமாக கட்டடம் கட்டுகிறது. தற்போது இந்த நிறுவனம் தனது அலுவலகத்தில் சிறிய அமேசான் காடு உருவாக்கியுள்ளது. உள்ளே நிறைய மரங்களை நட்டு இருக்கிறது.




இந்த அலுவலகத்தில் 3 குருவிக்கூடு போன்ற கூடு இருக்கும். ஒவ்வொரு கூட்டுக்குள்ளும் 800 பேர்வரை தங்க முடியும்.

இதற்குள் பெரிய மரங்கள் வளர்க்கப்படுகின்றன. ஆங்காங்கே சிறுசிறு அருவிகளும் அமைக்கப்படவுள்ளன. இதன்மூலம் காட்டுக்குள் இருக்கும் உணர்வு ஏற்படும்.

இந்த பணிக்காக மொத்தம் 600 பேர் அமர்த்தப்பட்டுள்ளனர். உலகின் பல பகுதிகளில் இருந்து முக்கிய படங்களின் ஆர்ட் டைரக்டர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த 3 வருடங்களாக அலுவலகத்தை வடிவமைத்துள்ளனர். (இ-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் குடியுரிமையை முடிந்தால் பறிக்கட்டும்

## அரசிற்கு பீரிஸ் சவால்



(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷவின் குடியியல் உரிமைகளை அரசாங்கம் முடிந்தால் இரத்துச் செய்து பார்க்கட்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சவால் விடுத்துள்ளார்.**

"தேர்தலில் தாம் தோல்வியடைந்து விடுவோமோ? என்ற பயத்தில், சிறிமாவோ பண்டாரநாயக்கவின் குடியியல் உரிமைகளை, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன பறித்தார்.

தன்னைவிடப் பிரபலமானவராக சிறிமாவோ பண்டாரநாயக்க இருப்பதாக உணர்ந்து கொண்டதால் தான், ஜே.ஆர். அவரை வெட்டி விட்டார்.

ஒட்டுமொத்த நாடே இன்று மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்துக்காக காத்துக் கொண்டிருக்கிறது.

அவர் அரசியல் ரீதியாக அச்சுறுத்தப்பட்டால் மக்கள் எப்படி பதிலளிப்பார்கள் என்பதை நாம் பார்க்கலாம்.

அவரது குடியியல் உரிமைகளைப் பறித்தால் அதன் விளைவுகளை எல்லோரும் பார்க்க முடியும்" என்றும் அவர் எச்சரித்துள்ளார். கொழும்பு ஊடகம் ஒன்றிற்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# சு.க.ஆட்சி அமைக்க வருமாறு மைத்திரி தந்திரம் மகிந்த நிராகரிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் ஆட்சியமைக்க வருமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்த அழைப்பை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.



ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் தெரிவு செய்யப்பட்ட 96 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தன்னுடன் வந்தால், நாளைக்கே சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை அமைக்க நடவடிக்கை எடுப்பேன் என்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்திருந்தார்.

இதுகுறித்து, கருத்து வெளியிட்ட மகிந்த ராஜபக்ஷ,

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் இணைந்து அரசாங்கத்தை அமைப்பது என்ற மைத்திரிபால சிறிசேனவின் திட்டம், ஒரு தந்திரம்.

இப்போது நாங்கள் அவரது தலைமையின் கீழ், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ள இணங்கினால், நிச்சயமாக பெருமளவு வாக்குகளை இழப்போம். ஏனென்றால், அவரது தலைமையின் கீழ் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீது மக்கள் வெறுப் படைந்துள்ளார்கள்.

பெப்ரவரி 10 ஆம் திகதி நடக்கவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் அவமானகரமான தோல்விக்கு அஞ்சுவதால் தான் அவர் இந்தத் திட்டத்தை முன்வைத்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி பெரும் வெற்றியைப் பெறும். மக்கள் இந்த அரசாங்கத்தின் மீது வெறுப் படைந்துள்ளார்கள். எமது வெற்றி உறுதியாகியுள்ளது.

ஐ.தே.கவுடன் இணைந்து நாட்டின் சொத்துக்களை வெளிநாட்டவர்களுக்கு விற்று, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை காட்டிக் கொடுத்தவர்களைப் பாதுகாப்பதற்காக, நாங்கள் எமது வெற்றியைத் தியாகம் செய்ய" வேண்டிய தேவை இல்லை" என்றும் மகிந்த தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஜனாதிபதி அழைப்புக் குறித்து கருத்து வெளியிட்ட கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே, பெப்ரவரி 10 ஆம் திகதிக்குப் பின்னர், சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்காக இணைந்து கொள்ளத் தயார் என்றும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உருளைக்கிழங்கு விதைக்கு 100 வீதம் மானியம்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களுக்கு உருளைக்கிழங்கு விதைக்கு வழங்கப்படும் 50 சதவீத மானியம் நூறு சதவீதமாக அதிகரிக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தேயிலை மீள் ஏற்றுமதி காரணமாக எமது நாட்டுத் தேயிலையின் கீர்த்தி நாமத்திற்கு தற்போது சர்வதேசத்தில் ஏற்பட்டுள்ள தாக்கம் மற்றும் தேயிலைக் கைத்தொழிலில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக தேயிலை மீள் ஏற்றுமதியை முற்றாகத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன் மிளகு மீள் ஏற்றுமதியினால் மிளகின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், தேசிய மிளகு உற்பத்தியாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு மிளகு மீள் ஏற்றுமதியையும் எதிர்காலத்தில் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த 28 ஆம் திகதி பிற்பகல் பதுளை நகரில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார முகாமைத்துவத்திற்கான பொறுப்பினை தாம் இதுவரை ஐக்கிய தேசியக் கட்சியிடம் கையளித்திருந்ததுடன் தற்போது நாட்டு மக்கள் எதிர்கொள்ள நேர்ந்துள்ள அழுத்தங்களைக் கருத்திற் கொண்டு எதிர்காலத்தில் அவற்றை தம்மால் நியமிக்கப்பட்டுள்ள தேசிய பொருளாதார சபையினூடாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வெவ்வேறு அரசியல் கட்சிகள் எத்தகைய கருத்துக்களைக் கூறினாலும் ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகளற்ற நாட்டினைக் கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சி நிரல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடம் மாத்திரமே காணப்படுவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டுக்குத் தேவையான மாற்றத்திற்கான பாதையில் சகலரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கைகோர்க்க வேண்டுமெனத் தெரிவித்தார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இன்று மக்களின் தெளிவான எண்ணங்களினூடாகக் கட்டியெழுப்பப்படுவதுடன் மக்களின் வரவேற்பையும் பெற்றுள்ளதென ஜனாதிபதி தெரிவித்தார்.

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் வெற்றியை உறுதி செய்வதற்காக ஜனாதிபதி தலைமையில் நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மக்கள் சந்திப்பு தொடரின் பதுளை மாவட்ட மக்கள் சந்திப்பு பெருந்திரளான மக்கள் பங்குபற்றுதலுடன் வெற்றிகரமாக இடம்பெற்றது.

இதன்போது பதுளை மாவட்ட மக்கள் ஜனாதிபதிக்கு மகத்தான வரவேற்பு அளித்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர்களான டிலான் பெரேரா, லக்ஷ்மன் செனவிரத்ன, மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் பலரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### பொய்க் கோபம் கொள்வது எப்படி?

சிலபேர் இரத்த நாளங்களைச் சூடாக்கிக் கொண்டு குதிக்கிறார்கள். உப்புப் பெறாத விடயத்திற்கெல்லாம் கோபப்படுகின்றார்கள்.

அதன் பிறகு மூட் அவுட் ஆகி இயல்பு நிலைக்கு வர முடியாமல் தவிக்கின்றார்கள். இதைத் தொடர்ந்து அவர்களிடம் சிக்குகிற அனைவரையும் கன்னாபின்னாவென்று திட்டுகின்றார்கள்.

கோபம் நன்மையைச் செய்ததாக வரலாறு உண்டா? மகாமகாக் குறைவு உலக மகா மைக்ரோஸ் கோப்பை கொண்டுதான் ஒரு கோபம் நன்மையில் முடிந்ததாகக் கண்டுபிடிக்க வேண்டும்.

கோபமாக இருக்கும் நேரத்தில் எடுக்கப்படும் முடிவுகளும் சொல்லப்படும் சொற்களும் காலாகாலத்திற்கும் ஒரு மனிதனை வறுத்து எடுக்கின்றன.

எனவே கோபமே வேண்டாம். அப்படியே சில நியாயமான கோபங்கள் வந்தாலும் அதை நீண்ட நேரம் மனத்திலேயே வைத்திருக்க வேண்டாம்.

கோபப்பட்டுவிட்டு உடனே இயல்பு நிலைக்கு வந்து அப்புறம் நம்பக்கம் திரும்பி அப்புறம் என்ன விடயம் சொல்லுங்க? என்று புன்னகையுடன் கேட்கிறார்களே! இவர்களே உதாரண புருஷர்கள்.

இவர்களது மனநிலை நமக்கும் வர வேண்டும். டக்கென்று கோபம்! உடனே சத்தம். இது நமக்குச் சாத்தியமில்லை என்றா நினைக்கிறீர்கள்? சாத்தியமே!

நம்முடைய சிறு கோபங்கள் மற்றவர்களைப் பாதிக்கின்றனவோ இல்லையோ அவை நம்மைப் பாதிக்க விடக் கூடாது.

ஒரு தாய், தன் குழந்தை சிறு தவறைச் செய்து விடுகிறது என்பதற்காக அடிக்கிறாள். உடனே அது அழுகிறது. உடனே அவள் "வேண்டாண்டி என் இராசாத்தி. அம்மா அடிச்சிட்டாளாடி?" என்று குறைவான நொடிகளில் உணர்ச்சிகளை மாற்றிக் கொள்கின்றாள். இப்படித்தான் நாமும் நடந்து கொள்ள வேண்டும்.

நம் கோபத்துக்கு உள்ளாகிற நபர்கள் மீது நமக்கு அடிவயிற்றிலிருந்து கோபம் புறப்படக் கூடாது. மாறாக அறிவிலிருந்து அந்தக் கோபம் புறப்பட வேண்டும்.

தாமதமாக வரும் ஊழியரைக் கண்டிக்க வேண்டிய நிலை ஓர் உரிமையாளருக்கு.

உடனே அந்த உரிமையாளர், "அந்தாள் வந்தவுடன் அவரைக் கண்டித்து விட்டு இயல்பு நிலைக்குத் திரும்பிவிட வேண்டும். இல்லாவிட்டால் நாள் முழுவதும் நம் வேலை கெட்டுவிடும்" என்று தனக்குள் ஒருமுறை சொல்லிக் கொள்ள வேண்டும். இத்தகைய மனத்தயாரிப்பு, ஒவ்வொரு விடயத்திலும் ஒவ்வொருவருக்கும் மிகவும் உதவும்.

கோபப்படுவது என்பது மோசமானது. அதைவிட அதன் கோரப் பிடிகளில் நீண்டநேரம் சிக்கிக் கொண்டிருப்பது என்பது மிக மோசமானது.


**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பூசமும் இணுவைக் கந்தனின் உலகப் பெருமஞ்சமும்

ஈழ மணித்திருநாட்டின் இயற்கை எழில் சூழ்ந்த இணுவில் கிராமத்தில் வரலாற்றுப் பழைமை வாய்ந்த இணுவில் கந்தசுவாமி கோவில் அமைந்துள்ளது.

இங்கே பன்னிரு கரங்களுடன் அருள் மழை பொழிகின்ற மிகவும் அழகுக் கோலத்தில் அமைந்துள்ள ஆறுமுகப் பெருமான் குடிகொண்டுள்ளார். இந்த ஆலயம் 6 ஆம் நூற்றாண்டிலே தோற்றம் பெற்றதாக வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன.



முன்னொரு பொழுது முருக பக்தரான வேலாயுதர் என்பவரது கனவிலே எம்பெருமான் தோன்றி "உனது வெற்றிலைத் தோட்டத்திலே நான் குடிகொள்ள உள்ளேன். அந்த இடத்திலே எனது இரு பாதங்களால் அடையாளம் இட்டுள்ளேன். அதில் என்னை வைத்து ஆதரிப்பாயாக" எனக் கூறி மறைந்தார்.

காலை அடியவர் தனது வெற்றிலைத் தோட்டத்திற்கு சென்றதும் தான் இரவு கனவில் கண்ட காட்சி நிஜமாக இருப்பதனைக் கண்டு ஆச்சரியமடைந்து அயலவர்களை அழைத்து அந்த இடத்தில் வேல் ஒன்றினை ஊன்றி ஒரு குடிசை அமைத்து வழிபடத் தொடங்கினார்.

அந்த குடிசையில் இருந்து தன்னை நாடி வருபவர்க்கெல்லாம் துன்பங்கள், நோய்களை நீக்கி அவர்களின் வேண்டுதல்கள் அனைத்தையும் நிறைவு செய்ததனால் உருவானதே நாம் இன்று காணும் ஆலயத்தின் தோற்றம் ஆகும்.

இவ் ஆலயத்தில் ஆனி மாதத்தில் 25 தினங்கள் மஹோற்சவமாகக் கொண்டு திருவிழா நடைபெறும். அத்துடன் கந்தசஷ்டி, கார்த்திகை, தைப்பூசம் ஆகிய விழாக்களும் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

எல்லா ஆலயங்களிலும் தைப்பூசம் நடைபெறுகின்ற போதும் இலங்கையிலே இணுவில் கந்தசுவாமி கோவிலிலேயே மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. அதற்குக் காரணம் இங்கு அமைந்துள்ள உலகப் பெருமஞ்சத்தில் ஆறுமுகப் பெருமான் வீதிவலம் வந்து பக்தர்களுக்கு அருள் ஆசி வழங்குதலாகும்.

இங்குள்ள பெரு மஞ்சம் தோன்றியதும் ஒரு அற்புத நிகழ்வே 18 ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்த முருக பக்தரான பெரிய சந்நியாசியார் என்பவரது கனவிலே "எனக்கொரு மஞ்சம் அமைப்பாயாக" எனக் கூறி அதற்குரிய தோற்ற அமைப்புக்களையும் மனதிலே காட்டி மறைந்தார்.

இந்த அடியவர் மஞ்சம் செய்வது பற்றி முருகப் பெருமானை நித்தமும் தியானித்துக் கொண்டிருந்த போது "மஞ்சம் செய்வதற்கு சிற்பாச்சாரிமார் குறித்த நாளிலே காங்கேசன்துறைமுகத்தை வந்தடைவர். அழைத்து வந்து மஞ்சம் செய்" என திருவாய் மலர்ந்தார்.

மகிழ்வடைந்த பெரிய சந்நியாசியார் அக் குறித்த தினத்திலே அங்கே சென்றதும் ஒரு கூட்டத்தினர் அக் கடற்கரையில் நின்றனர். இவரைக் கண்டதும் தேடி வந்து "நீங்கள் தானே அன்று இந்தியாவில் வந்து எங்களை யாழ்ப்பாணத்திலுள்ள இணுவிலில் மஞ்சம் செய்ய அழைத்தது" என வினாவினர்.

சந்நியாசியார் தான் ஆலயத்தை விட்டு எங்கேயும் செல்லவில்லை. இது முருகப் பெருமான் தான் சந்நியாசியார் வடிவிலே அங்கே சென்று அழைத்ததை எல்லோரும் உணர்ந்து ஆனந்தக் கூத்தாடினர்.

அவர்களை அழைத்து வந்து உருவாக்கியதே இன்று நாம் காணும் உலகப் பெருமஞ்சமாகும்.

இம் மஞ்சம் எத்தனையோ விதமான விபரிக்க முடியாத அளவு அழகிய நுட்ப வேலைப்பாடுகளை உடைய ஆயிரக்கணக்கான சிற்பங்களைக் கொண்டமைந்தது. அதன் தோற்றமும் பிரமாண்டமான அமைப்பும் பார்ப்போரை மெய் சிலிர்க்க வைப்பதுடன் தொழில்நுட்பம் இல்லாத பல நூற்றாண்டுகளுக்கு முன் இவ்வாறு செய்துள்ளார்களா? என அதிசயிக்க வைக்கும்.

பண்டைய காலத்தில் மஞ்சத் திருவிழாவைக் காண பல தேசங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியவர்கள் முதல் நாளே வந்து தங்கிக் குளங்களில் நீராடி பொங்கிப் படைத்து ஆடிப்பாடி வழிபட்டுச் சென்றார்கள் என எமது முன்னோர்கள் கூறுவார்கள். தற்பொழுது மிக நீண்ட காலத்தின் பின்னர் மீண்டும் பல கிராமங்களைச் சேர்ந்த பக்தர்கள் ஒன்றாகக் கூடி பால்குடம் எடுத்து எம்பெருமானுக்கு அபிஷேகம் செய்தும் பொங்கிப் படையல் செய்தும் முருகன் புகழ்பாடி வழிபாடு செய்கின்றனர்.

மஞ்சத் திருவிழாவில் பாரம்பரிய கலை நிகழ்வுகளாக கரகம், கம்படி, சிலம்படி, தீப்பந்தம் சுற்றுதல், பொம்மலாட்டம் என்பனவும் மிகச் சிறப்பாக இடம்பெறுகின்றன.

இவ்வாறு மிகச் சிறப்பாக 31.01.2018 இன்று புதன் கிழமை மஞ்சத் திருவிழா நடைபெறவுள்ளது.

வாழ்நாளில் ஒருதடவையாவது தரிசிக்க வேண்டிய இம் மஞ்சத்தை இன்றைய தினம் வந்து தரிசித்து முருகப் பெருமானிடம் சகல செல்வங்களையும் பெற்று வாழ்வில் உயர்வடைவீர்களாக.

ஆனந்தராசா
ஜெயமோகனராஜ்
இணுவில்.

## ஆயிரம் பிரச்சினைகள் வந்தாலும்

# கல்விக்காக வழங்கும் ஊக்கத்தை பெற்றோர்கள் கைவிடக்கூடாது

## வடக்கு மாகாண ஆளுநர் அறிவுரை








(யாழ்ப்பாணம்)

பெற்றோர்களுக்கு பல பிரச்சினைகள் வந்தாலும், பிள்ளைகளின் கல்விக்காக வழங்கும் ஊக்கத்தினை ஒருபோதும் கைவிடக்கூடாது என வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

யாழ்.இந்து கல்லூரியின் தரம் 6 மாணவர்களுக்கான கால்கோள்விழா நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,


கல்வியில் நாம் ஒரு இலக்கை அடைய வேண்டுமானால் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் ஒரு இலக்கை நோக்கி பயணிக்க வேண்டியது அவசியமாகின்றது.

பாரம்பரிய செல்வம் இல்லாது நாமே எமக்காக தேடிக் கொள்ளும் செல்வம்தான் கல்வி ஆகும். பெற்றோர்களுக்கு ஆயிரம் பிரச்சினைகள் வந்தாலும் கல்விக்காக உங்கள் பிள்ளைகளுக்கு வழங்கும் ஊக்கத்தைக் கைவிடக்கூடாது.

நான் அறிந்ததற்கு அமைய முன்னைய காலத்தில் வீதி விளக்குகளில் இருந்து படித்தவர்கள், முருங்கைக்காய்சொதியும் சோறும் சாப்பிட்டு வறுமையில் படித்தவர்கள் பின்னர் பேராசிரியர்களாகவும், வைத்தியர்களாகவும், பொறியியலாளர்களாகவும் வந்திருப்பதனை அறிந்திருக்கின்றேன்.

தற்போது சகல வசதிகளும் இங்கே கிடைக்கப் பெற்றிருக்கின்றன. இதனைப் பயன்படுத்தி கல்வியிலே முன்னேற்றம் அடைய வேண்டும். மீண்டும் யாழ்ப்பாணத்தின் கல்வித் தரத்தை பழைய நிலைக்குக் கொண்டு வர மாணவர்கள், ஆசிரியார்கள், பெற்றோரர்கள் ஒத்துழைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் நெற்புதிர் அறுவடை விழா நேற்றுக்காலை இடம்பெற்றது. தைப்பூசத்தினத்திற்கு முதல் நாள் கொண்டாடப்படும் இப் பண்பாட்டு விழாவில் முதலா வது புதிரை அறுவடை செய்ய ஆலயத்திற்குச் சொந்தமான மட்டுவிலிலுள்ள வயலில் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து கந்தனுக்கு படையல் செய்து பூசைகள் இடம்பெற்றன.

(படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# யாழில் 2350 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்





(யாழ்ப்பாணம்)

மலேசிய மஹா கருணை நிறுவனத்தின் உதவியில் யாழ். மாவட்டத்தில் உள்ள 2350 பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 26ஆம் திகதி பலாலியில் உள்ள பாதுகாப்பு தலைமையகத்தில் இடம்பெற்றது.

பாதுகாப்பு படைகளின் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாரச்சியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் உரும்பிராய் இந்து கல்லூரி, தெலிப்பளை யூனியன் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் 2350 மாணவ மாணவிகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் மலேசிய மஹா கருணை நிறுவனத்தின் சங்கத் தலைவர் பூட்டா வத்தெ ஸ்ரீ சரணங்கர தேரர், உலக இளைய சங்கத்தின் செயளாளர் முகுணுவெல அனுருந்த தேரர், மலேசிய மஹா கருணை நிறுவனத்தின் பொருப்பாளர் ஜெகப்செம் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-9)

# மாவிட்டபுரத்தில் இன்று தைப்பூச இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவிட்டபுரம் கந்த சுவாமி கோவில் தைப்பூச இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.

இதில் அடியார்கள் அனைவரும் பங்குபற்றி அர்ச்சனை ஆராதனைகள் மூலம் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றி மாவைக் கந்தனின் அருளைப்பெறலாம். அதைத் தொடர்ந்து இரவு 9.15 மணிக்கு சண்முகப் பெருமானின் திருமஞ்ச வீதி உலா இடம்பெறும். (இ-8)

# நிலாமுற்றம்-சித்த மருத்துவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவதுறையின் 4ஆம் வருட சமூக நலப்பிரிவு மாணவர்களால் நிலா முற்றம் சித்த மருத்துவத்துறையின் செயலமர்வு இன்று காலை 9 மணியளவில் கைதடி சித்தமருத்துவக் கல்லூரியில் இடம்பெறும்.

இவ் அமர்வில் தொற்றா நோய்களிற்கு சித்த மருத்துவ ரீதியிலான விளக்கங்களும் அதிலிருந்து விடுபட்டு சுகவாழ்வு வாழ்வதற்கு சித்த மருத்துவம் கூறும் விடயங்களையும் எடுத்தியம்பவுள்ளனர்.

இதில் மருத்துவ அதிகாரிகள், பரம்பரை மருத்துவர்கள், சித்த மருத்துவம் பயிலும் மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகுகளின் தலைவர் ச.விவலியன் அறிவித்துள்ளார். (இ-8)


# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கரணவாய்)

யாழ்.கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 3ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர்.எம். தனகலிங்கம் தலைமையில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை விஞ்ஞானபீட ஆலோசகர் சி.அம்பிகாவரன் கலந்து கொள்வார். (இ-8-60)



வரணி கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த "செயற்பட்டு மகிழ்வோம்" நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக பளை புகையிரதநிலைய அதிகாரி என்.புஸ்பகுமார், சிறப்பு விருந்தினராக் மோகன்ரைல்ஸ் பாதுகாப்பு சேவைப்பணிப்பாளர் திருமதி நிறோஜினி புஸ்பகுமார், உதவிக்கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) எஸ்.திருக்குமரன், கௌரவ விருந்தினராக நலன் விரும்பி ஆசிரியர் தி.ஞானசேகரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



யாழ்.வரணி சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது.

(படங்கள்:-வரணி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டைத் துண்டாடவோ விற்பனை செய்யவோ திட்டமிட்டவர்கள் நாங்களல்ல-ஜனாதிபதி பதிலடி

(கொழும்பு)

வரலாற்றில் இந்த நாட்டை ஆட்சி செய்த எந்தவொரு அரசரோ அல்லது ஜனாதிபதியோ மேற்கொள்ளாத வகையில் நாட்டின் ஒரு பகுதியை வெளிநாடொன்றுக்கு உரிமை எழுதி வழங்கத் திட்டமிட்டவர்களே நாட்டைத் துண்டாடுவதாகவும் நாட்டை விற்பனை செய்வதாகவும் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது கவலைக்குரியதாகும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகரத்திற்கு 240 ஏக்கர் காணியுரிமையை சீனாவுக்கு வழங்க திட்டமிட்டமை பற்றியும், கொழும்பு இராணுவத் தலைமையகம் அமைந்துள்ள 6 ஏக்கர் காணியை சங்ரில்லா ஹோட்டல் குழுமத்திற்கு வழங்கியமையும் மறந்து போய்விட்டதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் மாத்தளை பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு குப்பைமேடொன்றைக் கூட அகற்ற முடியாதிருப்பதாக முன்னாள் தலைவர் குறிப்பிட்டுள்ளதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி முன்னாள் தலைவர் குப்பை மேட்டிலும் கொள்ளையடித்ததை இந்த நாட்டு மக்கள் நன்கறிவார்கள் எனத் தெரிவித்தார்.

ரதுபஸ்வலவில் நீருக்காக ஏங்கிய மக்களுக்கு துப்பாக்கிச்சூடு நடத்தியதைப்போன்று, கட்டுநாயக்கவில் தமது உரிமைகளைக்கேட்ட ஊழியர்கள் மீது துப்பாக்கிசூடு நடத்தி கொலை செய்தமை, கொலன்னாவை பிரதேசத்திற்கு குப்பைகளைக் கொண்டு வர வேண்டாம் எனக்கூறிய போது அவர்களுக்கெதிராக துப்பாக்கியை நீட்டி பல உயிர்கள் பலியாகும் வரை குப்பை மேட்டை வான் உயரத்திற்கு நிறைத்தவர்கள் முன்னாள் ஆட்சியாளர்களே என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

10 வருடங்களாக பெற்றுக் கொள்ளப்பட்ட 10 டிரில்லியன் வெளிநாட்டுக் கடனில் ஒரு டிரில்லியன் ரூபாவுக்கு மட்டுமே நிதியமைச்சிடம் ஆவணங்கள் இருப்பதாகவும் எஞ்சிய தொகைக்கு என்ன நடந்தது என்று தெரியாது என்று தான் அண்மையில் குறிப்பிட்ட விடயத்திற்கு பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி அமெரிக்க டொலர் டிரில்லியன் கணக்கில் குறிப்பிட்டதாக முன்னாள் தலைவர் தெரிவித்த விடயத்தை நினைவுகூர்ந்த ஜனாதிபதி தான் அதனைக் கூறியது பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ள அறிக்கைகளுக்கேற்ப மிகவும் பொறுப்புடனேயாகும் என்றும் முன்னாள் ஜனாதிபதி 2015 ஜனவரி 08 ஆம் திகதி கணக்கை பிழைவிட்டதைப்போன்று மீண்டும் கணக்கை பிழைவிட்டிருப்பதாக தெரிவித்தார்.

சிலரைப்போன்று ஜனாதிபதி பதவியில் என்றுமே நிலைத்திருப்பதற்காக தான் அரசியலமைப்பை மாற்றப் போவதில்லை என்றும், நாட்டின் கற்ற இளம் தலைமுறைக்கு பொறுப்பளிக்க தயார்படுத்துவதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை மேற்கொண்டதைத் தொடர்ந்து இன்று இந்த நாட்டை ஆட்சி செய்வது அரசர் ஒருவரோ, ஜனாதிபதி ஒருவரோ அன்றி மக்களேயாகும் என்றும் தெரிவித்தார்.



சந்தர்ப்பவாத ஊழல் அரசியல்வாதிகளை விரட்டியடிக்கும் போராட்டத்திற்கு பெப்ரவரி 10ஆம் திகதி மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி வெற்றிலைக்கல்லாது வேறு எந்தவொரு கட்சிக்கும் வழங்கப்படும் வாக்கு ஊழல் அரசியலை பலப்படுத்த வழங்கும் என்பதை நாட்டு மக்கள் மறந்து விடக்கூடாது என்றும் தெரிவித்தார்.

இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் போட்டியிடும் அபேட்சகர்களின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக ஜனாதிபதி அவர்களின் தலைமையில் நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மக்கள் சந்திப்பு தொடரில் மற்றுமொரு மக்கள் சந்திப்பு பெரும் எண்ணிக்கையான மக்கள் பங்குபற்றலுடன் மாத்தளையில் இடம்பெற்றது.

தேசிய சுதந்திர முன்னணியின் மாத்தளைத் தொகுதி நகர சபை அபேட்சகர் பிரியந்த ஹேரத், 2011ஆம் ஆண்டு ஹெல உறுமய இளைஞர் அமைப்பின் தலைவர் ஜானக ஆரியரத்ன, ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாண பட்டதாரிகள் சங்கத்தின் தலைமைச் செயலாளரும் பொருளியல் விரிவுரையாளருமான மகிந்த விஜயசேகர, மாத்தளை பிரதேச சபையின் ஐக்கிய தேசியக் கட்சி முன்னாள் உப தலைவர் நிமல் சிறி விக்ரமநாயக்க ஆகியோரும் ஜனாதிபதி முன்னெடுத்துள்ள தூய ஆட்சிக்கான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டனர்.

அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பிரதியமைச்சர் லக்ஷ்மன் வசந்த பெரேரா, நந்திமித்ர ஏகநாயக்க, மத்திய மாகாண ஆளுநர் நிலுகா ஏகநாயக்க, முதலமைச்சர் சரத் ஏகநாயக்க, வீரகுமார ஏகநாயக்க, அனுருத்த பொல்கம்பொல ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1317

Search for people, places and things Nagendram Home

### சுதாமதி




### றொசானா




### பிரியதர்சன்




### கோமதி




### ரேணுகா




### ஆதித்தன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதி மோசடி விசாரணை விவகாரம்

# ஜனாதிபதியின் கூட்டம் சம்பந்தனால் புறக்கணிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட்டிய அவசர கூட்டத்தில், எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் பங்கேற்கவில்லை.

நிதி மோசடி விசாரணை ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மீதான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிப்பதற்காக, கட்சித் தலைவர்களின் அவசர கூட்டத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் கூட்டியிருந்தார்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கூட்டு எதிரணி மற்றும் ஜே.வி.பி உள்ளிட்ட கட்சிகள் பங்கேற்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கூட்டு எதிரணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் தம்மால் கூட்டத்தில் பங்கேற்க முடியவில்லை என்று ஜனாதிபதி செயலகத்துக்கு கடிதம் அனுப்பியிருந்ததாக தெரிய வருகிறது.

இரா.சம்பந்தன், கடந்த மூன்று நாட்களாக வன்னிப் பகுதியில் உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டு வருவதால், அவர் ஜனாதிபதியின் கூட்டத்தில் பங்கேற்கவில்லை. அதேவேளை



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் யாரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இந்தக் கூட்டத்தில், பிணைமுறி மோசடி குறித்த ஆணைக்குழுவின் அறிக்கையின் பக்கங்கள் காணாமல் போயிருப்பது தொடர்பாக கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய் என்று ஜனாதிபதி விளக்கமளித்துள்ளார்.

அதேவேளை, ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் கையெழுத்திட்ட அறிக்கையின் மூலப் பிரதியை அதிபரின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ காண்பித்து, அதுவே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கூறினார் என்று, இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டியூ.குணசேகர தெரிவித்தார்.

அத்துடன், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்படும் வரை, குற்றவாளிகளின் கைகளில் கிடைக்காமல் சில குறிப்பிட்ட தகவல்கள் இரகசியமாக வைக்கப்பட வேண்டும் என்று ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது என்றும் ஒஸ்ரின் பெர்னாண்டோ கூறினார் என்றும் அவர் தெரிவித்தார்..

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற சட்டமா அதிபர் ஜெயந்த ஜெயசூரிய, ஆணைக் குழுவின் அறிக்கைகளில் பரிந்துரைக்கப்பட்டுள்ளவாறு, குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தமது திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

சுமார் ஒரு மணி நேரம் இந்தக் கூட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இந்தியாவுடன் இணைந்தால் மட்டுமே மத்தளவுக்கு புதுவாழ்வு கிடைக்கும்

## அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவிப்பு

(கொழும்பு)

மத்தள விமான நிலையத்தை, கூட்டு முயற்சியாக, அபிவிருத்தி செய்ய இந்தியாவின் விமானப் போக்குவரத்து அதிகார சபையுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுக்களை நடத்தி வருகிறது என அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் அனைத்துலக வர்த்தக அமைச்சர் மலிக் சமர விக்கிரம தெரிவித்துள்ளார்.

"மத்தள விமான நிலையத்தை இந்தியாவின் விமானப் போக்குவரத்து அதிகார சபையுடன் இணைந்து கூட்டு முயற்சியாக இலங்கை சிவில் விமானப் போக்கு வரத்து அதிகார சபை, கூட்டு அனைத்துலக விமான நிலையமாக அபிவிருத்தி செய்ய வுள்ளது.

இந்திய விமானப் போக்குவரத்து அதிகார சபை இந்த திட்டத்தில் பங்காளராக இணைந்து கொண்டால், மாத்திரமே இந்தத் திட்டம் பொருளாதார ரீதியாக சாத்திய மாகும்.

இது தொடர்பான உடன்பாடு எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் இறுதிப்படுத்தப்படும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)



# மட்டு கருவேப்பங்கேணியில் கசிப்பு வேட்டை ஒருவர் கைது, உற்பத்திப் பொருட்களும் மீட்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள கருவேப்பங்கேணி பகுதியில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையமொன்று நேற்று முன் தினம் திங்கட்கிழமை பிற்பகல் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.



இதன்போது அங்கிருந்து கசிப்பு மற்றும் கசிப்பு தயாரிப்புப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதோடு கசிப்பு காய்ச்சுவதில் ஈடுபட்டிருந்த ஒருவரும் கைது செய்யப்பட்டதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்படி கசிப்பு உற்பத்தி செயயும் இரகசிய இடத்தைப் பொலிஸார் முற்றுகையிட்டனர்.

இதன்போது கசிப்பு தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் 42 லீற்றர் கோடா மற்றும் 13 லீற்றர் கசிப்பு ஆகியவற்றையும் கசிப்பு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ள பொலிஸார் கசிப்பு காய்ச்சுவதில் ஈடுபட்டிருந்த வேளையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார். (இ-8)



பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் நடைபெற்ற இவ் இரத்ததான நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (படங்கள்:- மகாலிங்கம்)

# திருக்குறள் மனனப் போட்டி

(கொழும்பு)

அகில இலங்கைக் கம்பன் கழகம் ஆண்டுதோறும் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலுமாகக் கம்பன் விழாக்களை நடத்தி வருகிறது. அவ்விழாக்களின் வரிசையில் 2018 ஆம் ஆண்டுக்கான கொழும்புக் கம்பன் விழாவினை எதிர்வரும் மார்ச் மாதம் நடத்தவுள்ளது. இவ் விழாவை முன்னிட்டு நாவலர் நற்பணி மன்றத் தலைவர் என்.கருணையானந்தனின் அனுசரணையுடன் நடத்தப்படும் திருக்குறள் மனனப் போட்டிக்கான விபரங்களைக் கொழும்புக் கம்பன்கழகம் அறிவித்துள்ளது.

நாவலர் நற்பணி மன்றத் தலைவர் என்.கருணையானந்தனின் அனுசரணையுடன் நடைபெறும் இப்போட்டி இரு பிரிவுகளாக நடைபெறும். பாலர் பிரிவில் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி கற்கும் மாணவர்களும் கீழ்ப் பிரிவில் தரம் 6 முதல் 8 வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்களும் கலந்து கொள்ளலாம். பாலர் பிரிவில் கலந்து கொள்வோர் குறிப்பிட்ட ஐந்து அதிகாரங்களை (50 குறள்கள்) மனனம் செய்தல் வேண்டும்.

கீழ்ப் பிரிவில் கலந்து கொள்வோர் குறிப்பிட்ட பத்து அதிகாரங்களை (100 குறள்கள்) மனனம் செய்வதோடு அக்குறள்களுக்கான பொருளறிவையும் பெற்றிருத்தல் வேண்டும். மனனம் செய்ய வேண்டிய அதிகாரங்கள் பற்றிய விபரங்களைப் போட்டியாளர்கள் உகரம் இணையத் தளத்தில்(www.uharam.com) அறிந்து கொள்ளலாம்.

மேற்படி திருக்குறள் மனனப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப் பெற்ற விண்ணப்பப் படிவத்தில் தமது முழுப் பெயர், வயது, பிறந்த திகதி, முகவரி, தொலைபேசி இலக்கம், மாணவராயின் பாடசாலையின் பெயர் ஆகியவற்றைக் குறிப்பதோடு தாம் கலந்து கொள்ளவுள்ள போட்டி விபரங்களையும் குறிப்பிட்டு, [illegible]. 12, இராமகிருஷ்ண கார்டன், கொழும்பு - 6 (Secretary, Colombo Kamban Kazhakam, 12, Ramakrishna Garden, Colombo - 06) எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் மேற்பக்கத்தில் போட்டியாளர் விண்ணப்பிக்கும் போட்டி விபரத்தையும் எழுதுதல் வேண்டும். 2018 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும். போட்டி நடைபெறும் திகதி போட்டியாளர்களுக்குத் தனித்தனியே அறிவிக்கப்படும். பாடசாலை மாணவர்களது விண்ணப்பங்களைத் தனித்தோ, தமிழ்மன்றங்களின் ஊடாக ஒரே தொகுதியாகவோ அதிபரின் உறுதிப்படுத்தலுடன் அனுப்பி வைக்கலாம்.

தரமான நடுவர் குழுவினால் தெரிவு செய்யப் பெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படும் எனவும் பேச்சுப்போட்டியில் இயல்பாளுமையை வெளிப்படுத்தும் போட்டியாளர்கள் கம்பன் விழா நிகழ்ச்சிகளில் இணைத்துக் கொள்ளப்படுவர் எனவும் கொழும்புக் கம்பன் கழகம் அறிவித்துள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் புதிய வெளிவிவகாரச் செயலர் இலங்கை மீது கவனம் செலுத்துவார்

(கொழும்பு)

இலங்கையுடன் உறவுகளை முன்னேற்றுவது தொடர்பாக, இந்திய வெளிவிவகாரச் செயலராகப் பதவியேற்றுள்ள விஜய் கேசவ் கோகலே கவனம் செலுத்துவார் என்று பி.ரி.ஐ. செய்தி வெளியிட்டுள்ளது.

சீன மற்றும் கிழக்காசிய விவகாரங்களில் அனுபவம் வாய்ந்த இராஜதந்திரியான, விஜய் கேசவ் கோகலே நேற்று முன்தினம் இந்திய வெளி விவகாரச் செயலராக பதவியேற்றார். அடுத்த இரண்டு ஆண்டுக்கு அவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு முன்னதாக, இந்திய வெளிவிவகார அமைச்சில், பொருளாதார உறவுகளுக்கான செயலராகப் பணியாற்றியிருந்தார்.

இந்தியாவின் புதிய வெளிவிவகாரச் செயலராக பொறுப்பேற்றுள்ள விஜய் கோகலே, இலங்கை, நேபாளம், மாலைதீவுகள், மியன்மார் உள்ளிட்ட அண்டை நாடுகளுடனான உறவுகளை முன்னேற்றுவது உள்ளிட்ட பல முனைச் சவால்களுக்கு முகம் கொடுத்திருக்கிறார் என்று பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (இ-7)



## உள்ளூராட்சி தேர்தல்; முன்னரும் பின்னரும் நிறைநிலா முழுநாள் கருத்தரங்கு இன்று

(யாழ்ப்பாணம்)

சிந்தனைக்கூடம் - யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனம் "உள்ளூராட்சித் தேர்தல், முன்னரும் பின்னரும்" என்றதலைப்பில் நிறைநிலா முழுநாள் கருத்தரங்கு ஒன்றினை இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை 121,2ம், குறுக்குத் தெரு,யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள சிந்தனைக்கூடக் கேட்போர் கூடத்தில் நடத்தவுள்ளது.

யாழ்ப்பாணம் முகாமையாளர் அமைப்பபைச் சேர்ந்த வி.நிரஞ்சன் தலைமையில் இடம்பெற்றவுள்ள முழுநாள் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறைத்தலைவர் கலாநிதி கே.ரி.கணேசலிங்கம், விரிவுரையாளர் செல்வி னால்ட் சிமன், ஓய்வுநிலை வட கீழ் மாகாண மனித வள அபிவிருத்தி முகாமையாளர் சி. கிருஸ்னானந்தன், தேர்தல் ஆணைக்குழு பிரதி ஆணையாளர் த.அகிலன், ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கான இயக்கத்தைச் சேர்ந்த விமல் பர்ணாந்து, இ.சிவகுருநாதன் ஆகியோர் வளவாளர்களாகப் பங்கு கொண்டு விரவு ரைகளையும் பயிற்சியையும் வழங்கவுள்ளனர்.

மேற்படி கருத்தரங்கிற்கு ஆர்வமுள்ள எவரும் பங்கு பற்றுனர்களாக கலந்து கொண்டு பயன்பெற முடியும் முக்கியமாக தேர்தலில் களமிறங்கிய வேட் பாளர்கள்.உள்ளூராட்சி அமைப்புக்களில் பணியா ற்றுவோர், ஊடகவியலாளர்கள், ஆர்வமுள்ள பொது மக்கள் போன்றோர் கலந்து பயன்பெறு மாறு சிந்தனைக் கூட பணிப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். (இ)

## சடலங்களை கடலில் அழிக்க பயன்படுத்தப்பட்ட கடற்படைப் படகின் கட்டளை அதிகாரி கைது

(கொழும்பு)

கொழும்பு நகரப் பகுதியில் 2008ஆம் ஆண்டு 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, முன்னாள் கடற்படை புலனாய்வு அதிகாரி ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கடற்படையில் சீவ் பெற்றி அதிகாரியாகப் பணியாற்றிய, லுதுவகன்டிகே துசார மென்டிஸ் என்ற இந்த முன்னாள் புலனாய்வு அதிகாரி கைது செய்யப்பட்டு, கோட்டே நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட முன்னாள் கடற்படை அதிகாரி, இலங்கை கடற்படையின் லெப்.கொமாண்டர் சுமித் ரணசிங்கவின் கீழ் இயங்கிய சிறப்பு புலனாய்வு பிரிவில் பணியாற்றியிருந்தார்.

கட்டுநாயக்கவில் 2009 ஆம் ஆண்டு அலி அன்வர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் இவர் தொடர்புபட்டுள்ளார்.

கடற்படையின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவுக்கு தகவல்களை வழங்கும் முகவராக, அலி அன்வர் செயற்பட்டிருந்தார். எனினும் பின்னர் அவரும் காணாமல் ஆக்கப்பட்டார்.

அத்துடன் கடத்தப்பட்டு கொழும்பு, சைத்திய வீதியில் உள்ள கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 இளைஞர்களை, திருகோணமலை கடற்படைத்தளத்தில் உள்ள கன்சைட் முகாமுக்கு கொண்டு சென்ற கடற்படை சிறப்பு புலனாய்வுக் குழுவிலும் துசார மென்டிஸ் இடம் பெற்றிருந்தார்.

சடலங்களைக் கடலில் கொண்டு போய் அழிப்பதற்கு, கடற்படையின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவுக்கு உதவுவதற்காக வழங்கப்பட்டிருந்த படகுக்குப் பொறுப்பான அதிகாரியாக மென்டிஸ் பணியாற்றினார் என்று குற்றப்புலனாய்வுப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர் பராக்கிரம கடற்படைத் தளத்தில் லெப்.கொமாண்டர் ரணசிங்கவின் கீழ் 2008-2009 காலப் பகுதியில் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கலையகத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஐ.பி.சி தமிழ் தாயகக் கலையகத் திறப்பு விழா இன்று முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம், இல.10ஏ பருத்தித்துறை வீதியில் உள்ள கலையகத்தில் சம்பிரதாய பூர்வமாக இடம்பெறும். (இ-8)


### தொலைந்துவிட்டது

இராமநாதபுரம் புதுக்காட்டைச் சேர்ந்த சுப்பிரமணியம் இராசலிங்கம் ஆகிய எனது மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் இன்சூரன்ஸ் ரக்ஸ் மற்றும் மூன்று பவுண் தங்கச்சங்கிலி இருநூறு ரூபா பணம் அடங்கிய மணிபர்ஸ் என்பன 29.01.2018 திங்கள் பிற்பகல் 2.30மணிக்கு கிளிநொச்சியில் இருந்து இராமநாதபுரம் புறப்படும் தனியார் பேருந்தில் வரும் போது கிளிநொச்சிக்கும் வட்டக்கச்சி சந்தைக்கும் இடையில் தொலைந்துவிட்டது. இதனைக்கண்டெடுத்தவர்கள் வட்டக்கச்சி சந்தையடி கிசோ காட்வெயர்சில் தயவுசெய்து ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்

தகவல்: சு.இராசலிங்கம்,
புதுக்காடு, இராமநாதபுரம்.
TP: 077 399 6562

### யா/ விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி-2018

இடம்: கல்லூரி மைதானம்

காலம்: 2018.02.03 (சனி) பி.ப 1.30 மணி

தலைமை: திரு.M.தனகலிங்கம் (அதிபர்)

பிரதமவிருந்தினர்: திரு.C. அம்பிகாவரன் (ஓய்வுநிலை விஞ்ஞான பாட ஆலோசகர்)

அனைத்து பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கரவெட்டி
021 226 3138

கல்லூரி சமூகம்
பழைய மாணவர்
சங்கம்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை பல்கலைக்கழக அனுமதி 2017/2018

மொழிபெயர்ப்புக் கற்கைநெறியில் சிறப்புக் கலைமாணிக்கு மாணவர்களை
அனுமதிப்பதற்கான உளச்சார்புப் பரீட்சை
(தமிழ் மற்றும் ஆங்கிலம்)

மேற்படி நான்கு வருட பட்டப்படிப்புக் கற்கை நெறிக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து 16.02.2018 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

அனுமதிக்கான பொது நிபந்தனைகளும் தகைமைகளும்

மொழிபெயர்ப்புக் கற்கைநெறியைத் தெரிவு செய்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரிகள் 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2017/2018 கைந்நூல் பக்கம் 89, பகுதி 2.2.8.28 ற்கு அமைய மூன்று சித்திகள்(S) பெற்றிருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் கலைப்பிரிவு, வர்த்தகப்பிரிவு அல்லது விஞ்ஞானப்பிரிவு என எப்பிரிவைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம்.

உளச்சார்புப்பரீட்சை

மேற்குறித்த கற்கைநெறி அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி மற்றும் ஆங்கிலமொழித் திறமை அடிப்படையிலான உளச்சார்புப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்

- விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவத்தை www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
- மேற்படி தகுதிகாண் பரீட்சைக்கான விண்ணப்பத்துடன் ரூபா 300/- ஐ ஏதாவதொரு மக்கள் வங்கிக் கிளையில், நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பதன் கணக்கு இலக்கம் 162100160000880 இல் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டுடன் பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவானால் உறுதிப்படுத்தப்பட்ட க.பொ.த. (உ/த) 2017 பெறுபேற்றுப் பத்திரத்தினது போட்டோப் பிரதியும் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். பரீட்சைப் பெறுபேற்றில் அல்லது பெயரில் மாற்றங்கள் ஏதும் இருப்பின் அதற்குரிய சத்தியக் கடதாசி சமர்ப்பிக்கப்பட்டு உறுதி செய்யப்படல் வேண்டும்.
- பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் 16.02.2018 ஆம் திகதிக்கு முன்னதாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர், அனுமதிகள் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் மொழிபெயர்ப்புக் கற்கைநெறியில் சிறப்புக் கலைமாணிக்கு மாணவர் களை அனுமதிப்பதற்கான உளச்சார்புப் பரீட்சை எனக் குறிப்பிட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
- அனுமதிக்குரிய ஆகக் குறைந்த தகைமையைக் கொண்டிராததும், பணம் செலுத்திய பற்றுச் சீட்டுச் சமர்ப்பிக்கப்படாததும், பெறுபேற்றுப் பத்திரத்தின் உறுதி செய்யப்பட்ட போட்டோப் பிரதிகள் இணைக்கப்படாததும், விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
- உளச்சார்புப் பரீட்சை 07.04.2018 அன்று யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பில் நடைபெறும்.
- பிரவேச அனுமதித் தகைமையைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 021 222 6714.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(இ-1435)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## மண்ணாக மாறிய பொன்!



(நேற்றைய தொடர்ச்சி)

கால் காசு, அரைக்காசு என்று சேர்த்து வைத்திருந்த தங்கம், வெள்ளிக் காசுகளைக் கொண்டுபோய் அண்டாக்களில் போட்டார்கள். அதற்குப் பதிலாக ஒரு வாரம் கழித்து எல்லோருக்கும் ஓட்டுச்சில்லுகள் வழங்கப்பட்டன. சிறுகச்சிறுகச் சேர்த்து வைத்த காசு போகிறதே என்று மக்கள் அழுதார்கள்.

காணாவூர் அருகிலுள்ள காட்டில் குபேர மாளிகை கட்டி வாழ்ந்து வந்த குபேரனின் தேவதைகளுக்கு மக்களின் அழுகைச் சத்தம் கேட்டது. தேவதைகள் காணாவூர் நாட்டின் மீது பறந்து மக்களின் நிலைமையைப் பார்த்து வருந்தினார்கள்.

அவர்களுக்குத் தோலிருக்கச் சுளை முழுங்கி ராஜாவின் மீது கோபம் வந்தது. அவருக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்று நினைத்தார்கள். அரண் மனைக்குப் பறந்து சென்றார் கள். அங்கே ராஜாவும் மந்திரிகளும் தங்க நாணயக் குவியல்களின் மீது படுத்து உருண்டு புரண்டுகொண் டிருந்தார்கள்.

"எல்லாத் தங்கமும் என்னிடம் வந்து விட்டது. நான் தங்கராஜா" என்று சிரித்துக் கொண்டிருந்தார். இதைப் பார்த்த குபேரத் தேவதைகளுக்குக் கோபம் வராமல் இருக்குமா? அவர்கள் தங்களுடைய சேலையிலிருந்து ஒரு நூலை உருவிப் போட்டார்கள்.

அவ்வளவுதான்: அத்தனை தங்கமும் மண்ணாக மாறிவிட்டது. ராஜாவும், மந்திரிகளும் மணல் குவியல்களில் புரண்டு கொண்டிருந்தார்கள்.

அதிர்ச்சி அடைந்த ராஜா எழுந்து அரண்மனைக்குள் ஓடினார்.

அவருடைய சேர்த்து வைத்திருந்த ஆபரணங்களைத் தொட்டார். அவை மண்ணாகிவிட்டது.

வயிறு பசிக்கிறது என்று சாப்பாட்டு மேசைக்குப் போனார். உணவைத் தொட்டார். அதுவும் மண்ணாகி விட்டது. அந்தப்புரத்துக்குப் போனார். ராணியைத் தொட்டார். ராணி மண் சிலையாகிவிட்டார்.

ஆசையோடு ஓடி வந்த குழந்தையைத் தூக்கினார். குழந்தையும் மண்ணாகிப் பொலபொலவென உதிர்ந்துவிட்டது.

ராஜா ஆசைப்பட்டுத் தொட்டதெல்லாம் மண்ணாகிவிட்டது. மந்திரிகள் தொட்டவை எல்லாம் மண்ணாகி உதிர்ந்தன. எல்லோரும் அழுது கொண்டே அரண்மனைக்கு ஓடி வந்தனர். அரண்மனை கொலுமண்டபத்தில் ராஜாவும் அழுது கொண்டே சிம்மாசனத்தில் உட்கார்ந்தார். அதுவும் மண்ணாகி உதிரத் தரையில் விழுந்தார். எல்லோரும் தரையில் உட்கார்ந்து ஆலோசித்தனர்.

மக்களிடம் வாங்கிய தங்கம், வெள்ளிக் காசுகளைத் திரும்பக் கொடுக்கச் சொல்லி உடனே ஆணையிட்டார்.

மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். குபேரத் தேவதைகளும் அரண்மனை மீது உருவிப் போட்ட அவர்களுடைய சேலை நூலைத் திரும்ப எடுத்துக்கொண்டனர். மண்ணானது எல்லாம் மீண்டும் உயிர் பெற்றன.

அதன் பிறகென்ன? காணாவூரில் ஆனந்தம் அலையடித்துக்கொண்டிருந்தது.

(முற்றும்)

## 01.2018 31 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

❖ 1606 - இங்கிலாந்து மன்னன் முதலாம் ஜேம்சிற்கு எதிராகவும் நாடாளுமன்றத்திற்கெதிராகவும் சதி முயற்சியில் இறங்கியமைக்காக காய் ஃபோக்ஸ் என்பவன் தூக்கிலிடப்பட்டான்.

❖ 1747 - பால்வினை நோய்களுக்கான முதலாவது மருத்துவ நிலையம் லண்டனில் லொக் மருத்துவமனையில் நிறுவப்பட்டது.

❖ 1876 - அனைத்து இந்தியப் பழங்குடிகளும் அவர்களுக்கென அமைக்கப்பட்ட சிறப்பு இடங்களுக்கு செல்லுமாறு ஐக்கிய அமெரிக்க அரசு உத்தரவிட்டது.

❖ 1915 - முதலாம் உலகப் போர் ஜேர்மனி ரஷ்யாவுக்கெதிராக நச்சு வாயுவைப் பயன்படுத்தியது.

❖ 1928 - லியோன் ட்ரொட்ஸ்கி க்சக்ஸ்தானுக்கு நாடுகடத்தப்பட்டார்.

❖ 1937 - சோவியத் ஒன்றியத்தில் 31 த்ரொட்ஸ்கி ஆதரவளர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

❖ 1944 - இரண்டாம் உலகப் போர்: அமெரிக்கப் படைகள் ஜப்பான் வசமிருந்த மார்ஷல் தீவுகளில் தரையிறங்கினார்கள்.

❖ 1946 - யூகொஸ்லாவியாவில் சோவியத் முறையிலான அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டு நாடு பொசுனியா எர்செகோவினா, குரொவேஷியா, மக்கெடோனியா, மொண்டெனேகுரோ, சேர்பியா மற்றும் சிலவேனியா என ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

❖ 1953 - வட கடல் பெருக்கெடுத்ததன் விளைவாக நெதர்லாந்தில் 1,800 பேர் கொல்லப்பட்டனர்.

❖ 1958 - ஐக்கிய அமெரிக்காவின் வெற்றிகரமான முதலாவது செய்மதி எக்ஸ்புளோரர் 1 விண்ணுக்கு ஏவப்பட்டது.

❖ 1961 - நாசாவின் மேர்க்குரி-ரெட்ஸ்டோன் 2 விண்கலம் ஹாம் என்ற சிம்பன்சி ஒன்றை விண்ணுக்குக் கொண்டு சென்றது.

❖ 1968 - நவூறு (யேரசுர) ஆஸ்திரேலியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

❖ 1980 - குவாட்டமாலாவில் ஸ்பெயின் தூதராலய முற்றுகையில் 39 பேர் உயிருடன் தீயிட்டுக் கொல்லப்பட்டனர்.

❖ 1990 - சோவியத் ஒன்றியத்தில் முதலாவது மாக்டொனால்ட் உணவகம் மாஸ்கோவில் திறக்கப்பட்டது.

❖ 1996 - கொழும்பு மத்திய வங்கியின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 86 பேர் கொல்லப்பட்டு 1,400 பேர் வரை படுகாயமடைந்தனர்.

❖ 2003 - ஆஸ்திரேலியா, நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் வோட்டர்ஃபோல் என்ற இடத்தில் தொடருந்து ஒன்று தடம் புரண்டதில் சாரதி உட்பட 7 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

❖ 1762 - லக்லான் மக்குவாரி, காலணித்துவ நிர்வாகி (இ. 1824)

❖ 1906 - இ. மு. வி. நாகநாதன், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (இ. 1971)

❖ 1912 - க. நா. சுப்ரமண்யம், தமிழக எழுத்தாளர், இலக்கிய விமர்சகர், மொழிபெயர்ப்பாளர் (இ. 1988)

❖ 1932 - செ. எ. ஆனந்தராஜன், இலங்கைத் தமிழ்க் கல்வியாளர், ஆசிரியர் (இ. 1985)

❖ 1932 - மசூர் மௌலானா, இலங்கை முஸ்லிம் அரசியல்வாதி (இ. 2015)

❖ 1937 - திருவிழா ஜெயசங்கர், தமிழக நாதஸ்வரக் கலைஞர்

❖ 1944 - நீலன் திருச்செல்வம், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (இ. 1999)

❖ 1981 - ஜஸ்டின் டிம்பர்லேக், அமெரிக்கப் பாடகர், நடிகர்

இறப்புகள்

❖ 1561 - பைராம் கான், முகலாயத் தளபதி (பி. 1501)

❖ 1888 - ஜான் போஸ்கோ, சலேசிய சபையை நிறுவிய இத்தாலிய மதகுரு (பி. 1815)

❖ 1933 - ஜோன் கால்ஸ்வர்தி, நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய எழுத்தாளர் (பி. 1867)

❖ 1950 - டைகர் வரதாச்சாரியார், கருநாடக இசைக் கலைஞர் (பி. 1976)

❖ 1954 - எட்வின் ஹோவர்ட் ஆர்ம்ஸ்ட்ராங், எப்.எம். வானொலியைக் கண்டுபிடித்த அமெரிக்கர் (பி. 1890)

❖ 1988 - அகிலன், தமிழக எழுத்தாளர், நாடகாசிரியர், மொழிப்பெயர்ப்பாளர் (பி. 1922)

❖ 1995 - கா. ம. வேங்கடராமையா, தமிழகக் கல்வெட்டறிஞர், தமிழறிஞர் (பி. 1912)

❖ 2009 - நாகேஷ், நகைச்சுவை நடிகர் (பி. 1933)

சிறப்பு நாள்

❖ விடுதலை நாள் (நவூறு) (1968)

❖ தேசிய குழந்தைகள் நாள் [illegible]

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 120 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 50 | 100 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 120 | 120 | 100 |
| தக்காளி | 80 | 100 | 100 | 100 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 | 80 | 40 | 40 |
| கோவா | 40 | 50 | 60 | 60 | 80 |
| கரட் | 70 | 50 | 100 | 160 | 100 |
| பூசணி | 30 | 50 | 60 | 60 | 50 |
| புடோல் | 60 | 50 | 100 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 50 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 200 | 160 | 150 |
| பெரிய வெங்காயம் | 120 | 100 | 120 | 120 | 160 |
| பாகற்காய் | 120 | 100 | 140 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 150 | 100 | 100 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 200 | 100 | 150 | 120 | 180 |
| லீக்ஸ் | 150 | 100 | 200 | 240 | 240 |
| பீற்றூட் | 40 | 100 | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 140 | 100 | 180 | 160 | 200 |
| முருங்கைக்காய் | 500 | 1000 | 800 | 600 | 1400 |
| போஞ்சி | 100 | 100 | 120 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 70 | 100 | - | 60 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 45 | 20 | 40 | 60 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 90 | 75 | 80 |
| இராசவள்ளி | 200 | 100 | 150 | 180 | 160 |
| வெங்காயப்பூ | 120 | 100 | 100 | 160 | 200 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 35 |
| ஈரப்பலா | 80 | 100 | 50 | 80 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானையைக் கொன்று கைச்சுளகால் மூடியது போல...

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேர்தல் விஞ்ஞாபனம் என்பது மக்களை ஏமாற்றும் ஆவணமா?

தேர்தல் காலங்களில் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிடுகின்ற நடைமுறை இப்போது ஒரு சம்பிரதாயமாக மாறிவிட்டது.

உண்மையில் தேர்தல் விஞ்ஞாபனம் என்பது, குறித்த அரசியல் கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் கொள்கைகளை, செயற்பாட்டை, நோக்கத்தை இலக்காக எடுத்துக் காட்டுவதாக இருக்க வேண்டும்.

சுருங்கக்கூறின் ஒரு கொள்கைப் பிரகடனத்தின் அமுலாக்கத்தை விபரிப்பதாகவே தேர்தல் விஞ்ஞாபனம் அமைய வேண்டும்.

ஆனால் இப்போது தேர்தல் விஞ்ஞாபனம் என்பது தேர்தல் முடிந்த கையோடு கைவிடப் படுவதாகிவிட்டது.

தேர்தலில் வெற்றி பெற்றால் அவ்வளவு தான் தேர்தல் விஞ்ஞாபனம் மறந்து போய் விடும்.

ஆக, இன்றிருக்கக்கூடிய சூழ்நிலையில் தேர்தல் விஞ்ஞாபனம் ஒரு சம்பிரதாயம் என்பதைக் கடந்து மக்களை ஏமாற்றுவதற்கான எழுத்துமூல ஆவணம் என்று கூறுமளவுக்கு வந்துவிட்டது.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு கிழக்கு இணைந்த... என்ற சொற்பதத்தை வலியுறுத்தியுள்ளது.

வடக்கு கிழக்கு இணைந்த தீர்வு என்றால், வடக்கு கிழக்கு இணையாத தீர்வை ஏற்க முடியாது.

ஆனால் வடக்கு கிழக்கு இணைப்பு இல்லாத இடைக்கால வரைபை அமுல்படுத்துவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மிகவும் உறுதியாக உள்ளது.

சமஷ்டி இல்லை, வடக்கு கிழக்கு இணைப்பு இல்லை, ஒற்றையாட்சி என்பதே தீர்வில் முன்னிற்கும் விடயம் எனப் பலவற்றை தமிழ் இனம் சார்ந்த புத்திஜீவிகள் எடுத்துரைத்த போதிலும் இடைக்கால வரைபில் எல்லாம் இருக்கிறது. அதில் சமஷ்டி இருக்கிறது, சமஷ்டி என்ற சொற்பதம் மட்டுமே இல்லை என்று கூறுமளவுக்கு கூட்டமைப்பின் தலைமை இருக்கிறது.

வடக்கு கிழக்கு இணைப்பு என்கிற விடயத்தை இடைக்கால வரைபின் இணைப்பில் மட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கருத்தாக முன்வைத்துள்ளதைத் தவிர,

இணைக்கப்படாத வடக்கு கிழக்கு என்ற தீர்வுக்கு உடன்படவும் கூட்டமைப்பு தயாராக இருக்கிறது.

இவ்வாறு வடக்கு கிழக்கு இணைக்கப் படாத தீர்வை ஏற்றுக் கொள்வதற்கு வலிந்து கட்டிக் கொண்டிருக்கும் கூட்டமைப்பு,

தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு கிழக்கு இணைந்த தீர்வு என முன்மொழிகிறது எனில், இதைவிட்ட திருகுதாளம் வேறு எதுவுமில்லை எனலாம்.

எதுஎவ்வாறாயினும் தமிழ் மக்கள் நிதானமாகச் சிந்திக்காதவரை எங்களை ஏமாற்றுவதையே தங்களின் சிறந்த விளம்பரமாக அரசியல்வாதிகள் கருதுவர் என்பதைப் புரிந்து கொண்டால் மட்டும் அதுபோதும்.

# நாட்டில் மீண்டும் குடும்ப ஆட்சி ஏற்பட மக்கள் ஒருபோதும் இடமளிக்கமாட்டார்கள்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

தேசிய அரசியல் நோக்கமும் நாட்டின் எதிர்கால திட்டமும், கொள்கைகளும் அற்ற கட்சி ஒன்றினை ஸ்தாபித்து தனியொரு குடும்பத்தினால் மீண்டும் அரசாங்கத்தை அமைக்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்நாட்டு மக்கள் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் கட்டுநாயக்க பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மைதத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2015 ஜனவரி 08ஆம் திகதி அப்போதிருந்த அரசாங்கம் மக்களால் நிராகரிக்கப்பட்டமைக்கு அரசாங்கத்தில் காணப்பட்ட ஊழல், மோசடிகள் மற்றும் குடும்ப ஆட்சி என்பனவே காரணமாகும் எனத் தெரிவித்த ஜனாதிபதி, மீண்டும் குடும்ப ஆட்சியையும ஏகாதிபத்தியத்தையும் ஏறபடுத்த நாட்டில் இடமில்லை எனத் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அமைச்சர்களும் மக்கள் பிரதிநிதிகளும் பின்னால் இருக்க 2013ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து ஒவ்வொரு புதன்கிழமையும் காலையில் ஒரே மேசையில் அமர்ந்து ராஜபக்ஷ குடும்பத்தினர் அரசாங்கத்தின் கொள்கைகள், பொருளாதார முகாமைததுவம் மற்றும் உயர் பதவிகளுக்கான நியமனாங்கள் பற்றிய தீர்மானங்கள் போன்றவற்றை மேற்கொண்ட விதத்தை ஜனாதிபதி இதன்போது நினைவுகூர்ந்தார்.

வரலாற்றில் பாரிய நிதி மோசடியான மத்திய வங்கி பிணைமுறி ஊழல் தொடர்பாக கடந்த அரசாங்கத்தின் அங்கத்தவர்கள் அல்லது தற்போதைய அரசாங்கத்தின் உறுப்பினர்கள் எவருக்கும் தப்பிப் பிழைக்க எந்தவொரு வாய்ப்பும் இல்லை என இதன்போது வலியுறுத்திய ஜனாதிபதி, ஊழல், மோசடி, குடும்ப ஆட்சி மற்றும் ஏகாதிபத்தியத்தை நாட்டில் இருந்து இல்லா தொழிக்க மக்கள் அணி திரண்டு உள்ளனர் என தெரிவித்தார்.

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக ஜனாதிபதியின் தலைமையில் நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மக்கள் சந்திப்பு தொடரின் மற்றுமொரு வெற்றிகரமான மக்கள் சந்திப்பு நேற்று கட்டுநாயக்க டாவிந்ர மென்டிஸ் விளையாட்டரங்கில் பெருந்திரளான மக்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, பிரதி அமைச்சர் லசந்த அழகியவன்ன, முன்னாள் அமைச்சர் பிலிக்ஸ் பெரேரா, பண்டு பண்டாரநாயக்க, ருவன் ரணதுங்க வீரகுமார திசாநாயக்க, அனுருத்த பொல்கம்பொல, சோமவீர சந்ரசிறி, ஏ.எஸ்.பி.லியனகே, லலித் வணிகரத்ன, புதிய சிஹல உறுமய கட்சியின் தலைவர் சனத் மனமேந்ர உள்ளிட்ட குழுவினர் இந்த மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டனர். (ம)

### சுதந்திர தினத்தை முன்னிட்டு

## புதிய ஆயிரம் ரூபாய் நாணயத்தாள் வெளியீடு

(கொழும்பு)

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு, புதிய ஆயிரம் ரூபாய் நாணயத்தாள் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் மங்கள சமரவீர தமது அதிகாரபூர்வ டுவிட்டர் தளத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமியிடமிருந்து குறித்த ஆயிரம் ரூபாய் நாணயத்தாளை நிதி அமைச்சர் நேற்று பெற்றுக் கொண்டுள்ளார்.

நான்கு மதங்களின் வழிபாட்டுத் தலங்களும் இந்த ஆயிரம் ரூபாய் நாணயத்தாளில் பொறிக்கப்பட்டுள்ளன.

அததுடன், நான்கு இனாங்களையும் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களின் உருவங்களும் புதிய ஆயிரம் ரூபாய் நாணயத்தாளில் பொறிக்கப் பட்டுள்ளன. (ம)

## தேர்தலுக்காக சகல ஊழியர்களுக்கும் சம்பளத்துடன் கூடிய விடுமுறை!

### தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

நாட்டில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக எழுத்து மூலம் விடுமுறை கோரும் சகல ஊழியர்களுக்கும், சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழாங்கப்படுவது அவசியம் என்று தேர்தல் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

இதற்கு முன்னர் நடைபெற்றுள்ள தேர்தலின் போது தொழில் புரியும் ஊழியர்களுக்கு தேர்தலில் வாக்களிப்பதற்காக தமக்குரிய உரிமை மீறப்பட்டு இருப்பதாக, தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய விடுமுறை தொடர்பாக தேர்தல் செயலகம் வெளியிட்ட சுற்றுநிரூப அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளதோடு, வாக்கெடுப்பின் போது வாக்களிக்க உரிமையுள்ள தமது ஊழியர்களுக்கு சட்டத்தின் கீழ் உரிமையுள்ள விடுமுறையை தனியார் மற்றும் அரசாங்க தொழிற்றுறையிலுள்ள ஊழியருக்கு வழங்குமாறு கேட்டுகொண்டுள்ளார். (ம)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் சந்திப்பு இன்று யாழில்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் சந்திப்பொன்று, இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

'நிரந்தரத் தீர்வு நோக்கிய பயணத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் வகிபாகம்' என்ற தொனிப்பொருளிலான குறித்த சந்திப்பு, யாழ். இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர சபை வேட்பாளர் ம.அருள்முருகன் தலைமையில் இடம்பெறவுள்ள இச்சந்திப்பில், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோ அமைப்பின் செயலாளர் ந.சிறீகாந்தா, வடக்கு மாகாண அவைத் தலைவர் ச.வ.கே. சிவஞானம் மற்றும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இம்மானுவல் ஆர்னோல்ட் உள்ளிட்ட பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

## 70ஆவது சுதந்திர தின வைபவம் 118 நாடுகளில் நடைபெறவுள்ளது

(கொழும்பு)

இலங்கையின் 70 ஆவது தேசிய சுதந்திர தின வைபவத்தை 118 நாடுகளில் நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக, வெளிநாடுகளிலுள்ள இலங்கை தூதரக அலுவலகங்கள் மற்றும் நாடுகளிலுள்ள இலங்கையர்களின் அமைப்புக்கள் மூலம் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மேற்படி நிகழ்வில் பிரதான அதிதியாகப் பிரித்தானியாவின் எட்வர்ட் இளவரசர் பங்கேற்கவுள்ளதாக உள் நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

# தாம் சார்ந்த தேவைகளை தாமே நிறைவு செய்யும் கூட்டத்தை யாராலும் கட்டுப்படுத்த முடியாது

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தாம் சார்ந்த தேவைகளை தாமே நிறைவு செய்யும் மக்கள் கூட்டத்தை யாரும் கட்டுப்படுத்தவோ அழுத்தங்களை பிரயோகிக்கவோ முடியாது என தெரிவித்த வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சதா [illegible] சமூகம் அடக்கப்பட்டவர்களாக ஒடுக்கப்பட்டவர்களாக ஒடுங்கி வாழவேண்டிய இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்படுவார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

அல்வாய் இளைஞர் விளையாட்டுக்கழகத்தினால் முன்னெடுக்கப்படும் [illegible] விழாவும் சான்றோரைக் கௌரவித்தலும் நிகழ்வு நேற்று நாவலடிச்சந்தி, அல்வாய் வடக்கு அல்வாயில் இடம்பெற்றது. அதில கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து ஆற்றிய உரையில் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு மக்கட் கூட்டம் எப்போது தாம் சார்ந்த மக்களின் தேவைகளையும் அவர்களுக்கான வழிகாட்டலகளையும் ஒற்றுமையுடன் எதுவித தடாங்கல்களுமின்றி முன்னெடுத்துச்செல்ல முனைகின்றதோ அப்போதே அந்த மக்கட் கூட்டம் அல்லது குறிபபிட்ட கிராமம் தனித்துவ நிலைக்கு மேம்பட்டுள்ளது என்பது பொருளாகும் எனத் தெரிவித்தார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய சாதனை படைத்த மகாஜனக் கல்லூரி அணி



இறுதிப்போட்டிக்கு யாழ். மாவட்ட அணிகளே நுழைந்து தங்களுக்குள் யார் சம்பியன் என பலம் பார்த்து தேசிய சம்பியன் ஆகும் சம்பவம் முதன்முறையாக நடந்துள்ளது.

இலங்கை பாடசாலைகள் கால்ப்பந்தாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்தச் சுற்றுப்போட்டிகள் கம்பளையில் கடந்த 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

அரையிறுதியாட்டங்களில், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி, குருநாகல் மலியதேவா பாலிக மகா வித்தியாலய அணியை வென்றது. இரண்டாவது அரையிறுதியில் பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை அணி, கவிஸிகமுவ மத்திய கல்லூரியை வென்றது.

இறுதிப்போட்டியில் யாழ். மாவட்ட அணிகளாக மகாஜனாக் கல்லூரி மற்றும் பண்டத்தரிப்பு பெண்கள் அணிகள் மோதின. முதற்பாதியாட்டத்தின் 7 ஆவது நிமிடத்தில் பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலையின் என்.நிரோசிகா முதலாவது கோலைப் பதிவு செய்தார். தொடர்ந்து 11 ஆவது நிமிடத்தில் பண்டத்தரிப்பு அணியின் எஸ்.வலண்டீனா மற்றுமொரு கோலைப் பதிவு செய்தார். முதற்பாதியாட்டம் முடிவடையும் போது, பண்டத்தரிப்பு அணி, 2:0 என்ற கோல்கள் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

அதுவரையிலும் ஆட்டத்தில் சோர்வைக் காட்டியிருந்த மகாஜனா அணி, இரண்டாவது பாதியாட்டத்தில் வீறுகொண்டெழுந்தது. இரண்டாவது பாதியாட்டத்தின் 14 ஆவது நிமிடத்தில் மகாஜனாவின், பாஸ்கரன் சானு முதலாவது கோலைப் பதிவு செய்தார்.

அதே உற்சாகத்துடன் 20 ஆவது நிமிடத்தில் மேலுமொரு கோலை அடித்து போட்டியை சமநிலையாக்கினார். போட்டி முடிவடையும் போது, இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தன.

வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நடத்தப்பட்டது. அதில் மகாஜனா அணி, 3:2 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

இந்தச் சுற்றுத்தொடரின் சிறந்த வீராங்கனையாக மகாஜனாக் கல்லூரியின் பாஸ்கரன் சானு, சிறந்த கோல் காப்பாளராக பண்டத்தரிப்பு அணியின் மரியநாயகம் லக்ஸிகா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க-26)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# நல்லூர்ப் பிரதேச செயலக பூப்பந்தாட்ட போட்டி முடிவுகள்



நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இதில் ஒரு அங்கமான ஆண்களுக்கான பூப்பந்தாட்ட போட்டிகள் கடந்த சனிக்கிழமை அரியாலை சரஸ்வதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

குழுநிலைப் போட்டிகளின் இறுதிப் போட்டியில் அரியாலை ஐக்கிய கழகத்தினை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் அரியாலை ஐக்கிய அணி, 3:0 என்ற செற்கள் அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

ஆண்களுக்கான இரட்டையர் இறுதிப்போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் குகதாஸ் - கனிஸ்ரன் ஜோடியை எதிர்த்து நீராவியடி நண்பர்கள் விளையாட்டுக்கழக சியான் எட்மன் ஜோசப் ஜோடி மோதியது. இதில், அரியாலை ஜோடி, 21:07, 21:17 என்ற புள்ளிகள் அடிப்படையில், இரண்டு நேர் செற்களையும் வென்று சம்பியனாகியது.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் அரியாலை ஐக்கிய அணியின் காண்டீபனை எதிர்த்து நீராவியடி நண்பர்கள் அணியின் சியான் மோதினார். இதில் காண்டீபன், 21:10, 21:08 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகியது. (க-26)

# 912 புள்ளிகளை குவித்து சாதனை லாராவை முந்தினார் விராட் ஹோலி

டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் தர வரிசையில் 912 புள்ளிகளை குவித்துள்ள இந்திய அணித்தலைவர் விராட் ஹோலி, லாராவை பின்னுக்கு தள்ளி 26ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளார்.

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் இடையிலான கடைசி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 63 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த போட்டியின் முடிவில் ஒட்டுமொத்த டெஸ்ட் போட்டியில் துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில் அதிக புள்ளி குவித்தவர்களின் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) வெளியிட்டுள்ளது.

இதன்படி, 2017ஆம் ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்ட விராட் ஹோலி மற்றொரு மைல்கல்லை எட்டி இருக்கிறார்.

கடைசி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி கேப்டன் விராட்ஹோலி முதல் இன்னிங்ஸில் 54 ஓட்டங்களும், 2ஆவது இன்னிங்சில் 41 ஓட்டங்களும் எடுத்தார். இதன் மூலம் அவருக்கு கூடுதலாக 12 புள்ளிகள் கிடைத்தன. இதன் மூலம் 900 புள்ளியில் இருந்த விராட் ஹோலி 912 புள்ளிகளை எட்டி உள்ளார். இதனால் ஒட்டுமொத்த டெஸ்ட் போட்டியில் 900 புள்ளிகளுக்கு மேல் குவித்த துடுப்பாட்ட வீரர்கள் பட்டியலில் 31ஆவது இடத்தில் இருந்த விராட்கோலி 26ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

விராட் ஹோலி மேற்கிந்தியத்தீவுகள் ஜாம்பவான் லாரா (911 புள்ளிகள்), இங்கிலாந்தின் கெவின் பீட்டர்சன் (909 புள்ளிகள்), தென்னாபிரிக்காவின் ஹசிம் அம்லா (907 புள்ளிகள்), மேற்கிந்தியத்தீவுகள் சந்தர்பால் (901 புள்ளிகள்), அஸ்திரேலியாவின் மைக்கேல் கிளார்க் (900 புள்ளிகள்) ஆகியோரை ஒரேநேரத்தில் பின்னுக்கு தள்ளி இந்த முன்னேற்றத்தை கண்டுள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் தலைவர் கவாஸ்கர் 916 புள்ளிகளுடன் 23-வது இடத்தில் இருக்கிறார். அவரை முந்த விராட்கோலிக்கு இன்னும் 5 புள்ளிகள் மட்டுமே தேவையாகும். ஜூன் மாதம் நடைபெறும் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒரே ஒரு டெஸ்ட் மற்றும் ஒகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதத்தில் நடைபெறும் இங்கிலாந்துக்கு எதிரான 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் போட்டி தொடரில் விராட்ஹோலி, கவாஸ்கரை முந்த வாய்ப்பு உள்ளது.

டெஸ்ட் துடுபாட்ட ஒட்டு மொத்த தரவரிசையில் அவுஸ்திரேலிய சகாப்தம் டான் பிராட்மேன் 961 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

அதற்கு அடுத்த இடத்தில் அவுஸ்திரேலிய அணியின் கேப்டன் ஸ்டீவன் சுமித் (947 புள்ளிகள்) உள்ளார்.

இங்கிலாந்து முன்னாள் வீரர் லெனார்ட் ஹட்டன் (945 புள்ளிகள்) 3ஆவது இடத்திலும், அவுஸ்திரேலிய முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங் (942 புள்ளிகள்) 4ஆவது இடத்திலும், இங்கிலாந்து முன்னாள் வீரர் ஜாக் ஹோப்ஸ் (942 புள்ளிகள்) 5ஆவது இடத்திலும் உள்ளனர். (க)

# விராட் ஹோலி களத்தில் அமைதியை கடைப்பிடிக்க வேண்டும்

## முன்னாள் மேற்கிந்தியத்தீவுகள் வீரர் அறிவுரை

விராட்ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி, தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் போட்டி தொடரில் இந்திய அணி 1:2 என்ற கணக்கில் தொடரை இழந்தது.

இதனை அடுத்து இரு அணிகள் இடையே 6 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டி மற்றும் 3 ஆட்டங்கள் கொண்ட 20 ஓவர் போட்டி தொடர் நடைபெறுகிறது. இந்தியா-தென்ஆப்பிரிக்கா அணிகள் இடையிலான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி டர்பனில் நாளை முதலாம் திகதி நடைபெறும்.

இதற்கிடையில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் மைக்கேல் ஹோல்டிங் அளித்த ஒரு பேட்டியில் தெரிவிக்கையில்,

மேற்கிந்தியத்தீவுகள் முன்னாள் அணித் தலைவர் விவியன் ரிச்சர்ட்சுக்கும், விராட் ஹோலிக்கும் விசித்திரமான ஒற்றுமை இருப் பதை உணர முடிகிறது. தற் போது விராட்ஹோலி இளம் அணித்தலைவர். சிறந்த அணித்தலைவராக உருவெடுப்பது எப்படி? என்பதை அவர் கற்றும், புரிந்தும் வருகிறார். அவர் ஆடுகளத்தில் அதிக ஆர்வத்துடன், கூடுதலான உணர்வு பூர்வமாகவும் சில நேரங்களில் செயல்படுகிறார். அதிக உணர்ச்சிபூர்வமாக செயல்படுவது எதிரணியினருக்கு மட்டுமின்றி, சில சமயங்களில் தமது அணியினருக்கும் அச்சுறுத்தலாக அமையும். விராட்ஹோலியை துடுப்பாட்டம் மட்டுமின்றி அணித் தலைவர் பதவியிலும் விவியன் ரிச்சர்ட்சுடன் ஒப்பிட விரும்புகிறேன்.

விவியன் போல் தான் விராட் ஹோலியும் இளம் வயதில் அணித்தலைவர் பொறுப்பை ஏற்று இருக்கிறார்.

விவியனும் இதேபோல் அணித்தலைவர் பொறுப்பில் வளர்ச்சி கண்டார். முதலில் ஆக்ரோஷமாக செயல்பட்ட அவர் அணித் தலைவர் பொறுப்பில் வருகையில் சற்று அமைதியை கடைப்பிடித்தார்.

அணியும் அமைதியாக செயல்பட்டு வெற்றிகளை ஈட்டியது. விவியனை போல் அமைதியாக செயல்படுவதை கற்றுக்கொள்ளும் நிலையில் விராட் ஹோலி இருக்கிறார்.

நவீன கிரிக்கெட் காலத்தில் அதிக போட்டிகளை வீரர்கள் எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. எனவே குறிப்பாக பந்து வீச்சாளர்களுக்கு சற்று ஓய்வு கொடுக்க வேண்டியது அவசியமானதாகும். அதேநேரத்தில் அணியின் வீரர்களை அடிக்கடி மாற்றம் செய்வது நல்லது கிடையாது. சிறந்த டெஸ்ட் அணியாக விளங்க வேண்டும் என்றால் வீரர்களை அதிகம் மாற்றம் செய்யாமல் அவர்கள் தங்களை நிலை நிறுத்தி கொள்ள போதிய வாய்ப்பு அளிக்க வேண்டும். நன்றாக விளையாடாவிட்டால் அடுத்த ஆட்டத்தில் அணியில் இடம் கிடைக்காது என்ற அச்ச உணர்வு வீரர்கள் மத்தியில் ஏற்பட்டால் அது அவர்களின் சிறப்பான செயல்பாட்டைபாதிக்கும். (க)

# 2018 ஐ.பி.எல். ஏலம் விளக்கினார் இலங்கை ஜாம்பவான்

இலங்கை அணியின் ஜாம்பவான்களில் ஒருவரான மஹேல ஜெயவர்த்தனே, ஐ.பி.எல் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு பயிற்சியாளராக உள்ளார்.

இவர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணி, கடந்த முறை கிண்ணத்தை கைப்பற்றி சாதித்தது.

இந்நிலையில் இந்தாண்டும் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு பயிற்சியாளராக இருக்கும் ஜெயவர்த்தனே, [illegible] யளித்துள்ளார்.

அதில், இந்த ஏலத்தில் நாங்கள் திட்டமிட்டது போல் சரியாக செயல்பட்டதாக நினைக்கிறேன். ஏலத்தின் ஆரம்பத்தில் பரபரப்பு அதிகமாக இருந்தது.

நிறைய பேர் ஒவ்வொரு வீரருக்கும் ஏலம் கேட்க ஆரம்பித்தார்கள். எங்களிடம் அந்த அளவு பணம் இல்லை என்பதால் நாங்கள் பின்வாங்கிவிட்டோம். கண்டிப்பாக கருணால் பாண்டி[illegible]ர்டையும் [illegible]மாக இருந்தோம்.

அதன்படி எடுத்துவிட்டோம். மேலும் எங்கள் அணி வீரர்கள் பலரை மற்ற அணியினர் வாங்கினார்கள். அதனால் மாற்று வீரர்களை பார்க்க வேண்டும் என்பது எங்களுக்கு புரிந்திருந்தது.

ஒட்டுமொத்தமாக எங்கள் திட்டம் பலித்தது என்றே நினைக்கிறேன். ஒரு சில வீரர்களை தவறவிட்டோம். ஆனால் ஏலத்தில் அதை தவிர்க்க முடியாது என்று தெரிவித்துள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிணைமுறி தொடர்பில்...

நடைபெறவுள்ளது.

பிணைமுறி மோசடி தொடர்பில் விவாதத்தை எதிர்வரும் 6ஆம் திகதி நடத்துமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் மகிந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணை அறிக்கை ஆகியவற்றின் மீது உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னர் விவாதம் நடத்துவது தொடர்பில் முற்பகல் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின தலைவர்களுக்கும் சபாநாயகர் கரு ஜயசூரியவிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை இணக்கப்பாடின்றி நிறைவடைந்தது.

இந்நிலையில் பிரதமருடனான சந்திப்பின பின்னர் நாடாளுமன்றம் கூடும் திகதி தொடர்பில் அறிவிப்பதாக சபாநாயகர் தெரிவித்திருந்தார்.

சர்ச்சைக்குரிய பிணைமுறி மோசடி மற்றும் பாரிய நிதி மோசடிகள் அறிக்கை ஆகியவற்றின் மீதான விவாதத்தை தேர்தலுக்கு முன்னர் நடத்துமாறு ஜனாதிபதி சவால் விடுத்திருந்தார்.

ஜனாதிபதியின் சவாலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு சபாநாயகருக்குப் பணித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

எனினும் தேர்தலுக்கு முன்னரான இரண்டு தினங்கள் நாட்டில் அமைதியான சூழ்நிலை காணப்படவேண்டும். தேர்தலை நடத்துவதற்கு பாதகங்கள் ஏற்பட்டால் தேர்தலை மூன்று வாரங்கள் பிற்போடவேண்டிய நிலைமை ஏற்படலாம். இந்த விடயம் தொடர்பில் பேசித் தீர்மானிக்கவேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் சர்ச்சைக்குரிய பிணைமுறி மோசடி மற்றும் பாரிய நிதி மோசடிகள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைகள் தொடர்பான விவாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கட்சித் தலைவர்களின் கோரிக்கைகளின் பிரகாரமே பிரதமர் விவாதத்திற்கான அழைப்பை சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் விடுத்துள்ளார். (ம)

## 27 வயதுடைய...

தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் திகதி சிறீராமபுரம் எனும் இடத்தில் ஒரே ஊரைச் சேர்ந்த இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட சண்டையில் சிக்கன் திருச்செல்வம் கொலை செய்யப்பட்டிருந்தார். இக்குற்றச்சாட்டிற்காக சிறீராமபுரம் பிரதேசத்தை சேர்ந்த மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிவான் நீதிமன்றிலே முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது குறித்த மூவரும் ஆரம்ப கட்ட விசாரணைகளுக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன் 2017ஆம் ஆண்டு 10ஆம் மாதம் 02ஆம் திகதி சட்டமா அதிபரினால் வவுனியா மேல் நீதிமன்றத்திலே இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு விசாரணைகள் மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முன்னிலையில் இடம்பெற்று வந்ததுடன் வழக்கு தொடுநர் தரப்பில் வழக்கினை அரச சட்டவாதி ஐ.எம்.எம்.பாகிம் நெறிப்படுத்தியிருந்தார்.

மேலும் இந்த வழக்குடன் தொடர்புடைய இரண்டாம் மற்றும் மூன்றாம் எதிரிகளுக்கு எதிரான குற்றம் நிரூபிக்கப்படாததால் அவ்விருவரும் வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டதுடன் முதலாம் எதிரி தாக்கியதால்தான் மரணம் சம்பவித்துள்ளது என்பது நிரூபிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே வழக்கில் முதலாம் எதிரிக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரனால் மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.(ம-250)

## சிறுமியை வன்...

கத்து வீட்டு சிறுமியை வீட்டுக்குள் அழைத்து பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார். இதனை அரசசார்பற்ற நிறுவனத்தில் பணிபுரியும் ஒருவர் கண்டு அந்த பிள்ளையிடம் விசாரணை மேற்கொண்டு தாயாரிடம் பிள்ளையை ஒப்படைத்துள்ளார். இதனை அடுத்து தாயார் வைத்தியசாலைக்கு அழைத்து சென்ற நிலையில் பொலிஸார் வைத்தியசாலையில் வைத்து பிள்ளையினுடைய வாக்கு மூலத்தை பதிவு செய்து துஷ்பிரயோகத்தை மேற்கொண்ட நபரை கைது செய்து வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில் கடந்த 2017ஆம் ஆண்டு 10ம் மாதம் 24ஆம் திகதி அன்று சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குற்றப்பகிர்வு பத்திரம் வவுனியா மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வந்தது. இந்நிலையில் சாட்சிகள் நெறிப்படுத்தப்பட்டு 29ஆம் திகதி 01ஆம் மாதம் 2018ஆம் ஆண்டு தீர்ப்பிற்கு திகதியிடப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் வழக்கு விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரனால் எதிரி குற்றவாளியாக கண்டுகொள்ளப்பட்டு எதிரிக்கு எதிராக முதலாவது குற்றச்சாட்டுக்கு இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபா அபராதமும் அதை செலுத்த தவறின் 01மாத சாதாரண சிறைத்தண்டனையும் 02ஆம் மற்றும் 03ம் குற்றச்சாட்டுகளுக்கு 10 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபா அபராதமும் அதை செலுத்த தவறின் 01 மாத சாதாரண சிறைத்தண்டனையும் பாதிக்கப்பட்ட நபருக்கு 2 இலட்சம் ரூபா நஷ்ட ஈடும் அதை செலுத்த தவறின் 01 வருட கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. இத்தண்டனைகள் ஏககாலத்தில் அனுபவிக்கப்படும் எனவும் கூறப்பட்டது. (ம-250)

## வயற்காணி ஒன்றி...

வட்டுக்கோட்டை பகுதியில் உள்ள வயற்காணியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து பெருமளவான பழைய மற்றும் புதிய ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி செல்லும் வீதியில் யாழ்ப்பாண தொழில்நுட்ப கல்லூரிக்கு அண்மையில் உள்ள வயற் காணியொன்றில் இருந்தே குறித் த பெருமளவான ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இவ் ஆயுதங்கள் மீட்கப்பட்டமை தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

நேற்றைய தினம் மாலை குறித்த வயற்காணியில் உள்ள கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்த போது கிணற்று நீரானது வற்றவே கிணற்றுக்குள் இருந்த ஆயுதங்கள் வெளியே தென்பட்டுள்ளன.

இதனையடுத்து குறித்த ஆயுதங்கள் காணப்படுவது தொடர்பாக குறித்த வயற்காணிக்குரியவர் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தார். இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் பொலிஸ் விஷேட அதிரடிப் படையினருக்கும் தகவல் வழங்கியிருந்தனர்.

இதன்படி பொலிஸார் மற்றும் விஷேட அதிரடிப் படையினர் இணைந்து கிணற்றுக்குள் காணப்பட்ட ஆயுதங்களை மீட்டிருந்தனர். இவற்றில் ரி.56 துப்பாக்கிக்கு பயன்படும் ரவைகள் ஒரு தொகையும் அவற்றோடு 60 மில்லி மீற்றர் நீளமான மோட்டார் குண்டுகள் சிலவும், ஆர்.பி.ஜீ குண்டு ஒன்றும் மற்றும் ரொக்கட் லோன்ஜர் வகை சார்ந்த குண்டுகளும் மீட்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட ஆயுதங்களில் பல பழையதாக காணப்பட்டதாகவும் சில ஆயுதங்கள் புதிய ஆயுதங்கள் போல காணப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டிருந்தனர். மேலும் மீட்கப்பட்ட ஆயுதங்கள் தொடர்பாகவும், அவை எக் காலத்திற்குரியது, யாரால் பயன்படுத்தப்பட்டது என்பது தொடர்பான விரிவான விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் வட்டுக் கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.(ம-4)

## தடக்கி விழுந்ததில்...

போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

சண்டிலிப்பாய் ஸ்ரீநாகபூசணி அம்மன் கோவிலடியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சுப்பையா தவராசா (வயது 65) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த நபர் கடந்த 28 ஆம் திகதி விசுவமடுவில் இடம்பெற்ற மாட்டு வண்டி சவாரிக்காக மாட்டு வண்டிகளை பாரவூர்தியில் ஏற்றிக்கொண்டு சென்றுள்ளார். அன்றைய தினம் இரவு 9 மணிக்கு மீண்டும் வீடு திரும்பியுள்ளார்.

பாரவூர்தியில் இருந்து இறங்கும் போது அவர் அணிந்திருந்த சாரம் தடக்கி அவர் கீழே விழுந்துள்ளார். இதனால் முள்ளந்தண்டில் பலமாக அடிபட்டுள்ளது. உடனடியாக சங்கானை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அன்று இரவு 11 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த குறித்த நபர் சிகிச்சை பலனின்றி நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். இந்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம்பிறேம்குமார்மேற்கொண்டிருந்தார். (ம-9)

## றட்ண ஜீவன் கூல்...

இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய பேரவையானது மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் தனது தேரதல் பரப்புரைக் கூட்டத்தை நடத்தியதாக இலங்கை தமிழரசு கட்சியின் வேட்பாளர் சோமசுந்தரம் சுகிர்தன் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை செய்திருந்தார்.

இவ் வழக்கின் மீதான விசாரணையானது கடந்த 11ஆம் திகதி மல்லாகம் நீதிமன்றில் இடம்பெற்ற போது, தேர்தல்கள் தொடர்பான செயற்பாட்டிற்கு ஆலயங்களைப் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது என ஆலயத்தின் பிரதம குருவிற்கு மன்றானது அறிவுறுத்தியிருந்தது.

எனினும் தேர்தல்கள் ஆணைக்குழு வின் உறுப்பினர்களில் ஒருவரான றட்ண ஜீவன் கூல், குறித்த சம்பவம் தொடர்பாக காங்கேசன் துறைப் பொலிஸார் முறையாக விசாரணை நடத்தவில்லை என வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்திருந்தார்.

இதனையடுத்து இது தொடர்பாக காங்கேசன் துறைப் பொலிஸார் மீண்டும மேலதிக விசாரணை அறிக்கை ஒன்றை மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர்.

இதற்கு ஏற்ப, நேற்றைய தினம் குறித்த வழக்கானது மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நேற்றைய வழக்கு வீசாரணையின் போது, ஆலய குருக்களின் சார்பாக சட்டத்தரணி சுகாஸ், அகில இலங்கை தமிழ் காங்கிரஸின வேட்பாளரான சட்டத்தரணி மணிவண்ணன் சார்பாக, சட்டத்தரணி கே.குருபரன், சட்டத்தரணி காண்டீபன் உள்ளிட்ட பன்னிரண்டு சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர்.

மேலும் காங்கேசன்துறை பொலிஸாரும் முறைப்பாட்டாளரான தமிழரசு கட்சியின் வேட்பாளர் சுகிர்தன் ஆகியோரும் முன்னிலையாகியிருந்தனர். எனினும் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் றட்ண ஜீவன் கூல் முன்னிலையாகவில்லை.

இதன்போது காங்கேசன்துறை பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பாக தாம் தெளிவாக விசாரணை நடத்தியதாகவும், இவர்கள் உள்ளூராட்சி தேர்தல்கள் சட்டத்தை மீறும் வகையில் செயற்படவில்லை எனவும் மன்றுக்கு தெளிவுபடுத்தியதுடன் அது தொடர்பான புகைப்படங்களையும் மன்றுக்குச் சமர்ப்பித்தனர்.

இதனை தொடர்ந்து முறைப்பாட்டாளரான சுகிர்தனிடம் இந்த வழக்கை தொடர்ந்து நடத்திச் செல்ல ஆதாரங்கள் உள்ளதா என நீதிபதி வினாவிய போது, அவ்வாறான மேலதிக ஆதாரங்கள் இல்லை என அவர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி குருபரன் தமது தரப்பு வாதங்களை முன்வைத்திருந்தார். குறிப்பாக தனது வாதத்தில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரான றட்ண ஜீவன் கூல் தமிழரசுக் கட்சிக்கு ஆதரவாகச் செயற்படுவதாகவும் நீதிமன்றம, பொலிஸார், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய மூவருக்கும் இடையில் தொடர்பு (அவர் எழுதிய பத்திரிகை கட்டுரைகளில் Big deal என்ற சொற்பதத்தைப் பயனபடுத்தியுள்ளார்) இருப்பது போன்றும் பத்திரிகைகளுக்கு கட்டுரை எழுதியுள்ளதாகவும் மன்றுக்குச் சுட்டிக்காட்டினார்.

மேலும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களை குற்றவாளிகள் போன்று சித்தரிப்பதை தவிர, வழக்கினைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஏதுவான வேறு என்ன காரணங்கள் இருக்கின்றது எனவும் மன்றில் கேள்வி எழுப்பியதுடன் இவ் வழக்கை தொடர்ந்து நடத்தாது முடிவுறுத்த வேண்டும் எனவும் மன்றில் வாதிட்டார்.

நாட்டின் முக்கிய இரண்டு நிறுவனங்களான நீதித்துறையும் தேர்தல்கள் திணைக்களமும் தொடர்பாக மக்கள் நம்பிக்கை வைத்துள்ள நிலையில், அது பாதிக்க அனுமதிக்க கூடாது எனவும் குறித்த கட்சி சார்பாகவும் இன்னொரு கட்சிக்கு எதிராகவும் றட்ண ஜீவன் கூல் தேர்தல் ஆணைக்குழுவிற்குள் இருந்து கொண்டு செயற்படுவது மக்களுடைய நம்பிக்கையை மீறுகின்றது எனவும் இது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு விசாரிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டதுடன்,

தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குள் இருந்து கொண்டு குறித்த நபர் தமிழரசுக் கட்சி சார்பாக செயற்படுவது குறித்து நீதிமன்றில் வழக்கு உள்ள போது, வழக்கினை திசை திருப்பும் வகையில் கருத்து வெளியிட்டமை ஆகியன தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு விசாரணை நடத்த வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் ஏற்கெனவே தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவுக்கு கடிதம் அனுப்பியதை சுட்டிக்காட்டி அது தொடர்பாக மன்றும் கட்டளையொன்றை பிறப்பிக்க வேண்டும் எனவும் சட்டத்தரணி குருபரன் மன்றைக் கேட்டுக்கொண்டார்.

இவற்றைத் தொடர்ந்து குறித்த வழக்கில் இருந்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களை விடுவித்ததுடன் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரான றட்ண ஜீவன் கூலின் செயற்பாடுகள் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவானது முறையான விசாரணை ஒன்றை நடத்த வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்ற நதிவான் ஏ.யூட்சன் பணிப்புரை பிறப்பித்த தோடு, வழக்கேட்டின் பிரதியையும் தனது கட்டளையின் பிரதியையும் தேர்தல் ஆணைக்குழு தலைவருக்கு அனுப்பி வைக்குமாறும் மன்றின் பதிவாளருக்கு உத்தரவிட்டுள்ளார். (ம-4)

## எனக்கு எதிராக...

கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்தோடு யுத்தத்தின் போது பிரித்தானியா மற்றும் அமெரிக்காவின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ளாத காரணத்தினாலேயே குறித்த நாடுகள் தமக்கு எதிராக செயற்படுவதாக மகிந்த மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கின் 89 சதவீதமான வாக்குகள் கடந்த ஜனாதிபதி தேர்தலில் தமக்கு எதிராக பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிட்ட மகிந்த, கிழக்கு மக்கள் தற்போது தன்னை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்றும் வடக்கு மக்களும் தன்னை ஏற்றுக்கொள்வார்கள் என நம்புவதாகவும் இதன்போது குறிப்பிட்டார். (ம)

## 150 ஆண்டுகளுக்கு...

யில் யாகசாலை அமைத்து ஹோமங்கள் செய்வது மிகவும் பலன் தரும். நூறு மடங்கு புண்ணியங்களையும் பலனையும் தரும் ஹோமமானது இந்த வேளையில் செய்யப்படும் போது ஆயிரம் மடங்கு புண்ணியமும் பலனும் கிடைக்கும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Techno World

(வெலிங்டன் சந்தி, லிங்கன் கூல்பார் அருகாமை - யாழ்.)

A/L தொழில்நுட்ப பிரிவில் பாடசாலை மட்டத்தில் முதலிடத்தை பெற்ற எமது மாணவர்கள்

**2019 A/L**

| No | Name | Rank | School | Marks | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | Bio-Tec | SFT | தெரிவுப் பாடம் |
| 01 | லாவன்யா | 1st | J/KHC | 90 | 85 | 90 |
| 02 | சந்துயா | 1st | J/MHC | 88 | 86 | 83 |

## A/L தொழில்நுட்ப பிரிவு - 2020

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

புதிய கல்வியாண்டு - A/L 2020 விஷேட பிரிவு - A/L 2019

Day Class - A/L 2018 Paper Class - A/L 2018

### தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (SFT)

**சக்தி** (யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) **ராகவன்** (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)

**முருகநிரோஜன்** (யா/வயாவிளான் ம. கல்லூரி) **மதுசுதன்** (யாழ்.பல்கலைக்கழகம்)

### பொறியியல் தொழில்நுட்பவியல் (E-TEC)

**அருண்குமார்** (யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)

**ஜெகநாதன்** (விரிவுரையாளர், தொழில்நுட்பக்கல்லூரி)

**நஜிதரன்** (பல்கலைக்கழகக் கல்லூரி)

**சிவஜன்** (தொழில்நுட்பக்கல்லூரி)

### உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் (Bio - Tec)

**திருக்குமரன்** (நெல்லியடி மகா வித்தியாலயம்)

**கலைதீபன்** (நெல்லியடி மகா வித்தியாலயம்)

**பொன் சிவகுமார்**

### (ICT)

**லவன்** (உதவி விரிவுரையாளர், கணனி விஞ்ஞானம்)

**உமாகாந்தன்** BIT (யா/மத்திய கல்லூரி)

(C-1447)

**ஆரம்பம் - 03.02.2018 காலை 8.00 மணி**

**077 017 5346**



## INFORMATION TECHNOLOGY Park

Jaffna, Srilanka
Under the purview of the
Ministry of Telecommunication & Digital Infrastructure

ITP

OFF.NO : 021 222 3641 FAX.NO : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது

**Diploma Cources** (06 Month)

*Dip.in Microsoft Office*
*Dip.in Desktop publishing*
*Dip.in Information Technology*
*Dip.in Computer Programming*

**Online Cource** (06 Month)

*Dip.in PC Application & Office Management*

**Workshop** (20 Hours)

*Internet & e-mail*
*Webpage Designing & Development*

**Languages** (06 Month)

*VB.net PHP*
*C Sharp Java*

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்

CENTRE FOR INFORMATION TECHNOLOGY

வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 09.02.2018
வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 10.02.2018

(C-1436)

127,K.k.S.Road, Jaffna, Srilanka - Executive Officer -


## தேர்தலை.

தேர்தல் விதிமுறைகளுக்கு எதிராக இடம்பெற்றிருந்த சம்பவங்கள் தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணி தாக்கல் செய்திருந்த மனுவொன்றை ஆராய்ந்ததன் பின்னரே இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இந்த மனு மீதான தீர்ப்பை வழங்கும் வரை எல்பிட்டிய பிரதேச சபைக்கான தேர்தலை நடத்தக் கூடாது என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம)


# ICT

தரம் 10,11
**A/L ICT**
**Group Class & Personal Class**
(தமிழ், ஆங்கில மொழிமூலம்)

**Teacher :**
Mr.S. Umakanthan (BIT)
J/Jaffna Central College
**T.P No :** 0778888604
(C-1447)



# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

**Excellent Teachers' Panel & Individual Attention**

### Diploma / Advanced Diploma in English

ஓரளவு ஆங்கில அறிவு உள்ளவர்கள் மேலும் அறிவை விருத்தி செய்ய சிறப்பாக அமைக்கப்பட்ட கற்கைநெறி. ஆங்கில அறிவு, இலக்கணம், இலக்கியம் என விரிவாகக் கற்பிக்கப்படும்.

### Spoken English With Grammar - Quick Learning Course

குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் புலமை பெற விரும்புபவர்களுக்கு இது பொருத்தமானதாகும். பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், ஆங்கிலம் கற்க விரும்புவோருக்கு உகந்தது.

### Young Learners English (YLE)

வயதெல்லை 7 - 15 உட்பட்ட மாணவர்களுக்கான சர்வதேசப் பரீட்சை உடன் University of Cambridge இனால் சான்றிதழ் வழங்கப்படும்.

### IELTS Life Skills A1 Exam - Sponsor / Settlement Visa

மூலம் **UK** செல்பவர்களுக்கு British High Commission னால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை

### IELTS (Academic / General ) Student Migration Visa

மூலம் செல்பவர்களது Approved Centre for Registering Online (ORS) Candidates

### Spoken Sinhala

சிங்களத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்கு உகந்த முறையில் கற்பிக்கப்படும். மாணவர்கள், தொழில் புரிவோர், சிங்களம் கற்க விரும்புவோர் அனைவருக்கும்

### Diploma in Sinhala

ஓரளவு சிங்கள அறிவு உள்ளவர்கள் மேலும் சிங்கள அறிவை விருத்தி செய்ய, சிங்களத்தினை மேலும் விரிவாகக் கற்றுக் கொள்ள விரும்புவோர்களின் தெரிவு.

## வகுப்புக்கள் ஆரம்பம்

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**Jaffna Branch :** (C-1438)

No.15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna.

**Tel : 021 222 4550 | 076 3166 060**

Harikanan, Jaffna.


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org